- இவர் 2022 ஆம் ஆண்டு மே 05 ஆம் தேதியன்று வாட்டிகன் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்கா எனும் தேவாலயத்தில் போப் பிரான்சிஸ் அவர்களால் புனிதராக அறிவிக்கப்பட உள்ளார்.
- திருச்சபையில் அங்கம் வகிக்காத, புனிதர் பட்டம் பெறும் முதல் இந்தியப் பாமரர் என்றப் பெருமையை இவர் பெறுவார்.
- இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த முதல் புனிதத் துறவி ஆவார்.
- வாட்டிகன் நகரானது இத்தாலியில் அமைந்துள்ள, முழுவதும் ரோம் நகரால் சூழப் பட்ட ரோமன் கத்தோலிக்கத் தேவாலயத்தின் தலைமையகமாகும்.




## வினிஷா உமாசங்கர்




- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 26வது காலநிலைப் பங்குதாரர்கள் மாநாட்டில் “சூரிய சக்தியினால் இயங்கும் ஒரு சலவை வண்டி” பற்றிய தனது கருத்தாக்கத்திற்காக வேண்டி 2021 ஆம் ஆண்டிற்கான புவி தினக் கட்டமைப்பின் எழுச்சி நாயகியாக இவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
- இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 வயதான சிறுமி ஆவார்.
- இந்த நடமாடும் சலவை வண்டியானது சூரிய மின்தகடுகளின் மூலம் நீராவி சலவைப் பெட்டியை இயக்குகிறது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னிச்சையான அமைப்பான இந்திய தேசியப் புத்தாக்க அறக்கட்டளையினால் உருவாக்கப்பட்ட டாக்டர் A.P.J. அப்துல் கலாம் IGNITE என்ற விருதினையும் இவர் பெற்றுள்ளார்.

## அங்கன்வாடி ஊழியர் பணிகளில் 25% இட ஒதுக்கீடு

- அங்கன்வாடி ஊழியர்கள், சிறு ஊழியர்கள் மற்றும் உதவியாளர் பணிகளில் 25% வரை விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என தமிழக அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
- ஏற்கனவே, மதிய உணவுத் திட்டப் பணியாளர் பதவிகளில் விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு நடவடிக்கையானது செயல் முறையில் உள்ளது.
- அங்கன்வாடிகளுக்கு ஊழியர்களை நியமிக்கும் விதிகளானது 2012 ஆம் ஆண்டில் இயற்றப் பட்டது.

## V. திருப்புகழ்



- சென்னை நகர்ப்புறப் பகுதியில் வெள்ள அபாயத்தைத் தணித்தல் மற்றும் மேலாண்மை தொடர்பான ஆலோசனைக் குழுவைத் தலைமையேற்று நடத்தச் செய்வதற்காக ஓய்வு பெற்ற இந்திய குடிமைப்பணி அதிகாரி V. திருப்புகழ் என்பவரை தி.மு.க அரசு நியமித்துள்ளது.
- இவர் குஜராத் மாநிலத்தில் முதலமைச்சர் நரேந்திர மோடியின் கீழும், பிரதமரான பிறகு தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திலும் பணி புரிந்துள்ளார்.
- திருப்புகழ் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் பணி புரிந்த போது 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் சென்னை மற்றும் காஞ்சிபுரம் வந்த ஒரு குழுவிற்குத் தலைமை தாங்கினார்.
- 'தமிழ்நாடு வெள்ளங்கள் – கற்றப் பாடங்களும் & சிறந்த நடைமுறைகளும்' என்ற ஒரு தலைப்பில் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் இவரது குழு மேற்கொண்ட கண்டுபிடிப்புகள் இடம் பெற்றன.

## ஒவ்வொரு மாநில அரசு ஊழியர்களுக்கும் மின்னஞ்சல் முகவரி

- தமிழக மாநில அரசானது, மாநில அரசு ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப் பட்ட மின்னஞ்சல் முகவரியானது வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் முன்னதாக அறிவித்திருந்தது.
- இந்த அறிவிப்பினைச் செயல்படுத்துவதற்காக தமிழக மாநில அரசு, அதற்குரிய ஒரு அரசாணையை வெளியிட்டுள்ளது.
- இந்த அரசாணையின்படி, தமிழக அரசின் ஒவ்வொரு ஊழியர்களுக்கும் 3

ஆண்டுகளுக்குள் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியானது வழங்கப்படும்.

## வலிமை சிமெண்ட்

- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'வலிமை' சிமென்ட் என்ற தயாரிப்பினை வெளியிட்டார்.
- இது தமிழ்நாடு சிமென்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் ஒரு புதிய சிமென்ட் தயாரிப்பு ஆகும்.
- வலிமை சிமென்ட் தயாரிப்பின் இரண்டு ரகங்களின் விலையானது ₹350 மற்றும் ₹365 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## இந்தியாவின் முதலாவது உணவுப் பாதுகாப்பு அருங்காட்சியகம் - தஞ்சாவூர்

- சமீபத்திய உணவுப் பாதுகாப்பு அருங்காட்சியகத்தில் பின்வருபவை காட்சிப் படுத்தப் பட்டு இருக்கின்றன.
    - நாடோடி வேட்டைக்காரக் குழுக்களில் இருந்து ஓர் இடத்தில் குடியேறி விவசாய நடைமுறைகளுக்கு மாறிய மனிதனின் பரிணாமம்,
    - பண்டையக் கால உலகளாவிய மற்றும் உள்நாட்டுத் தானியச் சேமிப்பு முறைகள்,
    - அந்தச் சேமிப்பில் உள்ள சவால்கள் மற்றும்
    - இந்திய உணவுக் கழகத்தின் மூலம் வேளாண் நிலத்தில் இருந்து நமது தட்டினை வந்தடையும் வரை உணவு தானியங்களின் பயணம்.
- இந்த அருங்காட்சியகமானது இந்திய உணவுக் கழகம் மற்றும் பெங்களூருவின் விஸ்வேஸ்வரய்யா தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகங்களால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் நகர் தான் இந்திய உணவுக் கழகத்தின் பிறப்பிடமாகும்.
- இந்திய உணவுக் கழகத்தின் முதல் அலுவலகமானது 1965 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று தஞ்சாவூரில் திறக்கப்பட்டது.

## விளைநிலங்களில் நிலையான பசுமைப் பரவலுக்கானத் திட்டம்



- வேளாண் நிலங்களில் நீடித்தப் பசுமைப் பரவலுக்கான தமிழ்நாடு இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த இயக்கத்தின் கீழ் 73 லட்சத்துக்கும் அதிகமான உயர் மதிப்பு மரக்கன்றுகள் வழங்கப் பட்டன.
- தேக்கு, செம்மரம், அக்கேசியா, வேங்கை, சந்தனம், மஞ்சள் கடம்பு, கருங்காலி மரம் (ரோஸ்வுட்), மலைவேம்பு, மஹாகோனி, கருமருது மற்றும் பூவரசு ஆகிய உயர் மதிப்புள்ள மர வகைகள் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளது.

## நிதித் தொழில்நுட்ப ஆளுமைக் குழு




- ❖ உலகளாவிய நிதித் தொழில்நுட்ப மையமாக மாறும் முயற்சியில் தமிழக அரசு நிதித் தொழில்நுட்ப ஆளுமைக் குழுவை அமைத்துள்ளது.
- ❖ இக்குழுவானது தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் அமைக்கப் பட்டது.
- ❖ இந்தக் குழுவை அமைப்பதற்கான ஒரு அறிவிப்பானது, முதலீட்டு மாநாட்டில் நிதித் தொழில்நுட்பக் கொள்கையை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னணியில் வெளியிடப் பட்டது.
- ❖ 2021 ஆம் ஆண்டு நவம்பர் 23 அன்று கோவை நகரில் முதலீட்டு மாநாடானது நடத்தப் பட்டது.
- ❖ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
- ❖ சென்னையில் ஏற்கெனவே நிதித் தொழில்நுட்ப நகரை அமைக்கும் பணிகளை அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

## சமீபத்திய அறிவிப்புகள்

- ❖ உடல் உறுப்புகளைத் தானமாக பெறுவதற்கும், வழங்குவதற்கும் ஆதார் கட்டாயம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- ❖ கணவன் அல்லது பெற்றோரிடமிருந்துப் பிரிந்த பெண்கள் குடும்பமாக அங்கீகரிக்கப் படுவார்கள் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- ❖ இதன் மூலம், அவர்கள் இனி ரேஷன் கார்டுகளைப் பெறலாம்.
- ❖ இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவசப் பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான வருமான வரம்பு ரூ.72 ஆயிரத்தில் இருந்து ரூ.1 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## முதல்வரின் முகவரி

- முதலமைச்சரின் குறைதீர்ப்பு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு புதிய துறை உருவாக்கப் பட்டு அரசாணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
- இது முதல்வரின் முகவரி என்று அழைக்கப்படுகிறது.
- மேலும் இந்தத் துறைக்குப் புதிய துறை சிறப்பு அலுவலராக ஷில்பா பிரபாகர் சதீஷ் நியமனம் செய்யப் பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.



## நம்மைக் காக்கும் 48

- சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முதல் 48 மணி நேர அவசர சிகிச்சைக்கான செலவை தமிழக அரசு மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- ``நம்மைக் காக்கும் 48 - அனைவருக்கும் முதல் 48 மணி நேர அவசர உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான இலவச மருத்துவ உதவித் திட்டம்" என்ற திட்டம் இதற்காக செயல் படுத்தப் படும்.

## முன்களப் பணியாளர்களாக மயானப் பணியாளர்கள்

- மயானப் பணியாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவிக்கப்படுகிறார்கள் என்று தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- கொரோனா காலத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திப் பணியாற்றி வரும் மயானப் பணியாளர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையிலும், அவர்களுக்குச் சிறப்பு சலுகைகள் கிடைக்கும் வகையிலும் இந்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## விளையாட்டு இடஒதுக்கீட்டில் சிலம்பம்

- தமிழக அரசானது அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3% விளையாட்டு இடஒதுக்கீட்டு ஆட்சேர்ப்புக்குச் சேர்க்கப்படும் விளையாட்டுகளில் ஒன்றாக ‘சிலம்பம்’ விளையாட்டையும் சேர்த்துள்ளது.
- புதிய கேலோ இந்தியா திட்டத்தின் 'Promotion of Inclusiveness through Sports’ என்ற கூற்றின் கீழும் சிலம்பம் விளையாட்டைச் சேர்க்க இந்திய அரசும் ஒப்புதல் அளித்துள்ளது.

## அரசு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை

- கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப் படும் என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்து வாடும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளில் முதல் முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.
- இதற்கு அடுத்தபடியாக முதல் தலைமுறைப் பட்டதாரிகள், தமிழக அரசுப்பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்களுக்கு 2வது மற்றும் 3வது முன்னுரிமை அளிக்கப் படும் என கூறப்பட்டுள்ளது.
- இதில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

## கணவனால் கைவிடப்பட்ட விதவைகள் மற்றும் பெண்கள் – அங்கன்வாடி

- அங்கன்வாடிகளில் கணவனால் கைவிடப்பட்ட விதவைகள் மற்றும் பெண்களுக்கு அங்கன்வாடிகளில் 25 சதவீத வேலைகளை இடஒதுக்கீடு செய்யும் அரசு ஆணை ஒன்று நிறைவேற்றப் பட்டது.
- அங்கன்வாடிகளுக்குப் பணியாளர்களை நியமிப்பதற்கான விதிகள் 2012 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இந்த விதிகளைப் பூர்த்தி செய்யும் விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ஏற்கனவே, மதிய உணவுத் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமை வழக்கம் நடைமுறையில் உள்ளது.

## வலைதளங்கள் மற்றும் மென்பொருட்கள்

- தகவல் தொழில்நுட்பத் துறையால் உருவாக்கப்பட்ட 'இ-முன்னேற்றம்' மற்றும் 'ஐடி நண்பன்' (தகவல் தொழில்நுட்ப நண்பன்) என்ற இரண்டு வலைதளங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.
- 'கீழடி விசைப்பலகை' மற்றும் 'தமிழி - தமிழிணைய ஒருங்குறி மாற்றி' ஆகிய இரண்டு தமிழ் கணினி மென்பொருளையும் அவர் வெளியிட்டார்.
- இ-முன்னேற்றம் என்ற தளமானது தமிழ்நாட்டின் அனைத்து முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய உதவும் ஒரு தளமாகும்.
- இரண்டாவதாக, ஐடி நண்பன் என்ற தளமானது மாநில அரசு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட உதவும்.

## தடயவியல் டிஎன்ஏ தேடல் கருவி

- இந்த வசதியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, மாநிலக் காவல்துறைத் தலைவரிடம் ஒப்படைத்தார்.

- தமிழ்நாடு தனது சொந்த 'தடயவியல் டிஎன்ஏ விவரத் தேடல் கருவி' என்ற கருவியை நாட்டிலேயேப் பெற்ற முதல் மாநிலமாக மாறியுள்ளது.
- இது மாநிலத் தடய அறிவியல் துறையால் உருவாக்கப்பட்டது.
- மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் சுயவிவரங்களை சேகரிக்க; காணாமல் போன குழந்தைகளை அடையாளம் காண; பிற மாநிலங்களைச் சேர்ந்த குற்றவாளிகள், அடையாளம் தெரியாத உடல்கள், வரலாற்றுத் தாள்களின் விவரங்கள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளில் இறக்கும் நபர்களைக் கண்காணிக்க இந்தக் கருவி பயனுள்ளதாக இருக்கும்.
- டிஎன்ஏ என்பது மாநிலத் தடய அறிவியல் துறையின் 14 பிரிவுகளில் ஒன்றாகும்.

## குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை 2021

- தமிழகத்தின் முதல் குழந்தைகளுக்கான கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- இந்தியாவில் இம்மாதிரியான ஒரு கொள்கையினை வெளியிடும் முதலாவது மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- இது அவர்களுக்கு ஊட்டச்சத்து, கல்வி, சுகாதாரம் உட்பட பாதுகாப்பான சூழல் மற்றும் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குழந்தைகளின் வளர்ந்து வரும் தேவைகள், முடிவுகளின் மதிப்பீடு, முடிவுகள், இந்தக் கொள்கையின் வரம்பிற்குள் வரும் பல்வேறு அம்சங்களின் குறிகாட்டிகள் ஆகிய அம்சங்களின் அடிப்படையில் போதுமான ஆதாரங்களை ஒதுக்கீடு செய்ய, குழந்தை வரவு செலவுத் திட்டத்தை தமிழ்நாடு தொடர்ந்து செயல்படுத்தும்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் அடையப்பட்ட விளைவுகளையும் தாக்கத்தையும் மதிப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் இந்தக் கொள்கை திருத்தப் படும்.

## வேதா நிலையம்



- மறைந்த தமிழக முதல்வர் J. ஜெயலலிதா அவர்களின் இல்லத்தினை நினைவிடமாக மாற்ற வேண்டும் என்று அறிவித்த முந்தைய அ.தி.மு.க அரசின் உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.
- இந்த இல்லம் 'வேதா நிலையம்' என்று அழைக்கப்படுகிறது.
- இந்த இல்லமானது சென்னையிலுள்ள போயஸ் கார்டன் பகுதியில் அமைந்துள்ளது.

### ஆங்கிலத்தில் காவல் கோட்டம்

- இது 2011-ஆம் ஆண்டிற்கான சிறந்த புதினத்திற்கான (நாவல்) சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஒரு புதினமாகும்.
- ஒரு எழுத்தாளரும் மதுரை நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினருமான சு. வெங்கடேசன் இதை இயற்றியவர் ஆவார்.
- மதுரையைப் பற்றிய இந்தப் புதினம், தற்போது ஆங்கிலத்தில் 'தி பாஸ்டியன்' (The Bastion) என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.
- பட்டு எம்.பூபதி இந்த நாவலை மொழிபெயர்த்திருக்கிறார்.
- மொழிபெயர்க்கப்பட்ட இந்தப் பதிப்பினை சாகித்திய அகாடமி நிறுவனமே வெளியிட்டிருக்கிறது.




## தேசியச் செய்திகள்

### போக்குவரத்து அமைப்பு – விருதுகள்

- சிறந்தப் பொதுப் போக்குவரத்து அமைப்பிற்கான விருதினை சூரத் நகரம் பெற்று உள்ளது.

- சிறந்த மெட்ரோ பயணிகள் சேவைக்கான விருதினை டெல்லி பெற்றது.
- மிகவும் நிலையானப் போக்குவரத்து அமைப்பிற்கான விருதினை கொச்சி பெற்றது.
- நாக்பூரின் பல்முனையில் ஒருங்கிணைக்கப்பட்ட மெட்ரோ இரயில் சேவையானது நாட்டில் சிறந்ததாக அறிவிக்கப்பட்டது.
- இந்த விருதானது நகர இயங்குதிறன் (போக்குவரத்து) இந்தியா என்ற மாநாட்டின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அவர்களால் வழங்கப்பட்டது.




## சமுத்திரயான்




- மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், மனிதர்களால் மேற்கொள்ளப்படும் சமுத்திரயான் எனப்படுகின்ற இந்தியாவின் முதலாவது பெருங்கடல் ஆய்வுத்

திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார்.

- இதன் மூலம் ரஷ்யா, அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான் மற்றும் சீனா போன்ற தனித்துவ மிக்க நாடுகளுடன் இந்தியா இணைந்துள்ளது.
- கடலுக்கடியில் இயங்கும் இந்த வாகனமானது கடல்சார்ந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள உதவும்.

## மாநில ஆற்றல் செயல்திறன் குறியீடு 2020

- கர்நாடக மாநிலமானது மாநில ஆற்றல் செயல்திறன் குறியீட்டில் (2020) முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இதில் ராஜஸ்தான் மாநிலம் 2வது இடத்திலும் ஹரியானா 3வது இடத்திலும் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இத்தரவரிசையில் ராஜஸ்தான் மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது ஆற்றல் செயல்திறன் வாரியம் மற்றும் ஆற்றல் செயல்திறன் பொருளாதாரத்திற்கான கூட்டணி ஆகியவற்றால் வெளியிடப்படுகிறது.
- 2020 ஆம் ஆண்டு மாநில ஆற்றல் செயல்திறன் குறியீடானது ஆற்றல் அமைச்சகத்தின் கீழ் வெளியிடப்பட்டது.


GOOD SHOW

| STATES AND SCORE | |
|---|---|
| Karnataka | 70 |
| Rajasthan | 61 |
| Haryana | 59.5 |
| Punjab | 58 |
| Maharashtra | 57.5 |
| Kerala | 53 |
| Tamil Nadu | 51.5 |
| Andhra Pradesh | 50.5 |
| Uttar Pradesh | 35.5 |
| Gujarat | 34 |

## மம்கின் திட்டம்



- அசோக் லே லாண்ட் என்ற நிறுவனமானது ஜம்மு & காஷ்மீர் நிர்வாகத்தின் 'மம்கின் திட்டத்தின்' கீழ் இளைஞர்களுக்கான தனது உறுதிப்பாட்டினை வலுப்படுத்தியது.
- 'Dost' எனப்படும் 500 சிறிய வணிக வாகனங்களை வழங்குவதன் மூலம் இது உறுதி செய்யப் பட்டது.
- அந்த நிறுவனத்திற்கும் ஜம்மு & காஷ்மீர் நிர்வாகத்திற்கும் இடையிலான இந்த ஒரு கூட்டிணைவானது இளைஞர்களிடையே தொழில்முனைவினை ஊக்குவிக்கும்.

## MK 54 கடற்கணை

- பாதுகாப்புத் துறை அமைச்சகமானது அமெரிக்காவுடன் இணைந்து 423 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- தனது P-81 கடல் கண்காணிப்பு விமானத்தில் நீர்மூழ்கிக்கு எதிரான செயல்திறனை இணைப்பதற்கு வேண்டி MK 54 ரக கடற்கணையை வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தம் இதுவாகும்.
- ரெய்தியோன் ஒருங்கிணைந்த பாதுகாப்பு அமைப்பினால் இணைந்து உருவாக்கப் பட்ட MK 54 கடற்கணையானது ஆழமற்ற நீர்நிலைகளிலும் இயங்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.




## ஐ.என்.எஸ். துஷில்

- P1135-6 ரகத்தைச் சேர்ந்த 7வது இந்தியக் கடற்படைப் போர்க் கப்பலான துஷில், ரஷ்யாவின் கலினின் கிராட் என்னுமிடத்தில் உள்ள யான்டர் கப்பல் கட்டும் தளத்தில் வெளியிடப்பட்டது.
- சமஸ்கிருத வார்த்தையில் பாதுகாக்கும் கவசம் என்ற பொருளைக் கொண்ட வகையில் 'துஷில்' என்று இந்தக் கப்பலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தக் கப்பலானது உக்ரைனில் தயாரிக்கப்பட்ட வாயுச் சுழலிகளுடன் இணைந்து இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கப்பலில் நீருக்கடியிலான இரைச்சல் குறிகள் மற்றும் குறைவான ரேடார்களின்

அடிப்படையில் ரேடாரில் புலப்படாமல் மறைய வல்ல தொழில்நுட்பமும் பொருத்தப் பட்டுள்ளது.

## 3 உறுப்பினர்கள் கொண்ட நிபுணர் குழு – பெகாசூஸ் உளவு மென்பொருள்

- பெகாசூஸ் உளவு மென்பொருளைப் பயன்படுத்தி பத்திரிக்கையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் போன்றோரை இலக்காக வைத்து கண்காணித்ததினைக் குறித்து ஆய்வு செய்வதற்காக 3 உறுப்பினர்கள் கொண்ட ஒரு நிபுணர் குழுவை அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- அந்தக் குற்றச்சாட்டுகளை முழுமையாக ஆராய்ந்து ஒரு அறிக்கையை உச்ச நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்குமாறு நிபுணர் குழுவிடம் உச்ச நீதிமன்றம் கூறி உள்ளது.
- உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி R.V. ரவீந்திரன் தலைமையிலான இந்தக் குழுவின் மற்ற இரு உறுப்பினர்கள் 1976 ஆம் ஆண்டின் பணித் தொகுப்பைச் சேர்ந்த இந்தியக் காவல் பணி அதிகாரி அசோக் ஜோசி மற்றும் டாக்டர் சந்தீப் ஓபராய் ஆகியோர் ஆவர்.

## கதி சக்தி விரைவு இரயில்

- இந்திய இரயில்வே நிர்வாகமானது கதிசக்தி விரைவு இரயில் எனப்படும் ஒரு சிறப்பு இரயிலினை (01684/01683) அறிமுகம் செய்துள்ளது.
- தீபாவளி மற்றும் சாத் பூஜை போன்ற பண்டிகை காலங்களின் போது ஏற்படும் கூடுதல் நெருக்கடிகளைக் குறைப்பதற்காக வேண்டி இந்த இரயில் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.
- இந்த இரயிலானது டெல்லி ஆனந்த் விஹார் முனையம் மற்றும் பாட்னா முனையம் ஆகியவற்றுக்கு இடையே இயங்கும்.
- இந்தச் சிறப்பு இரயிலானது 3 அடுக்கு இருக்கைகளைக் கொண்ட, சாதாரணக் கட்டணம் கொண்ட (எகானமி) குளிர்சாதன வசதியிலான 20 புதிய பெட்டிகளைக் கொண்டு உள்ளது.




## சென்னை – மைசூர் – சென்னை சதாப்தி விரைவு இரயில்

- இந்த இரயிலானது ஒருங்கிணைந்த மேலாண்மை அமைப்பு சான்றிதழைப் பெற்ற தெற்கு இரயில்வே மண்டலத்தின் முதல் இரயிலாகும்.
- இந்த சான்றிதழைப் பெற்ற முதல் சதாப்தி மற்றும் இந்திய இரயில்வேயின் 2வது விரைவு இரயில் என்ற வகையிலும் இது மாறியுள்ளது.
- இந்தச் சான்றிதழானது சுற்றுச்சூழலுக்கு ஏதுவான வகையில் வளங்களைச் சிறப்பான முறையில் பயன்படுத்துதல் மற்றும் சிறந்த மேலாண்மைக்காக வழங்கப்படுகிறது.

## வேளாண் தொழிலாளர்களின் தற்கொலை

- தேசியக் குற்றவியல் ஆவணக் காப்பகமானது வேளாண் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் தற்கொலை நிகழ்வுகள் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் தற்கொலையினால் உயிரிழந்த வேளாண் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது முந்தைய ஆண்டை விட 18% அதிகமாகும்.
- 2020 ஆம் ஆண்டில் மொத்தமாக வேளாண் துறையைச் சேர்ந்த 10,677 பேர் தற்கொலையினால் உயிரிழந்தனர்.
- பிரதான் மந்திரி கிசான் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் வருவாய் உதவியின் கீழ் நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள், பெருந்தொற்றுக் காலத்தின்போது அதிகளவு துயரங்களை எதிர்கொண்டிருக்கலாம்.

- வேளாண் தொழிலாளர்களின் தற்கொலை எண்ணிக்கையில் 15% அதிகரிப்பு உட்பட, 4006 தற்கொலைகள் என்ற ஒரு எண்ணிக்கையுடன் மகாராஷ்டிரா மாநிலம் மிக மோசமான நிலையில் உள்ளது.
- மோசமான நிலையிலுள்ள பிற மாநிலங்களாவன: கர்நாடகா (2016), ஆந்திரப் பிரதேசம் (899) மற்றும் மத்தியப் பிரதேசம் (735) ஆகும்.
- கர்நாடக மாநிலத்தில் 2020 ஆம் ஆண்டில் வேளாண் தொழிலாளர்களின் தற்கொலை எண்ணிக்கையானது 43% உயர்ந்துள்ளது.




## நுரையீரல் அழற்சி 13 – வலு இணைவுத் தடுப்பு மருந்து

- நுரையீரல் அழற்சி 13 – வலு இணைவுத் தடுப்பு மருந்தினை நாடு முழுவதும் அளிக்கும் வகையிலான ஒரு விரிவுபடுத்தும் நடவடிக்கையை அரசு தொடங்கி உள்ளது.
- இது ‘ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்’ என்ற நிகழ்வின் ஓர் அங்கமான அனைவருக்கும் நோய்த் தடுப்பினை வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
- PCV (Pneumococcal 13 - valent Conjugate Vaccine) என்ற தடுப்பு மருந்தானது அனைவருக்கும் வழங்கப் படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- PVC 13 நுரையீரல் அழற்சி நோயை உண்டாக்கும் 13 வகை பாக்டீரியாக்களுக்கு எதிராக பாதுகாப்பு அளிக்கும்.
- நிமோகாக்கஸ் என்ற பாக்டீரியாவினால் ஏற்படும் நுரையீரல் அழற்சி நோயானது குழந்தைகளில் தீவிரமான நுரையீரல் அழற்சி நோயினை ஏற்படுத்துவதற்கான மிகவும் பொதுவான காரணமாகும்.
- இந்தியா மற்றும் உலக அளவில் நிகழும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பிற்கு நுரையீரல் அழற்சி நோயே முதன்மைக் காரணமாக உள்ளது.
- இந்தியாவில் 16% குழந்தைகளின் உயிரிழப்பிற்கு நுரையீரல் அழற்சி நோய் காரணமாக உள்ளது.

## உலக நன்மதிப்புத் தரவரிசை 2021

- இந்தியாவின் 4 கல்வி நிறுவனங்கள் டைம்ஸ் உயர்கல்வி இதழ் வெளியிடும் உலக

நன்மதிப்புத் தரவரிசையில் (2021) இடம்பெற்றுள்ளன.

- டைம்ஸ் உயர்கல்வி இதழின் இந்த வருடாந்திரத் தரவரிசையானது உலகம் முழுவதும் உள்ள முன்னணிக் கல்வி நிறுவனங்களுடைய வாக்குகளின் அடிப்படையில் 200 முன்னணிப் பல்கலைக் கழங்களைப் பட்டியலிடுகிறது.
- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது இந்தியக் கல்வி நிறுவனங்களின் முதன்மையான முதல் 100 இடங்களில் (91/100) இடம் பெற்றுள்ளது.
- மற்ற 3 இந்தியக் கல்வி நிறுவனங்களாவன: மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆகியன.
- அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகமானது 2021 ஆம் ஆண்டிற்கான தர வரிசையில் முதலிடத்தில் உள்ளது.
- அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆகியவை முறையே 2வது மற்றும் 3வது இடங்களைப் பெற்றுள்ளன.

## MGNREGA – நிதிப் பற்றாக்குறை




- 21 மாநிலங்களில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் என்ற திட்டத்தின் நிதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- 2021 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி பாதியிலேயே தீர்ந்து விட்டது.
- அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தொடர் தொடங்கும் வரை கூடுதல் பட்ஜெட் ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப் படாது.
- இதில் நிதிப் பற்றாக்குறை என்பது மாநிலங்கள் தங்களது சொந்த நிதியைப் பயன்படுத்தாத வரையில் MGNREGA தொழிலாளர்களுக்காக அளிக்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் செலவுகள் ஆகியவற்றில் ஏற்படும் தாமதமாகும்.

## இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்

- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் மற்றும் மாலத்தீவின் தலைமை தணிக்கையாளர் ஆகியோர் பொது நிதியின் மீதான தணிக்கைச் செயல்முறையை வலுப்படுத்துவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

- இந்த இரு நாடுகளுக்கும் இடையில் பொதுத் தணிக்கை துறையின் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

***தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் குறித்த தகவல்கள்***

- இந்திய அரசியலமைப்பானது பகுதி V என்பதின் கீழ் உள்ள Vவது அத்தியாயத்தில் இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் பதவியானது ஒரு தனித்தச் சுதந்திரத்தைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.
- இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் பதவியானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 148 முதல் 151வது விதிகள் வரைக் கூறப்பட்டுள்ளது.

## வீர் கதா திட்டம்

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது வீர் கதா என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- வீர தீர விருதுகள் வென்றவர்கள் குறித்து அறிக்கைகளைத் தயார் செய்து அதன் அடிப்படையிலான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு பள்ளிகளிடம் கோரப்பட்டுள்ளது.
- பள்ளி மாணாக்கர்களிடையே வீர தீர விருதுகள் வென்றவர்களின் தியாகங்கள் மற்றும் துணிச்சலான செயல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை வீர் கதா திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பருவநிலைச் சமவிகித கண்காணிப்பு அமைப்பு

- பருவநிலைச் சமவிகித கண்காணிப்பு அமைப்பு என்பது சமீபத்தில் தொடங்கி வைக்கப் பட்ட ஓர் இணையவழி முகப்புப் பக்கமாகும்.
- இந்தியாவினுடைய பருவநிலைச் சமவிகிதக் கண்காணிப்பு அமைப்பானது, உலகம் முழுவதுமான பருவநிலை நடவடிக்கை, உமிழ்வு நிலையிலுள்ள ஏற்றத் தாழ்வுகள், ஆற்றல் மற்றும் வள நுகர்வு மற்றும் பல நாடுகளின் தற்போதையப் பருவநிலை கொள்கைகளை மதிப்பிடும்.
- இது முக்கியப் பிரச்சினைகள் குறித்த ஒரு தீவிர விவாதத்தினை ஏற்படுத்தி அதில் அனைத்து நாடுகளின் நிபுணர்களையும் ஈடுபடச் செய்யும்.

## NCLAT தலைவர் – அசோக் பூசன்

- மத்திய அரசானது உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அசோக் பூசன் அவர்களை தேசிய நிறுவனச் சட்ட மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் புதிய தலைவராக நியமித்துள்ளது.
- இவர் கேரள உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஆவார்.
- இந்தத் தீர்ப்பாயமானது 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 410 ஆவது பிரிவின் கீழ் அரசினால் உருவாக்கப் பட்டது.



## நவம்பர் 01

- இந்தியாவில் ஆந்திரப் பிரதேசம், ஹரியானா, சத்தீஸ்கர், கேரளா, கர்நாடகா, பஞ்சாப் & மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்கள் மற்றும் லட்சத்தீவு, புதுச்சேரி ஆகிய இரு ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவை 2021 ஆம் ஆண்டு நவம்பர் 01 அன்று அவற்றின் ஸ்தாபன தினத்தைக் கொண்டாடுகின்றன.
- கர்நாடகத்தில் இத்தினமானது 'இராஜ்யோத்சவ்' எனக் கொண்டாடப்படுகிறது.
- முன்பாக தமிழ்நாடு மாநிலமும் நவம்பர் 01 அன்று அதன் ஸ்தாபன தினத்தைக் கொண்டாடி வந்தது.
- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 30 அன்று தமிழகத்தின் ஆளும் கட்சியான தி.மு.க. ஜூலை 18 ஆம் தேதியானது தமிழ்நாட்டின் ஸ்தாபன தினமாக கொண்டாடப்படும் என அறிவித்தது.



## டெய்ரி சஹாகர் திட்டம்

- மத்தியக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் டெய்ரி சஹாகர் என்ற திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் ஒட்டு மொத்த குறிக்கோள்களானது,
  - விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் மற்றும்
  - ஆத்ம நிர்பர் பாரத் ஆகும்.
- 5000 கோடி ரூபாய் முதலீட்டுடன் "கூட்டுறவு முதல் செழிப்பு வரை" (from cooperation to prosperity) என்ற ஒரு நோக்கத்தைச் செயலாக்குவதற்காக வேண்டி இந்த டெய்ரி சஹாகர் திட்டமானது அமல்படுத்தப்படும்.

## பகல் துல் நீர்மின் நிலையம்




- மத்திய ஆற்றல், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்துறை அமைச்சர் R.K. சிங் பகல் துல் நீர்மின் நிலையத்தின் மருசுதார் நதி வழியில் அமைந்த ஒரு கிளை மின் நிலையத்தினைத் திறந்து வைத்தார்.
- இந்த நிலையமானது ஜம்மு & காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- பகல் துல் நீர்மின் நிலையமானது (Pakal Dul Hydro Electric Project) 2030 ஆம் ஆண்டுக்குள் 450 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என்ற இலக்கைப் பூர்த்தி செய்வதில் உதவி புரியும்.
- பகல் துல் நீர்மின் நிலையமானது 1000 MW திறனுடைய ஒரு திட்டமாகும்.
- இது செனாப் பள்ளத்தாக்கு ஆற்றல் திட்டம் என்ற தனியார் நிறுவனத்தினால் கட்டமைக்கப் படுகிறது.

## Blue Flag – 2021

- இஸ்ரேல் நாட்டின் ஒவ்டா வான்படைத் தளத்தில் நடைபெற்ற Blue Flag எனும் சர்வதேச

பலதரப்புப் போர்ப் பயிற்சியில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த 84 வீரர்கள், இந்திய விமானப் படையின் மிராஜ் 2000 விமானப் படையுடன் பங்கேற்றனர்.

- இந்தப் பயிற்சியின் கருத்துருவானது சிக்கலானச் செயல்பாட்டு நிகழ்வுகளில் 4வது மற்றும் 5வது தலைமுறை விமானங்களை ஒருங்கிணைத்தல் என்பதாகும்.
- 8 நாடுகளைச் சேர்ந்த விமானப்படை அமைப்புகள் இந்தப் பயிற்சியில் ஈடுபடுகின்றன.
- இப்பயிற்சியில் ஈடுபட்ட மற்ற ஏழு நாடுகளாவன: அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம், ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, கிரீஸ் மற்றும் இஸ்ரேல் ஆகும்.




## பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் மருந்திற்கு அவசரகாலப் பயன்பாட்டிற்கான அனுமதி

- பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் தடுப்பு மருந்தினை 18 வயதினருக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் செலுத்துவதற்காக வேண்டி அதன் அவசரகாலப் பயன்பாட்டிற்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- கோவாக்சின் என்பது முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு தடுப்பு மருந்து ஆகும்.
- இது ஹைதராபாத்திலுள்ள பாரத் பயோடெக் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தினால் தயாரிக்கப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பானது இதுவரையில் பைசர் - பயான்டெக், ஆஸ்ட்ராசெனிகா – Sk பயோ/இந்திய சீரம் நிறுவனம், ஜான்சன் & ஜான்சன், மாடெர்னா மற்றும் சைனோஃபார்ம் ஆகியவற்றின் தடுப்பு மருந்திற்கான அவசரகாலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.



## கங்கை திட்டம் - கின்னஸ் உலகச் சாதனை



- கங்கை உத்சவத்தின் முதல் நாளில் (நதித் திருவிழா 2021) தேசியத் தூய்மை கங்கை நதித் திட்டமானது கின்னஸ் உலக சாதனையில் இடம் பெற்றுள்ளது.
- அதிகளவில் கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் புகைப்படங்கள் ஒரு மணிநேரத்தில் பேஸ்புக்கில் பதிவேற்றப்பட்டதன் காரணமாக இது கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது.
- கங்கை உத்சவ் நிகழ்ச்சியானது கங்கைப் புனரமைப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இந்த நிகழ்விற்கு ஒரு உத்வேகம் அளிக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டது.

*குறிப்பு*

- 5வது கங்கை உத்சவ் நிகழ்ச்சியானது வேடிக்கை மற்றும் விழாக்களுடன் காணொளி வாயிலாக தொடங்கியது.
- இந்த ஆண்டு நவம்பர் 01 முதல் 03 வரையில் கங்கை உத்சவ் கொண்டாடப் பட்டது.
- எடுத்துக்காட்டாக பிரயாக்ராஜ் பகுதியில், இது கங்கை மற்றும் யமுனை நதிகள் சங்கமிக்கும் இடத்தில் கொண்டாடப் படுகிறது.
- உஜ்ஜைன் பகுதியில் இது சிப்ரா நதிக்கரையில் கொண்டாடப் படுகிறது.

## ஜம்மு & காஷ்மீரில் தீவிரவாத எதிர்ப்பு அமைப்பு

- ஜம்மு & காஷ்மீர் அரசானது, அப்பகுதியில் தீவிரவாதம் தொடர்பான வழக்குகளின் விசாரணைகளை விரைவாகவும் பயனுள்ள வகையிலும் மேற்கொள்வதற்காக ஒரு புதிய மாநிலப் புலனாய்வு முகமையை நிறுவியுள்ளது.
- இந்த முகமையானது தேசியப் புலனாய்வு முகமை மற்றும் இதர மத்திய முகமைகளுடன் இணைந்து செயல்படும் ஒரு முதன்மை அமைப்பாக இருக்கும்.
- CID பிரிவின் தலைவர் இந்த முகமையின் பதவிசார் இயக்குநராக செயல்படுவார்.

## கங்கை வரைபடம்

- கஜேந்திர சிங் சேகாவாத் “கங்கை வரைபடம்: கடந்த காலத்தின் நதி” என்பதை வெளியிட்டார்.
- இது உத்தரப் பிரதேசத்திலுள்ள கான்பூரின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் பேராசிரியர் ராஜிவ் சின்ஹா என்பவரால் உருவாக்கப்பட்டது.
- இது கடந்த 50 - 60 ஆண்டுகளில் கங்கை நதியில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி ஆவணப் படுத்தச் செய்கிறது.

## பாஷா சங்கம் முன்னெடுப்பு

- மத்தியக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பள்ளிகளுக்கான ‘பாஷா சங்கம் முன்னெடுப்பு’, ‘பாஷா சங்கம் செயலி’ மற்றும் ‘ஏக் பாரத் ஷ்ரேஷ்தா பாரத்’ விநாடி-வினா செயலி ஆகியவற்றை வெளியிட்டார்.
- 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையின் செயல்பாட்டு நிரல்களின்படி, மாணவர்கள் தங்கள் தாய்மொழியினைத் தவிர்த்து இதர இந்திய மொழிகளிலும் அடிப்படையான உரையாடல் புலமையைப் பெறச்செய்வதே இதன் நோக்கமாகும்.
- இது ‘ராஷ்டிரிய ஏக்தா திவாஸ்’ என்ற நிகழ்வின் போது தொடங்கப்பட்டது.



## கேதார்நாத்தில் பிரதமர் மோடி



- உத்தரகாண்டிலுள்ள ருத்ரபிரயாக் மாவட்டத்தில் அமைந்த கேதார்நாத் ஆலயத்தின் வளாகத்தில் புனரமைக்கப்பட்ட ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் சமாதியை (இறுதி ஓய்விடம்) பிரதமர் மோடி திறந்து வைத்தார்.
- அங்குள்ள சமாதியில் உள்ள ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் சிலையையும் அவர் திறந்து வைத்தார்.
- இந்தச் சமாதியானது 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கேதார்நாத் வெள்ளத்தில் சேதம் அடைந்தது.

## வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்புக் கப்பல் 'விசாகப்பட்டினம்'

- இந்தியக் கடற்படையானது மசகாவ்ன் கப்பல் கட்டும் நிறுவனத்திடமிருந்து தனது முதலாவது P15 என்ற B ரக ரேடாருக்குப் புலப்படாத, வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்பு வகை கப்பலைப் பெற்றது.
- 15B ரக கப்பல்கள் கொல்கத்தா ரக அழிப்புக் கப்பல்களின் (15A திட்டம்) தொடர் வரிசையைச் சேர்ந்ததாகும்.
- இவை விசாகப்பட்டினம் ரக அழிப்புக் கப்பல்கள் என அழைக்கப்படுகின்றன.

## எடெல்கிவ் ஹருண் இந்தியா மக்கள் சேவைப் பட்டியல் 2021



- ஹீருண் இந்தியா மற்றும் எடெல்கிவ் ஆகியவை இணைந்து இப்பட்டியலை

வெளியிட்டுள்ளன.

- விப்ரோ நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் அசிம் பிரேம்ஜி இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- HCL நிறுவனத்தின் தலைவர் சிவ் நாடார் இப்பட்டியலில் 2வது இடத்தை மீண்டும் தக்க வைத்துள்ளார்.
- ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத் தலைவர் முகேஷ் அம்பானி மற்றும் அவரது குடும்பத்தினர் இப்பட்டியலில் 3வது இடத்தைப் பெற்றுள்ளார்.

## இந்தியாவில் கவனிக்கப்படாத நடுத்தர மக்களுக்கு சுகாதாரக் காப்பீடு

- நிதி ஆயோக் சமீபத்தில், 'இந்தியாவில் கவனிக்கப்படாத நடுத்தர மக்களுக்கு சுகாதாரக் காப்பீடு' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையில் 40 கோடி அளவிலான 'கவனிக்கப்படாத நடுத்தர மக்களுக்கு' சுகாதாரத்திற்கான நிதி ஆதரவு இல்லை என்று கூறப்பட்டுள்ளது.
- 'கவனிக்கப்படாத நடுத்தர மக்கள்' என்பது பின்தங்கிய ஏழைப் பிரிவினருக்கும், ஒப்பீட்டளவில் நல்ல நிலையில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட துறையைச் சேர்ந்த ஒரு பிரிவினருக்கும் இடையிலான சுகாதாரக் காப்பீடு வசதியைப் பெறாத ஒரு பரந்த பிரிவாகும்.




## சர்வதேச ஒற்றைச் சுகாதார தினம்

- இந்த தினமானது நவம்பர் 03 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையானது 6வது சர்வதேச ஒற்றைச் சுகாதார தினத்தைக் கொண்டாடுவதற்காக வேண்டி 'தொழில் துறை மற்றும் ஒற்றைச் சுகாதாரம்' என்ற தலைப்பில் பங்குதாரர் மன்றம் ஒன்றை ஏற்பாடு செய்தது.
- இது ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் என்ற நிகழ்வின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.




- ஒற்றைச் சுகாதாரம் என்ற ஒரு கருத்தைச் செயல்படுத்துவதற்கு முக்கியமான அம்சங்களாக, பலதரப்பட்ட ஒத்துழைப்பையும், பல்துறை மற்றும் பலதுறைகளுக்கு இடையிலான ஈடுபாடுகளையும் முன்னிலைப்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 2070 ஆம் ஆண்டுக்குள் கார்பன் நடுநிலையை அடையும் இந்தியா

- 2030 ஆம் ஆண்டுக்குள் உமிழ்வின் அளவை 50% வரைக் குறைப்பது உள்ளிட்ட ஐந்து அம்ச செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக 2070 ஆம் ஆண்டுக்குள் கார்பன் நடுநிலையை அடைவதாக இந்தியா சமீபத்தில் அறிவித்தது.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற பருவநிலை உச்சி மாநாட்டின் 26வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP) இந்தியா இந்த உறுதிமொழியை அளித்தது.
- பருவநிலை நிதியுதவிக்கான தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வளர்ச்சி அடைந்த நாடுகளை இந்தியா வலியுறுத்தியது.



## சைகோவ் – D




- ❖ சைடஸ் கேடில்லா நிறுவனத்தின் தயாரிப்பான, 3 தவணைகள் அளவிலான சைகோவ் – D எனும் கோவிட் – 19 தடுப்பு மருந்தினை ஒரு தவணைக்கு ரூ.265 என்ற விலை வீதத்தில் ஒரு கோடி தவணைகளை மத்திய அரசு வாங்க உள்ளது.
- ❖ சைகோவ் – D என்பது உலகில் மனிதப் பயன்பாட்டிற்கு வந்த முதலாவது டி.என்.ஏ பிளாஸ்மிடு தடுப்பு மருந்தாகும்.
- ❖ இந்தத் தடுப்பு மருந்தானது வழக்கமான ஊசிக் குழல் மூலம் செலுத்துவதற்குப் பதிலாக ஊசியற்ற ஒரு சாதனத்தைப் பயன்படுத்திச் செலுத்தப்படும்.
- ❖ அந்தச் சாதனமானது "பார்மாஜெட்" என அழைக்கப்படும்.
- ❖ சைகோவ் – D மருந்தின் மூன்று தவணைகள் 28 நாட்கள் இடைவெளியில் வழங்கப் படும்.

## காடர் பழங்குடியினர்

- ❖ காடர் பழங்குடியினத்தைச் சேர்ந்த சில குடும்பங்கள் ஆனைமலைப் புலிகள் காப்பகத்தின் உள்பகுதியில் வீட்டுமனைக்கான பட்டாக்களைப் பெற்றுள்ளனர்.
- ❖ காடர் என்பவர்கள் தமிழகத்திலுள்ள கோயம்புத்தூர் மற்றும் கேரளாவிலுள்ள கொச்சின் ஆகியவற்றுக்கு இடையிலான மலைப்பாங்கான எல்லைப்பகுதியினூடே வாழும் தென்னிந்தியாவின் ஒரு சிறிய பழங்குடி இனமாகும்.
- ❖ கேரள மாநிலத்தின் 5 பழமையான பழங்குடிகளுள் ஒன்றான காடர் இனமானது அந்த மாநிலத்தின் மொத்த பழங்குடியின மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 5 சதவீதத்தைக் கொண்டுள்ளது.
- ❖ இவர்கள் தமிழ் மற்றும் கன்னடம் போன்ற திராவிட மொழிகளைப் பேசுகின்றனர்.
- ❖ காடர் பழங்குடியினர் கேரளாவில் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினக் குழுக்களாக பட்டியலிடப்பட்டுள்ள அதே வேளையில் அவர்கள் தமிழகத்தில் அவ்வாறு குறிப்பிடப் படவில்லை.
- ❖ இந்தக் குழுவின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளப் பழங்குடியினர் 2006 ஆம் ஆண்டு வன உரிமைகள் சட்டத்தின் கீழ் வாழிட உரிமைகளைப் பெற அனுமதி பெறுவர்.

## உலகத் தலைவர்களை ஏற்பது குறித்த தரவரிசை

- ❖ மார்னிங் கன்சல்ட் என்பதின் கூற்றுப் படி பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்தத் தரவரிசையில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- ❖ இவர் 70% ஏற்பு வீதத்துடன் இந்தத் தரவரிசையில் முன்னணியில் உள்ளார்.
- ❖ மோடி உலகெங்கிலும் உள்ள இளம் பருவத்தினர் மத்தியில் அதிகபட்ச ஏற்பினைப் பெற்றுள்ளார்.
- ❖ இதில் மெக்சிகோ நாட்டு அதிபர் ஆண்ட்ரேஸ் மானுவேல் லோபஸ் ஓப்ராடோர் 2வது இடத்தில் உள்ளார்.
- ❖ இவரைத் தொடர்ந்து இத்தாலிய நாட்டின் பிரதமர் மரியோ டிராகி (58%) இடம் பெற்று உள்ளார்.
- ❖ இதில் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் 6வது இடத்தில் உள்ளார்.




## ஸ்ரீநகர் விமான நிலையம் – "முக்கிய விமான நிலையம்"

- ❖ மத்திய வான்வழிப் போக்குவரத்து அமைச்சகமானது ஸ்ரீநகர் விமான நிலையத்தினை 2008 ஆம் ஆண்டு விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் கீழ் ஒரு முக்கிய விமான நிலையமாக அறிவித்துள்ளது.
- ❖ இந்த நடவடிக்கையானது ஸ்ரீநகர் விமான நிலையத்தில் விமானச் சேவைகளை வழங்குவதற்கான மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் பயணிகள் சேவை கட்டணம் உள்ளிட்ட கட்டண வரிகளை நிர்ணயிக்க விமான நிலையப் பொருளாதார ஒழுங்கு முறை ஆணையத்திற்கு வழி வகை செய்யும்.
- ❖ ஒரு விமான நிலையத்தின் வருடாந்திரப் பயணிகள் போக்குவரத்தானது ஒரு குறிப்பிட்ட அளவைக் கடந்தால், மத்திய அரசானது அந்த விமான நிலையத்தை ஒரு முக்கிய (பெரு) விமான நிலையமாக அறிவிக்கிறது.
- ❖ இதற்கு முன்பு, ஸ்ரீநகர் விமான நிலையத்தின் போக்குவரத்தினை இந்திய விமான நிலைய

ஆணையம் தீர்மானிக்கும்.

- இந்திய விமான நிலைய ஆணையம் வான்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு நிறுவனம் ஆகும்.

## இந்தியப் பசுமை உத்தரவாதம்

- இந்தியா முழுவதுமான பசுமைசார் திட்டங்களுக்கென கூடுதலாக 750 மில்லியன் பவுண்டு அளவிலான நிதியினை வழங்குவதற்கான "இந்தியப் பசுமை உத்தரவாதத்தை" உலக வங்கியிடம் இங்கிலாந்து வழங்க உள்ளது.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற COP 26 உச்சி மாநாட்டில் இது குறித்து அறிவிக்கப் பட்டது.

- பசுமை உத்தரவாத நிதியானது தூய்மையான எரிசக்தி, போக்குவரத்து மற்றும் நகர்ப்புற மேம்பாடு போன்ற துறைகளில் தூய்மையான மற்றும் நெகிழ்திறன் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் ஆதரவு அளிக்கும்.
- வளர்ந்து வரும் நாடுகள் பசுமைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், தங்களுடையப் பொருளாதாரத்தை நிலையான முறையில் வளர்த்துக் கொள்ளவும் உதவும் வகையில் COP 26 உச்சி மாநாட்டில் "தூயப் பசுமை முன்முயற்சி" என்ற முயற்சி தொடங்கப் பட்டது.

## 1 டிரில்லியன் டாலர் பருவநிலை நிதி

- 2009 ஆம் ஆண்டில் முடிவு செய்த அளவில் பருவநிலை நிதியைத் தொடர முடியாது என்று இந்தியா கூறியது.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான இலக்குகளைப் பூர்த்தி செய்ய குறைந்த பட்சம் $1 டிரில்லியன் தொகையேனும் இருக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்திக் கூறியுள்ளது.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 26வது சர்வதேச பருவநிலை மாநாட்டில் ஒத்த எண்ணம் கொண்ட வளர்ந்து வரும் நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் இது குறித்து தெரிவிக்கப்பட்டது.

## மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள்

- 2070 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் நிகர-பூஜ்ஜிய கார்பன் என்ற ஒரு இலக்கினை அடைய உதவுவதற்காக ஆயிரக்கணக்கான மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களை உருவாக்குவதற்கான திட்டங்களை அரசினால் இயக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.
- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC - Indian Oil Corporation) நிறுவனமானது அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,000 மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களை அமைக்க உள்ளது.
- அதன் செயல்பாடுகளில் இருந்து பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் திட்டங்களையும் அது உருவாக்கி வருகிறது.

- பாரத் பெட்ரோலியம் நிறுவனமானது அடுத்த சில ஆண்டுகளில் அதற்குச் சொந்தமான 7,000 எரிபொருள் நிலையங்களில் மின்சார வாகன மின்னேற்றத்திற்கான ஒரு உள்கட்டமைப்பை வழங்கும் திட்டத்தை அறிவித்தது.
- ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனமானது இன்னும் மூன்று ஆண்டுகளில் நாட்டில் 5,000 மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை அறிவித்தது.

## இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள்

- பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகத்தின் ஒரு அறிக்கையின்படி, இந்தியாவில் 33 லட்சத்திற்கும் அதிகமான அளவில் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் உள்ளனர்.
- மேலும், அதில் பாதிக்கும் மேற்பட்ட குழந்தைகள் மிகக் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள பிரிவில் உள்ளதாக அந்த அமைச்சகம் குறிப்பிடுகிறது.
- இந்த எண்ணிக்கையானது போஷன் கண்காணிப்புச் செயலி மூலம் தெரிவிக்கப்பட்டது.
- மகாராஷ்டிரா, பீகார் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன.

## LEADS குறியீடு 2021

- 2021 ஆம் ஆண்டு LEADS (பல்வேறு மாநிலங்களிடையே தளவாடப் பரிமாற்றங்களை எளிதாக்குதல்) குறியீட்டில் மதிப்பிடப்பட்ட 21 மாநிலங்களில் குஜராத் மாநிலமானது தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து ஹரியானா, பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- LEADS 2021 என்பது பல்வேறு மாநிலங்களிடையே தளவாடப் பரிமாற்றங்களை எளிதாக்குதல் என்பதைக் குறித்த 3வது அறிக்கையாகும் (முதலாவது - 2018; 2வது – 2019).
- இது இந்தியா முழுவதும் உள்ள தளவாட உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை அடையாளம் காண்பதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியது.
- இந்தக் குறியீட்டின் தரவரிசைகளானது மாநிலங்கள், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமயமலைப் பகுதியில் உள்ள ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் பிற ஒன்றியப் பிரதேசங்கள் என 3 தனித்தனி வகைகளில் வழங்கப்படுகின்றன.

*குறிப்பு*

- பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் இந்தியா உலகின் 5வது பெரிய பொருளாதாரமாகவும், உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாகவும் திகழ்கிறது.

**TOP 10 STATES**

| | 2019 | 2021 |
|---|---|---|
| Gujarat | 1 | **1** |
| Haryana | 6 | **2** |
| Punjab | 2 | **3** |
| Tamil Nadu | 5 | **4** |
| Maharashtra | 4 | **5** |
| Uttar Pradesh | 13 | **6** |
| Odisha | 10 | **7** |
| Karnataka | 7 | **8** |
| Andhra Pradesh | 3 | **9** |
| Telangana | 8 | **10** |

Source: Leads index of logistics, released by commerce and industry ministry

## கோவா கடல்சார் மாநாடு




- 3வது வருடாந்திர கோவா கடல்சார் மாநாடானது (GMC-21) கோவாவில் தொடங்கியது.
- இந்த மாநாட்டில், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த 12 நாடுகளின் கடற்படைத் தலைவர்களுக்கு இந்தியா தலைமை தாங்கும்.
- கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உருவாகி வரும் மற்றும் எதிர்கால கடல்சார் பாதுகாப்பு சவால்களைத் திறம்பட கையாள்வதற்கான இயங்குந்தன்மையின் ஒரு முக்கியத்துவம் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.
- இந்த மாநாட்டின் கருத்தரு "கடல் பாதுகாப்பு மற்றும் வளர்ந்து வரும் மரபற்ற புது அச்சுறுத்தல்கள்: இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் செயலூக்கமிக்கப் பங்களிப்பிற்கான ஒரு வாய்ப்பு" (Maritime Security and Emerging Non-Traditional Threats: A case for proactive role for Indian Ocean Region) என்பதாகும்.

## கங்கா மஷால்

- கங்கா மஷால் தீபமானது உத்தரகாண்டிலுள்ள ரிஷிகேஷ் முதல் ஹரித்துவார் வரையிலான தனது பயணத்தைத் தொடங்கியது.
- இது கங்கை நதியினூடே மொத்தமுள்ள 23 நிலையங்களுக்கும் பயணிக்கும்.
- இது உள்ளூர் மக்கள் மற்றும் நமாமி கங்கைத் தன்னார்வலர்களின் விழிப்புணர்விற்கு உதவும்.
- கங்கைச் செயற்படை வீரர்களால் இந்த தீபமானது ஏந்திச் செல்லப்படுகிறது.
- இந்தப் பயணமானது மேற்கு வங்காளத்திலுள்ள கங்கை சாகர் என்ற இடத்தில் நிறைவு அடையும்.

## வாகனங்கள் மூலம் தொலைதூரப் பகுதிகளுக்குச் சட்டத்தைக் கொண்டு சென்று சேர்த்தல் குறித்தப் பிரச்சாரம்

- நீதித் துறை அமைச்சகமானது வாகனங்கள் மூலம் தொலைதூரப் பகுதிகளுக்குச் சட்டங்களைக் கொண்டு சென்று சேர்ப்பதற்காக வேண்டி ஒரு வார கால அளவிலான ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- இந்தப் பிரச்சாரமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 08 முதல் நவம்பர் 14 வரை நடத்தப் பெறும்.
- இந்தப் பிரச்சாரத்தின் கீழ், மக்கள் தங்களது உரிமைகளை கோரச் செய்வதற்கும், அவர்களின் சிரமங்களைச் சரியான நேரத்தில் நிவர்த்தி செய்வதற்கும் வழக்கிற்கு முந்தைய ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் மக்களுக்கு அதிகாரம் அளிக்கச் செய்வதற்குமாக வேண்டி பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- இந்த ஒரு வாரமானது தேவையுள்ள மக்களுக்கு "டிஜிட்டல் சட்ட அதிகாரமளிப்பின் மூலம் அனைவருக்கும் நீதி வழங்கலை" உறுதி செய்வதற்காக அர்ப்பணிக்கப் பட்டது.

## இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான வழிகாட்டல் திட்டம்

- மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் முதன்முறையாக இளம் கண்டு பிடிப்பாளர்களுக்கான ஒரு வழிகாட்டல் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது 75வது இந்திய சுதந்திரத் தினத்தைக் குறிக்கும் வகையில் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்காக தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க முயற்சிகளை வலுப்படுத்தச் செய்வதன் மூலம், மக்களிடையே அறிவியல் மனப்பான்மையை ஊக்குவிப்பதற்கு இந்த வழிகாட்டுதல் திட்டம் உதவும்.
- இந்தத் திட்டமானது, உயிரித் தொழில்நுட்பத் துறையின் ஆதரவுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நட்சத்திரக் கல்லூரியை நிறுவுவதை வலியுறுத்தச் செய்யும் வகையிலான இந்தியா முழுவதிலுமான ஒரு திட்டமாகும்.

## சட்டப்பூர்வ அளவீடுகள் (சரக்குப் பொதிகள்) விதிகள், 2011 திருத்தம்

- மத்திய நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகமானது 2011 ஆம் ஆண்டிற்கான சட்டப் பூர்வ அளவீடுகள் (சரக்குப் பொதிகள்) விதிகளைத் திருத்தி அமைத்துள்ளது.
- இதனால் அனைத்து நிறுவனங்களும் தற்போது சரக்குப் பொதிகளில் ஒரு அலகின் விற்பனை விலையை அச்சிட வேண்டும்.
- இந்தப் புதியத் திருத்தமானது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமலுக்கு வரும்.
- இந்த நடவடிக்கை மூலம், நுகர்வோர்கள் அலகின் அடிப்படையில் விலையைக் கண்டறிவது எளிதாக இருக்கும்.
- இந்தத் திருத்தத்தின் கீழ், ஒரு கிலோகிராமிற்கும் அதிகமாக சரக்குப் பொதிகளை விற்பனை செய்யும் நிறுவனங்கள் அவற்றின் அதிகபட்ச சில்லறை விலையுடன் ஒரு கிலோகிராமிற்கான ஒரு அலகின் விலையையும் அச்சிட வேண்டும்.

## UNESCO ஆக்கப்பூர்வ நகரங்கள் வலையமைப்பு

- உலகம் முழுவதும் 49 புதிய நகரங்கள் UNESCO அமைப்பின் ஆக்கப்பூர்வ நகரங்கள் வலையமைப்பில் இணைந்துள்ளது.
- ஸ்ரீநகர் யுனெஸ்கோ ஆக்கப்பூர்வ நகரங்கள் வலையமைப்பில் இணைந்துள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பானது ஸ்ரீநகரைக் கைவினை மற்றும் நாட்டுப்புறக் கலைகளின் ஒரு ஆக்கப் பூர்வ நகரமாக அறிவித்தது.




*இந்த வலையமைப்பில் ஏற்கனவே இணைந்துள்ள நகரங்கள்*

- சென்னை மற்றும் வாரணாசி ஆகியவை யுனெஸ்கோ இசை நகரங்களில் சேர்க்கப் பட்டுள்ளன.
- ஜெய்ப்பூர் நகரானது யுனெஸ்கோவின் கைவினை மற்றும் நாட்டுப்புறக் கலைகளின் நகரங்கள் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- மும்பை நகரானது யுனெஸ்கோ திரைப்பட நகரங்களில் சேர்க்கப் பட்டுள்ளது.
- ஹைதராபாத் நகரானது அறுசுவை உணவியல் நகரங்களில் சேர்க்கப் பட்டுள்ளது.

## உலகப் பொருளாதார மன்றம் – புதிய அறிக்கை




- உலகப் பொருளாதார மன்றமானது, இந்தியாவின் ஆற்றல் பரிமாற்றத்திற்கான ஒரு செயல்திட்டத்தை வழங்குவதற்காக "திட்டம் 2070 : நிகர சுழிய இந்தியாவிற்கான ஒரு புதியப் பசுமை ஒப்பந்தம்" என்று தலைப்பிடப்பட்ட தனது அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது 2070 ஆம் ஆண்டுக்குள் ஒரு நிகர சுழிய உமிழ்வு நிலையை அடைவதற்காக இந்தியா நிர்ணயித்த இலக்கின் பின்னணியில் வெளியிடப் பட்டது.
- பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நகரும் இந்தியாவின் பரிமாற்றமானது 2030 ஆம் ஆண்டிற்குள் பொருளாதாரத் தாக்கத்தில் சுமார் 1 டிரில்லியன் டாலர் அளவு பங்கினை வகிக்கும் என இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இது 50 மில்லியனுக்கு அதிகமான வேலைவாய்ப்பினை உருவாக்கும்.
- இதன் மூலம் பொருளாதாரத் தாக்கமானது 2070 ஆம் ஆண்டுக்குள் 15 டிரில்லியன் டாலர் வரை உயரும்.
- இந்திய நாடானது பருவநிலை மாற்றத்தின் முன்களத்தில் உள்ளது.
- மற்ற நாட்டவர்களை விட, பருவநிலை மாற்றம் மற்றும் தீவிரமான வானிலை நிகழ்வுகளின் எதிர்மறையான விளைவுகளை இந்தியர்களே அதிகம் எதிர் கொள்ள இருக்கின்றனர்.

## c0c0n - 14வது பதிப்பு

- பாதுகாப்புப் படை அலுவலர்களுக்கான தலைவர் ஜெனரல் பிபின் ராவத், c0c0n என்பதின் 14வது பதிப்பினைத் தொடங்கி வைத்தார்.
- இது நவம்பர் 10 முதல் 13 வரையில் காணொலி வாயிலாக நடத்தப்பட உள்ள, ஒரு வருடாந்திர ஊடுருவல் மற்றும் இணையப் பாதுகாப்பு செயல்விளக்க மாநாடாகும்.
- இந்த மாநாடானது இரண்டு லாபநோக்கமற்ற அமைப்புகளுடன் இணைந்து கேரள

காவல்துறையினால் நடத்தப்படுகிறது.

- இந்த மாநாட்டில், முதன்மையான அளவில் பொது ஊரடங்கின் போது நிகழ்ந்த இணைய ஏமாற்றுகள் மற்றும் பாதுகாப்பு பற்றி விவாதிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான கருத்துருவானது "Improvise, Adapt and Overcome" என்பதாகும்.




## ஜன்ஜாதிய கவுரவ் திவாஸ் - நவம்பர் 15

- பிர்சா முண்டாவின் பிறந்தநாளை 'ஜன்ஜாதிய கவுரவ் திவாஸ்' என்று அறிவிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- முண்டா என்றப் பழங்குடியினத்தைச் சேர்ந்த பிர்சா முண்டா 1875 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதி பிறந்தார்.
- 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சியின் போது, தற்காலத்தியப் பீகார் மற்றும் ஜார்க்கண்டின் பழங்குடியினப் பகுதி முழுவதும் ஒரு இந்தியப் பழங்குடியினருக்கான சமய இயக்கத்தை அவர் வழி நடத்தினார்.
- நாட்டில் அவரது பிறந்தநாள் பிர்சா முண்டா ஜெயந்தியாக கொண்டாடப் படுவதோடு அத்தினம் ஜார்க்கண்ட் மாநில நிறுவன நாளுடன் ஒத்துப் போகிறது.




## இஸ்ரேல் - DRDO ஒப்பந்தம்




- இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இஸ்ரேலின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநரகம் இரண்டும் சமீபத்தில் ஒரு இருதரப்புப் புத்தாக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தமானது இரு நாடுகளின் புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் இரட்டைப் பயன்பாட்டுத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்காக புதுமை, விரைவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ரோபாட்டிக்ஸ், ட்ரோன்கள், குவாண்டம் டெக்னாலஜி, செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகளை வெளிக் கொணர இரு நாடுகளின் தொழிலகங்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் இணைந்து செயல்படும்.

## ஹார்பிங்கர் 2021

- இந்திய ரிசர்வ் வங்கி தனது முதல் உலகளாவிய ஹேக்கத்தானை 'HARBINGER 2021–Innovation for Transformation' என்ற பெயரில் நடத்த உள்ளது.
- இது டிஜிட்டல் கட்டணத்தில் கவனம் செலுத்துகிறது.
- இது 'Smarter Digital Payments' என்ற கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப்படும்.




## கல்வித் துறையில் சிறந்த இலட்சிய மாவட்டங்கள்

- கல்வித்துறையில் முதல் ஐந்து இலட்சிய மாவட்டங்களை நிதி ஆயோக் அறிவித்து உள்ளது.
- செப்டம்பர் மாதத்திற்கான தரவரிசையில் கல்வித் துறையில் மிகவும் முன்னேறிய இலட்சிய மாவட்டங்களை இது தரவரிசைப் படுத்தியுள்ளது.
- இதில் தெலுங்கானா மாநிலத்தின் பூபாலப்பள்ளி மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது.
- இதில் பூபாலப்பள்ளியைத் தொடர்ந்து,
    - ஜார்க்கண்டில் உள்ள சத்ரா & சாஹிப்கஞ்ச் மாவட்டம்
    - ஒடிசாவின் நுவாபாடா மாவட்டம் மற்றும்
    - ராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டம் ஆகியன உள்ளன.

## ஐஎன்எஸ் வேலா

- ஐஎன்எஸ் வேலா என்ற போர்க் கப்பலானது இரண்டு வருடத்திற்கும் மேற்பட்ட கடற்வழிச் சோதனைகளை அடுத்து இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப் பட்டது.
- இது நாட்டின் நான்காவது ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பலாகும்.
- ஐஎன்எஸ் வேலா கப்பல் எதிரிகளை எதிர்த்துப் போரிட ரேடார் கருவிகளில் சிக்காத மேம்பட்ட தொழில்நுட்பம் (stealth) மற்றும் சிறந்த போர் திறன்களைக் கொண்டு இருப்பதாக அறியப்படுகிறது.
- டீசல் - மின்னாற்றல் மூலம் இயங்கும் இந்த நீர்மூழ்கிக் கப்பலானது மும்பையில் உள்ள மசாகன் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் (Mazagon Dock Ship builders Limited) என்ற நிறுவனத்தின் மூலம் திட்டம் 75 என்பதின் (Project 75) கீழ் கட்டப்பட்டது.

- ஐந்தாவதுக் கப்பலான ஐஎன்எஸ் வகிர் ஆனது நவம்பர் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டு துறைமுகச் சோதனைகளை அது தொடங்கியுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டின் டிசம்பரில் அதன் முதல் மேற்பரப்புக் கண்காணிப்புப் பணியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆறாவது நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் வாகஷீர் ஆனது தனது தயாரிப்பின் இறுதி நிலையில் உள்ளது.



Constructed by Mazagon Dock Shipbuilders Limited for the Indian Navy, INS VELA was launched on 06 May 2019. This is the fourth of the six Scorpene submarine that has completed the out fittings at MDL facility.

## 51வது ஆளுநர்கள் மாநாடு



- டெல்லி ராஷ்டிரபதி பவனில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஆளுநர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்களின் 51வது மாநாடு நடைபெற்றது.
- ஜனாதிபதி கோவிந்த் தலைமையில் நடைபெறும் நான்காவது மாநாடு இதுவாகும்.

## புதிய தலைமை இயக்குநர்கள்

- உளவுத் துறையின் சிறப்பு இயக்குனர் ஷீல் வர்தன் சிங் மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படையின் புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசியக் காவல்துறை அகாடமியின் இயக்குநர் அதுல் கர்வால் தேசிய பேரிடர் மீட்புப் படையின் புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்தியக் காவல் பணி (ஐபிஎஸ்) அதிகாரியான சத்ய நாராயண் பிரதான் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பணியகத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- இதற்கு அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.




## MPLAD திட்டம்




- பாராளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தை (MPLADS - Members of Parliament Local Area Development Scheme) மத்திய அமைச்சரவை மீண்டும் திரும்பக் கொண்டு வந்துள்ளது.
- இருப்பினும், இதில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட ₹5 கோடிக்குப் பதிலாக ₹2 கோடி மட்டுமே கிடைக்கும்.
- இந்தியாவின் தொகுப்பு நிதியில், இத்திட்டத்திற்கான நிதியைச் சேர்த்து 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இத்திட்டம் இடை நிறுத்தப்பட்டது.
- இத்திட்டத்திலிருந்து சேமிக்கப்படும் நிதி, சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்தச் செய்யவும், PM Garib Kalyan Yojana என்பதின் கீழ் இலவச ரேஷன் வழங்கச் செய்யவும், மக்களுக்கு இலவசத் தடுப்பூசி போடவும் வேண்டி நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளது.
- இது இந்திய அரசாங்கத்தால் முழுமையாக நிதியளிக்கப்படும் ஒரு திட்டமாகும்.
- இது 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## டிஜிட்டல் இணையக் கட்டண வாயில்

- இந்தியத் தேசிய இணையப் பரிமாற்றம் (NIXI - National Internet Exchange of India) இதை அறிமுகப் படுத்தியுள்ளது.
- NIXI என்பது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஓர் இலாப நோக்கற்ற நிறுவனமாகும்.

## ஆப்கானிஸ்தான் மீதான டெல்லி பிரகடனம்




- இது ஆப்கானிஸ்தான் குறித்து இந்தியா நடத்தும் 3வது பிராந்தியப் பாதுகாப்பு உச்சி மாநாடாகும்.
- இந்த உச்சி மாநாட்டில் எட்டு நாடுகள் பங்கேற்றன.
- அவை இந்தியா, ரஷ்யா, ஈரான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியனவாகும்.
- இந்த மாநாட்டில் ஆப்கானிஸ்தான் மற்றும் அதன் பிரதேசங்களைப் பயங்கர வாதிகளுக்கு அடைக்கலம் அளிக்கவோ (அ) பயிற்சியளிக்கவோ (அ) பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியளிக்கவோ வேண்டி பயன்படுத்த முடியாது என அறிவிக்கப் பட்டது.

## ஆயுஷ்மான் பாரத் – டிஜிட்டல் திட்டம்




- மத்திய சுகாதார அமைச்சகமானது, சுகாதார ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கம் செய்வதற்காக அனைத்து மருத்துவமனைகள் மற்றும் அனைத்து மருத்துவர்கள் குறித்தத் தகவல்களையும் ஆயுஷ்மான் பாரத்-டிஜிட்டல் திட்டத்தின் கீழ் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யத் தொடங்கியுள்ளது.
- இந்த முயற்சியின் கீழ், மருத்துவமனைத் தகவல் மேலாண்மை அமைப்பு மீதான மென்பொருள் என்ற ஒன்றை வாங்குமாறு அனைத்து அரசு மருத்துவமனைகளிடம் கூறப்பட்டு உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு இந்தியருக்கும் ஒரு தனிப்பட்ட சுகாதார அடையாள அட்டையானது வழங்கப்படும்.
- இதன் மூலம், குடிமக்கள் ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் சுகாதார வசதிகளைப் பெற இயலும்.
- இந்தத் திட்டமானது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் தேசிய சுகாதார ஆணையத்தினால் செயல்படுத்தப் படும்.

## தேசியச் சாதனைக் கணக்கெடுப்பு 2021

- 3, 5, 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு 3 வருட சுழற்சிக்கால அடிப்படையில் மாதிரி சார்ந்த ஒரு தேசியச் சாதனைக் கணக்கெடுப்பினை மேற்கொள்ள இந்திய அரசு தயாராக உள்ளது.
- இது இந்தியா முழுவதுமுள்ள மத்திய அரசுப் பள்ளிகள், மாநில அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்தப் பள்ளிகளிலும் மேற்கொள்ளப்பட உள்ளது.

- இது போன்ற முந்தையக் கணக்கெடுப்பானது 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது.
- இந்த ஆய்வானது கோவிட்-19 பெருந்தொற்றின் போது ஏற்பட்ட கற்றல் தடைகள் மற்றும் புதிய கற்றல் முறைகளை மதிப்பிடுவதில் உதவும்.
- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமானது சாதன உருவாக்கம், சோதனை, பள்ளிகளின் மாதிரிச் சேமிப்பு மற்றும் சோதனைகளை இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிகளை செய்துள்ளது.
- ஆனால் மாதிரி சேகரிக்கப்பட்டப் பள்ளிகளில் சோதனை குறித்த உண்மையான நிர்வாகத்தை மத்திய இடைநிலைக் கல்வி வாரியமானது மேற்கொள்ளும்.




## ஸ்ரீராமாயண யாத்ரா சிறப்பு இரயில்




- இந்திய இரயில்வே சமையல் மற்றும் சுற்றுலாக் கழகமானது ஸ்ரீராமாயண யாத்ரா என்ற சிறப்பு இரயிலின் முதல் பயணத்தைத் தொடங்கியுள்ளது.
- இது சமயம் சார்ந்த சுற்றுலாவையும் மத்திய அரசின் 'தேக்கோ அப்னா தேஷ்' என்ற

முன்னெடுப்பினையும் மேம்படுத்துவதற்காக தொடங்கப் பட்டது.

- இந்த இரயிலானது 'ஹம்பி – நாசிக் – சித்திரகூட் தாம் – வாரணாசி – கயா – சித்தமார்ஹி – ஜனக்பூர் (நேபாளம்) – அயோத்தியா – நந்திகிராம் – பிரயாக்ராஜ் – ஷிரிங்கவேர்பூர்' என்ற தொடரில் பயணிக்கும்.
- இது ராமரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய முக்கிய இடங்களுக்குப் பயணிக்கும்.

## ரெசாங் லா போர் நினைவிடம்

- இந்திய இராணுவமானது லடாக்கில் உள்ள ரெசாங் லா போர் நினைவிடத்தை மறு சீரமைத்துள்ளது.
- இது எல்லை மெய்க்கட்டுப்பாட்டுப் பகுதியின் மற்றொரு பக்கத்திலிருந்துப் பார்க்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது.
- ரெசாங் லா என்பது 1962 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் போர் நடைபெற்ற ஒரு முக்கிய போர்த் தளமாகும்.
- ரெசாங் லா, இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட லடாக் மற்றும் சீன நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்பாங்குர் ஏரிப் படுகை ஆகியவற்றிற்கு இடையே உள்ள எல்லை மெய்க் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்த ஒரு மலைப்பாதை (கணவாய்) ஆகும்.



## ஆராய்ச்சிக்கான முதலாவது சிறப்பு மையம்

- ஆளில்லா விமானத் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மீதான ஆராய்ச்சிக்கான முதலாவது சிறப்பு மையமானது அசாமிலுள்ள கவுகாத்தியில் திறக்கப் பட்டது.
- இது கவுகாத்தியின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் மத்திய அமைச்சர் V.K. சிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.




## KGB கவசம்

- இது மலப்புரத்தினைத் தலைமையிடமாகக் கொண்ட கேரள கிராமின வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது கோவிட்-19 தடுப்பூசியின் முதல் (அ) இரண்டு தவணையையும் செலுத்திக் கொண்டவர்களால் மேற்கொள்ளப் படும் வைப்புத் தொகைகள் மீது அதிக வட்டியினை வழங்குகிறது.
- தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வதற்கு மக்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த முன்னெடுப்பானது மேற்கொள்ளப்படுகிறது.
- அரசின் தடுப்பூசி வழங்கும் பிரச்சாரத்திற்கு ஒரு கிராமப்புற வங்கி ஆதரவு திரட்டுவது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.




## ஊட்டச்சத்து விழிப்புணர்விற்கான திறன்மிகு கிராமம்

- மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் இந்தத் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது இந்தியாவிலுள்ள 75 கிராமங்களைச் சென்றடைவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது கிராமங்களில் ஊட்டச்சத்து குறித்த ஒரு விழிப்புணர்வை அதிகரிக்கும்.
- நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் ஊட்டச்சத்து குறித்த ஒரு விழிப்புணர்வை

ஊக்குவிப்பதையும் அது சார்ந்த நடவடிக்கை மீதான மாற்றங்களைக் கொண்டு வருவதினையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டமானது வேளாண்மை செய்யும் பெண்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் ஆகியோரை இலக்காக வைத்துச் செயல்படுகிறது.




## மிகப்பெரிய நிலப்பரப்பு வாயு மற்றும் அழுத்தப்பட்ட உயிரி வாயு ஆலை




- இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் உலகின் முதலாவது நிலப்பரப்பு வாயு மற்றும் அழுத்தப் பட்ட உயிரி வாயு ஆலையானது ஹைதராபாத்தில் நிறுவப்பட்டுள்ளது.
- ராம்கி என்விரோ லிமிடெட் என்ற நிறுவனமானது ஹைதராபாத் ஒருங்கிணைந்த மாநகராட்சி கழகத்தின் திடக்கழிவுத் தளத்தில் இந்த ஆலையினைத் திறந்துள்ளது.
- இந்த ஆலையானது வாகன எரிபொருளாக நிலத்தில் குவிக்கப்பட்ட பொருட்களில் உருவாகும் வாயுவினை அழுத்தப்பட்ட ஒரு உயிரி வாயுவாக மாற்றும்.
- இது கார்பன் பிடிப்பு, சுற்றுச்சூழலில் குறைவான பசுமை இல்ல வாயு வெளியீடு மற்றும் வாகன உற்பத்தித் தொழில்துறையைப் பசுமைமயமாக்கல் போன்ற பல நன்மைகளை வழங்குகிறது.

## உயர்லட்சிய பிராந்தியத் தலைமைத்துவ விருது




- ❖ மகாராஷ்டிரா மாநிலமானது முதலாவது உயர்லட்சிய பிராந்தியத் தலைமைத்துவ விருதினைப் பெற்றுள்ளது.
- ❖ இந்த விருதானது ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பருவநிலை மாற்ற உச்சி மாநாட்டுடன் ஒருங்கே நடைபெற்ற அண்டர்2 கூட்டணி பொதுச் சபையில் (Under2 Coalition General Assembly) வழங்கப்பட்டது.
- ❖ மகாராஷ்டிரா மாநிலமானது பசுமை இல்ல வாயு உமிழ்வுத் தணிப்பு நடவடிக்கைக்கான பிராந்திய அரசுகளின் உலகளாவிய அண்டர்2 கூட்டணியில் ஜூலை மாதத்தில் இணைந்தது.
- ❖ மகாராஷ்டிரா மாநிலமானது பருவநிலைக் கூட்டிணைவுகள் மற்றும் புதுமையான பருவநிலைத் தீர்வுகள் ஆகிய மற்ற இரு பிரிவுகளில் அதிக மதிப்புகளைப் பெற்றது.
- ❖ கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் கியூபெக் ஆகிய நகரங்கள் இந்த இரு பிரிவுகளில் விருதுகளை வென்றன.
- ❖ அண்டர்2 என்ற ஒரு கூட்டணியானது பருவநிலை நடவடிக்கைக்காக உறுதிப்பாடு மேற்கொண்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் அடங்கிய மிகப்பெரிய ஒரு உலகக் கட்டமைப்புகளுள் ஒன்றாகும்.
- ❖ சத்தீஸ்கர், ஜம்மு & காஷ்மீர், தெலுங்கானா மற்றும் வங்காளம் ஆகியவையும் இந்தக் கூட்டணியின் ஓர் அங்கமாகும்.

## தொழில்நுட்பத் தொழில்முனைவோர் தொடர்

- ❖ கேரளப் புத்தாக்க நிறுவனத் திட்டம் மற்றும் சிஸ்கோ லாஞ்ச்பேட் ஆக்சிலரேட்டர் புரோகிராம் அமைப்பு (CLAP - Cisco LaunchPad Accelerator Program) ஆகியவை இணைந்து முன்னோடியான தொழில்நுட்பத் தொழில்முனைவோர் தொடரை நடத்த உள்ளது.
- ❖ இந்தியத் தொழில்நுட்பத் தொழில்முனைவோர் தொடர் ஆனது கேரளாவில் உள்ள கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட உள்ளது.
- ❖ இது நவம்பர் 15 ஆம் தேதி தொடங்கி நவம்பர் 19 ஆம் தேதி அன்று முடிவடையும்.
- ❖ இந்த முன்முயற்சியானது புதிய காலச் சவால்களைத் தீர்ப்பதற்கு வேண்டி புதிய நிறுவனங்களைச் செயல்படுத்தும் வகையில் புதுமை மற்றும் ஒத்துழைப்புக்கான ஒரு தளத்தை வழங்கும்.

## பாராளுமன்ற நட்புறவுச் சங்கம்

- இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து தங்களது "பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை" புத்துயிர் பெறச் செய்துள்ளன.
- இதன் தலைவராக அமைச்சர் சமல் ராஜபக்சே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இலங்கையின் வெளியுறவு விவகாரங்கள் துறை அமைச்சர் G.L. பீரிஸ் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான "நெருக்கமான நாகரீக உறவுகளை" பற்றி குறிப்பிட்டார்.
- இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஒரு மிகப் பெரிய கொடை பௌத்தம் என்றும் அவர் குறிப்பிட்டார்.
- இந்தச் சங்கமமானது இரு நாடுகளுக்கும் இடையேயான பாராளுமன்றப் பரிமாற்றங்களை "புத்துயிர் பெறச் செய்யவும்" அவற்றின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் உதவும்.
- இந்தியாவிடமிருந்து உரங்களை வாங்க முடிவு செய்ததையடுத்து இலங்கை அரசானது இந்தியா-இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவை உருவாக்கியது.



## அன்னபூர்ணா தேவியின் சிலை



- சமீபத்தில் கனடாவில் இருந்து கண்டெடுக்கப்பட்ட அன்னபூர்ணா தேவியின் சிலை ஒன்று வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் மீண்டும் வைக்கப்பட உள்ளது.
- இந்தச் சிலையானது 100 ஆண்டுகளுக்கு முன்பு வாரணாசியில் இருந்து திருடப்பட்டது.
- இதன் உயரம் 17 செ.மீ., அகலம் 9 செ.மீ., தடிமன் 4 செ.மீ ஆகும்.

## சக்தி 2021

- இந்திய ராணுவமானது பிரான்சு நாட்டு ராணுவத்துடன் இணைந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தும் பயிற்சியான 6வது சக்தி 2021 என்ற ஒரு பயிற்சியினை நடத்துகிறது.
- ஏற்கெனவே 2021 ஆம் ஆண்டில் இந்தியா பிரான்சு நாட்டுடன் இணைந்து கூட்டுக் கடற்படைப் பயிற்சிகள் மற்றும் விமானப்படை பயிற்சிகள் போன்றவற்றை நடத்தியது.
- சக்தி 2021 பயிற்சியானது நவம்பர் 15 முதல் நவம்பர் 26 வரை பிரான்சிலுள்ள ஃப்ரீஜஸ் நகரில் நடத்தப்படுகிறது.
- இந்தப் பயிற்சியில், இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கோர்க்கா ரைபிள்ஸ் காலாட்படை பிரிவின் வீரர் குழு பங்கேற்கும்.

## மாநிலங்களவையின் புதியப் பொதுச் செயலாளர்

- P.P.K. ராமாச்சார்யுலு அவர்களுக்குப் பதிலாக பிரமோத் சந்திர மோடி மாநிலங்களவையின் புதியப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.
- அதே சமயம் ராமாச்சார்யுலு ஒரு வருடக் காலத்திற்கு ஆலோசகராக மறு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- ராமாச்சார்யுலு தற்போது மாநிலங்களவைச் செயலகத்தில் ஆலோசகராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- பிரமோத் சந்திர மோடி 1982 ஆம் ஆண்டு குழுமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இந்திய வருவாய் பணி அதிகாரியும் மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் முன்னாள் தலைவரும் ஆவார்.

## ஹபீப்கஞ்ச் இரயில் நிலையத்தின் பெயர் மாற்றம்



- மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் உள்ள "அதி நவீனமான" ஹபீப்கஞ்ச் இரயில் நிலையத்திற்கு கோண்ட் இன அரசின் ராணியான கமலாபதியின் பெயரானது சூட்டப் பட்டுள்ளது.
- ராணி கமலாபதி கோண்ட் சமூகத்தின் பெருமையும் போபாலின் கடைசி இந்துமத ராணியும் ஆவார்.
- அவரது இராஜ்ஜியத்தை ஆப்கானியத் தளபதி தோஸ்த் முகமது என்பவர் வஞ்சகம் செய்து

அபகரித்தார்.

## இந்திய-தாய்லாந்து CORPAT

- இந்தியக் கடற்படைக்கும் தாய்லாந்து நாட்டின் ராயல் கடற்படைக்கும் இடையே 32வது இந்திய -தாய்லாந்து ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியானது இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடத்தப்பட்டது.
- இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஏவுகணை எதிர்ப்புக் கப்பலான இந்தியக் கடற்படைக் கப்பல் (INS) கர்முக், மற்றும் கம்ரோசின் ரக நீர்மூழ்கி எதிர்ப்பு ரோந்துக் கப்பலான ஹச்.டி.எம்.எஸ், தாய்லாந்து நாட்டுக் கப்பல் (HTMS) தயோன்சன் ஆகியவை இரண்டு நாட்டின் கடற்படைகளின் கடல்சார் ரோந்து விமானங்களுடன் இணைந்து CORPAT பயிற்சியில் பங்கேற்கின்றன.
- CORPAT என்ற பயிற்சியானது இரு நாட்டின் கடற்படைகளுக்கு இடையே புரிதல் மற்றும் இயங்குந் தன்மையை உருவாக்குகிறது.
- இது சட்டவிரோதமான முறையில் அறிவிக்கப்படாமல் (IUU - Illegal Unreported Unregulated) மீன்பிடித்தல், போதைப்பொருள் கடத்தல், கடல்சார் பயங்கரவாத நடவடிக்கைகள், ஆயுதமேந்திய கொள்ளை மற்றும் கடற்கொள்ளை போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் ஒடுக்குவதற்குமான நடவடிக்கைகளை நிறுவுவதற்கும் இது உதவுகிறது.

## சாத்விக் சான்றிதழ்




- இந்திய இரயில்வே சமையல் மற்றும் சுற்றுலாக் கழகமானது இந்திய சாத்விக் சபையுடன் இணைந்து “சைவ இரயில்களை” அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.
- இந்த இரயில்கள் குறிப்பாக மத வழிபாட்டுத் தலங்களுடன் இணைக்கப்படும்.
- “சாத்விக் சான்றிதழானது” இந்திய சாத்விக் சபையினால் வழங்கப்படுகிறது.
- தற்போது, புதுடெல்லி முதல் காத்ரா வரையில் இந்திய இரயில்வே சமையல் மற்றும் சுற்றுலாக் கழகமானது ‘வந்தே பாரத் இரயிலை’ இயக்கி வருகிறது.
- இந்த இரயிலுக்கு ‘சாத்விக் சான்றிதழ்’ வழங்கப்பட உள்ளது.
- வந்தே பாரத் மட்டுமின்றி, 18 இதர இரயில்களுக்கும் இந்திய சாத்விக் சபை சான்றிதழ் அளிக்க உள்ளது.

## TVS மோட்டார் நிறுவனம்

- TVS மோட்டார் நிறுவனமானது ஐக்கிய நாடுகளின் உலகளாவிய ஒப்பந்தத்தில் இணைந்துள்ளது.
- ஐக்கிய நாடுகளின் உலகளாவிய ஒப்பந்தமானது உலகின் மிகப்பெரிய தன்னார்வ பெரு நிறுவன சுற்றுச்சூழல் நிலைத்தன்மை முன்னெடுப்பாகும்.
- TVS மோட்டார் நிறுவனமானது இந்த ஒப்பந்தத்தில் இணைந்த முதலாவது இந்திய இரு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகன உற்பத்தி நிறுவனமாகும்.
- TVS மோட்டார் நிறுவனமானது ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு இலக்குகளை, குறிப்பாக நிலையான சுற்றுச்சூழல் மேம்பாட்டு இலக்குகளை மேம்படுத்தும் கூட்டுத் திட்டங்களிலும் ஈடுபட உள்ளது.

## உலகின் முதலாவது வணிகப் பங்குதாரர் திட்டம்

- பாரத்பே நிறுவனமானது தனது வணிகப் பங்குதாரர்களுக்காக உலகின் முதலாவது வணிகப் பங்குதாரத் திட்டத்தினைத் தொடங்கியது.
- இது 100 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ், பாரத்பே நிறுவனம், தனது வணிக வாடிக்கையாளர்கள் அதன் பங்குதாரர் ஆவதற்குமான வாய்ப்பினையும் வழங்குகிறது.
- இந்த நிறுவனமானது 2024 ஆம் ஆண்டுக்குள் பொதுப் பட்டியலை வெளியிடத் திட்டமிட்டு 1 பில்லியன் டாலர் மதிப்பில் பொதுப் பட்டியலையும் இலக்காக நிர்ணயித்துள்ளது.

## பதவி நீட்டிப்பிற்கான புதிய அவசரச் சட்டங்கள்




- இந்தியாவின் மத்திய அரசானது அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்பு ஆகியவற்றின் இயக்குநர்களுடைய பதவிக் காலத்தை 5 ஆண்டுகள் வரை நீட்டிப்பதற்கான இரண்டு அவசரச் சட்டங்களை வெளியிட்டது.
- தற்போது அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளின் இயக்குநர்கள் 2003 ஆம் ஆண்டு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையச் சட்டத்தினால் 2 ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கப்படுகின்றனர்.
- அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்புகளின் இயக்குநர்களை முதலில் 2 ஆண்டுக் காலத்திற்கு நியமிக்கலாம்.

- எனினும் தேவைப்பட்டால் அவர்களின் பதவிக் காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கலாம்.
- 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு வேண்டி ஒவ்வொரு வருடமும் தனித்தனி நீட்டிப்பு உத்தரவுகள் அளிக்க வேண்டும்.
- எனினும் அமலாக்க இயக்குநரகம் மற்றும் மத்தியப் புலனாய்வு அமைப்பின் இயக்குநர்களின் தனது 5 ஆண்டு பதவிக் காலத்தை நிறைவு செய்த பிறகு எந்தவொரு பதவி நீட்டிப்பும் வழங்கப் படக் கூடாது.

## இந்தியாவின் சூரியசக்தி செயல்திறன் - 45 GW

- கடந்த ஏழு ஆண்டுகளில் தனது சூரியசக்தி செயல்திறன் ஆனது 17 மடங்கு அதிகரித்து உள்ள நிலையில் இந்தியாவின் சூரியசக்தி செயல்திறன் சுமார் 45 ஜிகா வாட்டாக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை உச்சி மாநாட்டில் இந்தியா தெரிவித்துள்ளது.
- இந்திய நாடு உலக மக்கள்தொகையில் 17 சதவீதத்தைக் கொண்டுள்ளது என்பதையும் அதன் வரலாற்று ரீதியான ஒட்டுமொத்த உமிழ்வுகளில் 4 சதவீதம் மட்டுமே இந்தியாவின் பங்கு என்பதையும் இந்தியா உணர்த்தியுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்தக் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தில் 15 சதவிகிதமானது வளிமண்டலத்தில் இருந்து LULUCF (Land Use, Land-Use Change, and Forestry - நிலப் பயன்பாடு, நிலப் பயன்பாட்டு மாற்றம் மற்றும் வனவியல்) மூலம் அகற்றப் பட்டது.

## COP26 மாநாட்டில் இந்தியாவின் 5 உறுதிப்பாடுகள்




- பிரதமர் நரேந்திர மோடி, இந்திய நாட்டின் பருவநிலைச் செயல் திட்டமானது வகுக்கப் பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, 2070 ஆம் ஆண்டுக்குள் இந்தியா தனது நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு இலக்கை எட்டி விடும் என்று தெரிவித்தார்.
- பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கு "மிகவும் கடினமாக" உழைத்து வரும் இந்தியா ஐந்து உறுதிமொழிகள் அல்லது 'அமிர்த தத்வா' என்பதினைப் பூர்த்தி செய்யும் என பிரதமர் மோடி உலகிற்கு அறிவித்தார்.

- உறுதிமொழி 1 - 2030 ஆம் ஆண்டுக்குள், இந்தியா தனது புதைபடிவம் சாராத எரிசக்தி திறனை 500 ஜிகா வாட்டாக உயர்த்தும்.
- உறுதிமொழி 2 - 2030 ஆம் ஆண்டுக்குள், இந்தியா தனது ஆற்றல் தேவைகளில் 50 சதவீதத்தைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யும்.
- உறுதிமொழி 3 - இந்தியா தற்போதைய ஆண்டு முதல் 2030 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் மொத்த கார்பன் உமிழ்வுகளில் ஒரு பில்லியன் டன்கள் வரை குறைக்கும்.
- உறுதிமொழி 4 - 2030 ஆம் ஆண்டுக்குள், இந்தியா தனது பொருளாதாரத்தில் நிலவும் கார்பன் தீவிரத்தை 45 சதவீதத்திற்கும் கீழே குறைக்கும்.
- உறுதிமொழி 5 - 2070 ஆம் ஆண்டுக்குள் இந்தியா நிகர சுழிய உமிழ்வு என்ற இலக்கை அடையும்.

## ஒருங்கிணைந்த உயிரிச் சுத்திகரிப்பு ஆலைகள் - COP 26

- 'மிஷன் இன்னோவேஷன்' என்ற திட்டத்துடன் இணைந்து, இந்தியா ஒருங்கிணைந்த உயிரிச் சுத்திகரிப்பு ஆலைகள் என்ற ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- ஒருங்கிணைந்த உயிரிச் சுத்திகரிப்பு ஆலைகள் குறித்த திட்டத்தினை இந்தியா மற்றும் நெதர்லாந்து இணைந்து செயல்படுத்தும்.
- புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான எரிபொருள்கள், இரசாயனங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றிற்குப் பதிலாக உயிரி சார்ந்த மாற்று எரிபொருள்களின் பயன்பாட்டைக் கொண்டு வருவதில் இந்த திட்டமானது ஈடுபாடு செலுத்தும்.
- இது உமிழ்வைக் குறைத்து, கடினமானது முதல் மிதமான விளைவுகள் உள்ள துறைகளுக்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சார்ந்த மாற்று முறையை வழங்கி, கிராமப் புறங்களில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும்.

## நோரோ வைரஸ்

- கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் முதலாவது நோரோ வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப் பட்டது.
- நோரோ வைரஸ் என்பது விலங்குகளால் பரவும் ஒரு நோய் ஆகும்.
- இது அசுத்தமான நீர் மற்றும் உணவு மூலம் பரவுகிறது.
- நோரோ வைரஸ் என்பது இரைப்பைக் குடல் நோயை (gastrointestinal illness) ஏற்படுத்தும் வைரஸ்களின் குழுவினைச் சேர்ந்ததாகும்.




### Tech NEEV@75

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் ஆனது ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்வின் ஒரு பகுதியாக "Tech NEEV@75" என்ற நிகழ்ச்சியைத் துவக்கியது.
- இது சமமான உள்ளார்ந்தப் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதில் சமூகத்திற்கு அதிகாரமளிப்பதில் அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளின் தாக்கத்தை எடுத்துக் காட்டும் வகையிலான ஓராண்டு முழுவதுமான ஒரு கொண்டாட்டமாகும்.
- இது ஒரு 75 மணி நேர நிகழ்ச்சியாகும்.
- ஆத்ம நிர்பார் பாரத் நோக்கிய இந்தியாவின் முன்னேற்றம் குறித்த 75 தாக்கம் நிறைந்த கதைகளின் தொகுப்பினையும் இது உள்ளடக்கியது.

### பூர்வாஞ்சல் விரைவுவழிச் சாலை




- உத்தரப்பிரதேச மாநிலத்தின் சுல்தான்பூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 341 கிமீ நீளமான பூர்வாஞ்சல் விரைவு வழிச் சாலையை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி

வைத்தார்.

- இந்த விரைவுவழிச் சாலை ஆனது அந்த மாநிலத்தின் தலைநகரான லக்னோவை காசிப்பூருடன் இணைக்கிறது.
- இந்த விரைவுவழிச் சாலையின் முக்கிய அம்சமானது, இந்திய விமானப் படையின் போர் விமானங்களை அவசர காலங்களில் தரையிறக்குவதற்கும் புறப்படுவதற்கும் உதவும் வகையில் 3.2 கி.மீ நீளமுள்ள ஒரு விமான தளத்தினைக் கொண்டதாகும்.
- பூர்வாஞ்சல் விரைவுவழிச் சாலையானது லக்னோ மாவட்டத்தில் உள்ள சௌத்சராய் எனும் கிராமத்தில் தொடங்கி 31வது தேசிய நெடுஞ்சாலையினூடே அமைந்த ஹைடாரியா என்ற கிராமத்தில் முடிவடைகிறது.
- இந்த விரைவுவழிச் சாலையானது 6 வழிச்சாலையைக் கொண்டுள்ளதோடு, எதிர் காலத்தில் இது 8 வழிச்சாலையாகவும் விரிவுபடுத்தப்படும்.

## நுண்ணுயிர்க் கொல்லி மருந்து நுகர்வு

- நுண்ணுயிர் எதிர்ப்பிற்கான தடுப்பு மீதான உலகளாவிய ஆராய்ச்சி (GRAM) திட்ட அமைப்பானது லான்செட் புவிக் கிரக ஆரோக்கியம் குறித்த ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது.
- கடந்த இருபது ஆண்டுகளில் உலகளவில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளின் நுகர்வு விகிதமானது 46% அதிகரித்துள்ளது என்று இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.
- தெற்காசியாவில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளின் நுகர்வு விகிதம் ஆனது 116% என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

## புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்

- தேசிய அனல்மின் கழகமானது இந்திய எண்ணெய்க் கழக நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் ஒத்துழைப்பினை உருவாக்கி குறைந்த கார்பன்/முழு நேர புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்குவதற்கான வாய்ப்புகளை இரு நிறுவனங்களும் ஆய்வு செய்வதற்கான ஒரு திட்டமாகும்.
- இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்குகளை அடைதல் மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைத்தல் போன்ற நாட்டின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு அளிக்கும் வகையில், இந்தியாவின் இரண்டு முன்னணி தேசிய எரிசக்தி நிறுவனங்கள் மேற் கொள்ளும் இது போன்ற முதல் வகையான ஒரு புதுமையான முன்னெடுப்பாகும்.

## பூமி சம்வாத்

- ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது இந்திய நிலப்பதிவு ஆவணங்களை டிஜிட்டல் முறையில் நவீனமயமாக்கும் திட்டம் குறித்த தேசிய அளவிலான ஒரு பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்தது.
- தேசிய நிலப்பதிவு ஆவணங்களை நவீனமயமாக்கும் ஒரு திட்டத்தை மேம்படுத்தும் வகையில் இந்தப் பயிலரங்கமானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- பல்வேறு மாநிலங்கள் இந்தத் துறையில் உள்ள சிறந்த நடைமுறைகளை

ஒன்றோடொன்று பகிர்ந்து கொள்ளவும், சமீபத்திய மென்பொருள் வளர்ச்சிகள் பற்றி அறிந்து கொள்ளவும் இந்தப் பயிலரங்கமானது வழிவகை செய்யும்.

## இ-ஷ்ரம் இணைய தளம்

- இ-ஷ்ரம் இணைய தளத்தில் 7.86 கோடிக்கும் அதிகமான பதிவுகள் பதிவு செய்யப் பட்டு உள்ளன.
- இந்த எண்ணிக்கையில்,
  - 40.5 சதவீதம் பேர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்,
  - 27.4 சதவீதம் பேர் பொதுப் பிரிவினர்,
  - 23.7 சதவீதம் பேர் பட்டியல் சாதியினர் மற்றும்
  - 8.3 சதவீதம் பேர் பட்டியல் பழங்குடியினர் என்ற முறையில் பதிவு செய்துள்ளனர்.
- இ-ஷ்ரம் இணையத் தளமானது முறைசாராத தொழிலாளர்கள் குறித்த இந்தியாவின் முதல் மையப்படுத்தப்பட்ட தரவுத் தளமாகும்.
- இந்தியாவில் உள்ள முறைசாராத துறை சார்ந்த தொழிலாளர்களின் சமூகம் சார்ந்த சுய விவரங்களின் குறிகாட்டிகளை வழங்குவதால் இந்த மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.




## புல் களஞ்சியம்

- 2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தியாவின் முதல் 'புல் களஞ்சியம்' அல்லது 'ஜெர்ம்ப்ளாஸ்ம் (மூலவுரு) வளங்காப்பு மையம் 'உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள அல்மோரா மாவட்டத்தின் ராணிகேட் என்னுமிடத்தில் திறக்கப்பட்டது.
- இந்தக் களஞ்சியத்திற்கு மத்திய அரசின் CAMPA (காடு வளர்ப்பு இழப்பீட்டு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையம்) திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்படுகிறது.

- புல் வகைகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தவும், இத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் இது உருவாக்கப்பட்டது.

## ராஷ்ட்ர ரக்சா சம்பர்பன் பர்வ்

- உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஜான்சி எனுமிடத்தில் 3 நாள் அளவிலான ராஷ்ட்ர ரக்சா சம்பர்பன் பர்வ் என்ற நிகழ்வு நடைபெறுகிறது.
- நவம்பர் 19 ஆம் தேதி ராணி லட்சுமி பாயினுடைய பிறந்தநாள் ஆகும்.
- அவர் வீரம் மற்றும் மன உறுதியின் உருவகமும், ராஷ்டிர ரக்சா மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சிறப்பு மிக்க ஒரு தேசிய சின்னமும் ஆவார்.

- 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' நிகழ்வின் ஒரு பகுதியாக, ராஷ்ட்ர ரக்சா சம்பர்பன் பர்வ் நிகழ்வானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 17 முதல் நவம்பர் 19 வரை ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த நிகழ்வானது உத்தரப் பிரதேச அரசுடன் இணைந்து பாதுகாப்புத் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## மிகவும் மாசடைந்த நகரங்கள் - IQAir

- டெல்லி, கொல்கத்தா மற்றும் மும்பை ஆகியவை உலகின் மிகவும் மாசடைந்த நகரங்கள் பட்டியலில் முதல் பத்து இடங்களில் உள்ளன.
- சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பருவநிலை குழுவான IQAir என்பதனுடைய காற்றின் தரம் மற்றும் மாசுற்ற நகரக் கண்காணிப்புச் சேவை அமைப்பின் தரவுகளில் இந்தத் தகவலானது கூறப்பட்டுள்ளது.
- டெல்லி நகரானது 556 என்ற காற்றுத் தரக் குறியீட்டுடன் முதலிடத்திலும், கொல்கத்தா மற்றும் மும்பை ஆகியவை இதில் முறையே 177 மற்றும் 169 என்ற காற்றுத் தரக் குறியீடுகளுடன் 4வது மற்றும் 6வது இடங்களிலும் உள்ளன.
- மிகவும் மாசடைந்த நகரங்களின் பட்டியலில் லாகூர் நகரம் முதலிடத்தில் உள்ளது.

## மருந்துத் துறையின் முதலாவது உலகப் புத்தாக்க உச்சி மாநாடு

- "மருந்துத் துறையின் முதலாவது உலகப் புத்தாக்க உச்சி மாநாட்டினை" பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த உச்சி மாநாடானது, அரசாங்கம், கல்வித்துறை, தொழில்துறை, முதலீட்டாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் குழுமங்களைச் சேர்ந்த முக்கியமான இந்திய மற்றும் சர்வதேசப் பங்குதாரர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியாவின் மருந்துத் துறையில் ஒரு புதுமை படைக்கும் சூழலை உருவாக்கச் செய்வதற்கான முன்னுரிமைகள் பற்றி விவாதிப்பதற்கும் அவற்றை மூலோபாயப் படுத்துவதற்கும் ஆகும்.
- இந்த உச்சி மாநாடானது, வளர்ச்சிக்கான பெரும் திறன்கள் கொண்ட இந்திய மருந்துத் துறையில் உள்ள வாய்ப்புகளை எடுத்துக்காட்டுகிறது.

## 'தண்ணீரின் நாயகர்கள் - உங்கள் கதைகளைப் பகிருங்கள்' போட்டி

- ஜல் சக்தித் துறை அமைச்சகமானது 'தண்ணீரின் நாயகர்கள் - உங்கள் கதைகளைப் பகிருங்கள்' என்றப் போட்டியினை 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 01 முதல் தொடங்க உள்ளது.
- இந்தியா முழுவதிலும் உள்ள சிறப்பான தண்ணீர் வளங்காப்பு மற்றும் மேலாண்மை நடைமுறைகளை ஊக்குவிக்கும் மற்றும் சேகரிக்கும் நோக்கத்துடன் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தண்ணீர் வளத்துறையில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கிலான இந்தியாவின் இத்தகைய முயற்சிகளை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.




## பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா

- பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழுவானது, பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்ட அமலாக்கத்தினை 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை தொடர்வதற்கும், இடதுசாரி தீவிரவாத அமைப்புகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலை இணைப்புத் திட்டத்தினை 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை தொடர்வதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மூன்று திட்டங்களின் கீழ் திட்டமிடப்பட்ட பணிகள் முடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இந்த காலக் கெடுவானது நீட்டிக்கப்பட்டுள்ளது.




*தொடரப்பட வேண்டியதன் அவசியம்*

- கோவிட் பொது முடக்கம், நீண்டநாட்களாக பெய்து வரும் மழை, குளிர்காலம், வனம் சார்ந்த பிரச்சனைகள் போன்ற காரணங்களால், வடகிழக்கு மற்றும் மலைப் பகுதியிலுள்ள மாநிலங்களில் பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் கீழ் பெரும்பாலான பணிகள் நிலுவையில் உள்ளன.
- மேலும், கிராமப்புற பொருளாதாரம் தொடர்பான இந்த முக்கியமானப் பணிகளை முடிப்பதற்கான கால அவகாசத்தை நீட்டிக்குமாறு பல மாநிலங்கள் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.
- சாலை இணைப்புப் பெறாத குடியிருப்புப் பகுதிகளுக்கு, அனைத்து வானிலைகளிலும் பயணிக்கும் வகையிலான சாலைகளை அமைப்பதன் மூலம் போக்குவரத்து வசதிகளை வழங்குவதே இதன் நோக்கம் ஆகும்.

## 16வது வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை 2021




- 16வது வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கையானது (கிராமப்புறம்) பிரதாம் என்ற அறக் கட்டளையால் வெளியிடப்பட்டது.
- கிராமப்புற இந்தியா முழுவதும் உள்ள 5 முதல் 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் அடிப்படை வாசிப்புத் திறன் மற்றும் எண்கணித செயல்திறன் உள்ளிட்ட பள்ளிக் கல்வி நிலை குறித்த அறிக்கைகளை வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கையானது வழங்குகிறது.
- 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அரசுப் பள்ளிகளில் சேரும் குழந்தைகளின் விகிதத்தில் ஒட்டு மொத்தமாக உயர்வு ஏற்பட்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- சேர்க்கை வீதமானது 64.3 சதவீதத்திலிருந்து 65.8% ஆக அதிகரித்துள்ளது.
- ஆனால் 2021 ஆம் ஆண்டில், சேர்க்கை வீதமானது திடீரென 70.3% ஆக அதிகரித்தது.

## மூன்று விவசாய சட்டங்கள் ரத்து




- 2021 ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தான் ஆற்றிய உரை ஒன்றில், மூன்று விவசாயச் சட்டங்களையும் மத்திய அரசு ரத்து செய்ய உள்ளதாக அறிவித்தார்.
- 2021 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் இந்தச் சட்டங்கள் ரத்து செய்யப்படும்.
- இந்தியா முழுவதும் நடைபெறும் விவசாயிகளின் போராட்டத்திற்கு வழி வகுத்த அந்த மூன்று சட்டங்களாவன
    - வேளாண் பொருட்களின் வர்த்தகம் மற்றும் வணிகம் (மேம்பாட்டு மற்றும் வசதி) சட்டம், 2020
    - அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) சட்டம், 2020
    - விவசாயிகளுக்கான (அதிகாரமளிப்பு மற்றும் பாதுகாப்பு) விலையுறுதி மற்றும் வேளாண் சேவைகள் சட்டம், 2020.

## LIGO நிறுவனம்



- ஹிங்கோலி வருவாய்ப் பிரிவானது மகாராஷ்டிரா மாநிலத்தில் சுமார் 225 ஹெக்டேர் அளவிலான நிலங்களின் உரிமைகளை லேசர் குறுக்கீட்டு அளவி புவி ஈர்ப்பு அலை ஆய்வகத்திற்கான துணிகர (LIGO) நிறுவனத்தின் அதிகாரிகளிடம் ஒப்படைத்தது.

- நாட்டிற்குள் முதன்மை வசதிகளை ஒழுங்கமைப்பதற்காக இந்த நிலங்களானது ஒப்படைக்கப் பட்டது.
- இந்த முயற்சியானது விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு ஈர்ப்பு அலைகள் பற்றிய ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கான சில மாற்றுகளை வழங்கும்.
- LIGO என்பது காஸ்மிக் ஈர்ப்பு அலைகளைக் கண்டறிவதற்கும் அது குறித்து சில சோதனைகளை மேற்கொள்வதற்குமான ஒரு பெரிய ஆய்வகமாகும்.

## பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளுக்கான கல்வி நிறுவனத்தின் பெயர் மாற்றம்

idsa
INSTITUTE FOR DEFENCE STUDIES & ANALYSES
रक्षा अध्ययन एवं विश्लेषण संस्थान



- இந்த நிறுவனத்தின் பெயரானது மனோகர் பாரிக்கர் பாதுகாப்பு ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளுக்கான கல்வி நிறுவனம் என மாற்றப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் நிகழ்ந்த தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒரு பதவி ஒரே ஓய்வூதியத் திட்டச் செயலாக்கம் (One Rank One Pension scheme) ஆகியவற்றின் போது மனோகர் பாரிக்கர் ஆற்றிய ஒரு சிந்தனைமிக்கத் தலைமைத்துவத்திற்காக வேண்டி நினைவு கூறப்படுகிறார்.

## சங்கல்ப் நடவடிக்கை



- சங்கல்ப் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இந்தியக் கடற்படையானது தற்போது திரிகண்ட் எனப்படும் இந்தியக் கடற்படைக் கப்பலினைப் பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவில் நிறுத்தியுள்ளது.
- திரிகண்ட் என்பது ஒரு அதிநவீன வழிகாட்டுதலுடன் கூடிய ரேடாரிலிருந்து தப்பிக்கக் கூடிய போர்க் கப்பல் ஆகும்.
- சங்கல்ப் நடவடிக்கையானது பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவில் இந்தியாவின் வர்த்தகக் கடல்பரப்பின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

## மின்னணு போர் அமைப்பு – சக்தி

- விசாகப்பட்டினம் எனும் இந்தியக் கடற்படைக் கப்பலில் முதலாவது மேம்பட்ட மின்னணு போர் அமைப்பான சக்தி எனும் அமைப்பானது, ஐ.என்.எஸ். விக்ராந்த் எனும் கப்பலில் நிறுவப்பட்டு வருகிறது.
- ‘சக்தி’ எனப்படும் மேம்பட்ட போர் அமைப்பானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் இராணுவ மின்னணு ஆராய்ச்சி ஆய்வகத்தினால் வடிவமைக்கப் பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.
- அவை பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.
- சக்தி என்பது இந்தியக் கடற்படையின் முதன்மையான போர்க் கப்பல்களுக்கான ஒருங்கிணைந்த ரேடார் மின்னணு போர் அமைப்பாகும்.

## 4ஜி கைபேசி இணைப்புச் சேவை வழங்கும் திட்டம்

- 7,000 கிராமங்களுக்கு 4ஜி கைபேசி இணைப்புச் சேவைகளை வழங்கும் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- சத்தீஸ்கர், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் உள்ள கிராமங்களில் இவை செயல்படுத்தப்பட உள்ளன.
- இந்த உயர்நோக்கு லட்சியத் திட்டத்திற்கு அனைவருக்குமான சேவைக் கட்டுப்பாட்டு நிதியத்தால் (Universal Service Obligation Fund) நிதியளிக்கப்படும்.



## தேசிய மாணாக்கர் படையின் முன்னாள் மாணவர்கள் சங்கம்




- தேசிய மாணாக்கர் படையின் முன்னாள் மாணவரான பிரதமர் நரேந்திர மோடி, 'தேசிய மாணாக்கர் படையின் முன்னாள் மாணவர்கள் சங்கத்தினை' துவக்கி வைத்தார்.
- ஜான்சியில் நடந்த 'ராஷ்ட்ர ரக்சா சமர்பன் பர்வ்' நிகழ்ச்சியின் நிறைவின் போது அந்த சங்கத்தின் முதல் உறுப்பினராக அவர் தன்னைப் பதிவு செய்து கொண்டார்.

## 82வது அகில இந்திய சபாநாயகர்கள் மாநாடு




- இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் சிம்லா நகரில் 82வது அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டினை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- 'ஒரே நாடு, ஒரே சட்டமியற்றும் தளம்' என்ற கருத்தினை மோடி அவர்கள் இதில் முன் வைத்தார்.
- இந்தியாவில் உள்ள சட்டப் பேரவைகளின் உயர்நிலை அமைப்பான அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டு அமைப்பானது 2021 ஆம் ஆண்டில் தனது நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடுகிறது.

- இதன் முதல் மாநாடானது 1921 ஆம் ஆண்டில் சிம்லா நகரில் நடைபெற்றது.
- சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் சகோதரரான மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் வித்தல்பாய் படேல், 1925 ஆம் ஆண்டில் மத்தியச் சட்டப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.
- இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்காக இயற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க மசோதாவும் இந்த அவையில் தான் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவானது 1925 ஆம் ஆண்டில் மோதி லால் நேரு அவர்களால் முன் மொழியப் பட்டு லாலா லஜபதி ராய் அவர்களால் வழி மொழியப் பட்டது.
- இதில் மாநிலச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்காமல், அதைத் திரும்பி அனுப்புவதற்கான காரணங்களை ஏன் தெரிவிப்பதில்லை என்று தமிழக சட்டப் பேரவைத் தலைவர் M.அப்பாவு கேள்வி எழுப்பினார்.
- சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சில மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் இருக்கும் (சில) ஆளுநர்களை சுட்டிக் காட்டி, எந்தவொரு மசோதாவின் மீதும் முடிவெடுப்பதற்கு ஒரு பிணைப்பு காலக்கெடுவை உருவாக்கவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## தேசியப் பொது ஆவணப் பதிவு அமைப்பு

- இது ஆவணங்கள் மற்றும் சொத்துக்களைப் பதிவு செய்வதற்கான 'ஒரே நாடு ஒரே மென்பொருள்' (ஒன் நேஷன் ஒன் சாப்ட்வேர்) என்ற ஒரு முன்னெடுப்பாகும்.
- இது தேசியத் தகவல் மையத்தினால் முழுவதுமாக உருவாக்கப்பட்ட ஒரு மேம்பட்ட மென்பொருள் பயன்பாடு ஆகும்.

## 5ஜி மொபைல் போன்




- லாவா இன்டர்நேஷனல் என்ற நிறுவனமானது உள்நாட்டு நுகர்வோருக்கு 5ஜி திறன் பேசிகளை அறிமுகப்படுத்திய முதல் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.

- இது இந்தியாவில் லாவா நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு 'அக்னி' என்ற பெயரின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்டது.
- உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள ஆலையில் இது தயாரிக்கப்படுகிறது.

## அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இந்திரா காந்தி பரிசு 2021

- பிரதாம் அமைப்பிற்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளையால் இவ்விருது வழங்கப்படுகிறது.
- பிரதாம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம், இந்தியாவிலும் உலகெங்கிலும் உள்ள ஆதரவற்றக் குழந்தைகளுக்கான கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வருகிறது.
- இது 1995 ஆம் ஆண்டில் மும்பையில் டாக்டர் மாதவ் சவான் மற்றும் ஃபரிதா லம்பே ஆகியோரால் நிறுவப்பட்டது.




## ஸ்வச் சர்வேக்சன் 2021

- 'ஸ்வச் அம்ரித் மஹோத்சவ்' என்ற நிகழ்ச்சியின் போது இந்தியாவின் தூய்மையான 342 நகரங்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் விருதுகளை வழங்கினார்.
- இது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் ஸ்வச் பாரத் மிஷன் - நகர்ப்புறம் 2.0 என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- சுமார் 4320 நகரங்களில் கணக்கெடுப்பு மேற்கொண்டதன் மூலம் உலகின் ஒரு மிகப் பெரிய தூய்மை நிலைக் கணக்கெடுப்பாக இது மாறியுள்ளது.
- 1 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் பிரிவில் இந்தூர் நகரம் தொடர்ந்து 5வது ஆண்டாக 'தூய்மையான நகரம்' என்ற விருதினைப் பெற்று உள்ளது.
- அதைத் தொடர்ந்து சூரத் மற்றும் விஜயவாடா ஆகியவை முறையே 2வது மற்றும் 3வது இடங்களில் உள்ளன.
- வாரணாசி 'சிறந்த கங்கை நகரம்' என்ற விருதையும் அகமதாபாத் இராணுவக் குடியிருப்புப் பகுதி 'இந்தியாவின் தூய்மையான இராணுவக் குடியிருப்புப் பகுதி' என்ற விருதையும் வென்றுள்ளன.

- 100க்கும் மேற்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கொண்ட மாநிலங்கள் பிரிவில் சத்தீஸ்கர் தொடர்ந்து 3வது ஆண்டாக இந்தியாவின் 'தூய்மையான மாநிலம்' என்ற விருதைப் பெற்றுள்ளது.
- '100க்கும் குறைவான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கொண்ட மாநிலங்கள்' என்ற பிரிவில் ஜார்க்கண்ட் இரண்டாவது முறையாக இந்தியாவின் 'தூய்மையான மாநிலம்' என்ற விருதை வென்றது.
- '100க்கும் மேற்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கொண்ட மாநிலங்கள்' பிரிவில் 'வேகமாக இயங்கி வரும் மாநிலமாக' கர்நாடக மாநிலம் உருவெடுத்துள்ளது.
- '100க்கும் குறைவான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கொண்ட மாநிலங்கள்' என்ற பிரிவில் 'வேகமாக இயங்கி வரும் மாநிலமாக' மிசோரம் மாநிலம் உருவெடுத்துள்ளது.
- இதில் மகாராஷ்டிரா 92 விருதுகளையும், சத்தீஸ்கர் 67 விருதுகளையும் பெற்றுள்ளன.

  - Cleanest City: Indore
  - Cleanest Ganga town: Varanasi
  - Cleanest State (with more than 100 urban local bodies): Chhattisgarh
  - Cleanest State (with less than 100 urban local bodies): Jharkhand
  - Cleanest City (with less than one lakh population): Vita city of Maharashtra
  - Cleanest small city (1-3 lakh population): New Delhi Municipal Council
  - Cleanest medium city (3-10 lakh population): Noida
  - Cleanest big city' (10-40 lakh population): Navi Mumbai
  - Cleanest cantonment board: Ahmedabad cantonment
  - Cleanest District: Surat
  - Fastest Mover small city: Hoshangawad, Madhya Pradesh
  - Best Small City in Citizens' Feedback: Triputi, Maharashtra
  - Top city in Safaimitra Suraksha Challenge: Navi Mumbai

## 56வது டிஜிபிக்கள்/ஐஜிபிக்கள் மாநாடு

- லக்னோவில் நடைபெற்ற 56வது காவல்துறைத் தலைமை இயக்குநர் (டிஜிபி)/ பொதுக் காவல்துறை ஆய்வாளர் (ஐஜிபி) மாநாட்டின் நிறைவு விழாவில் பிரதமர் மோடி உரையாற்றினார்.
- அடிமட்டக் காவல் தேவைகளுக்காக எதிர்கால தொழில்நுட்பங்களைப் பின்பற்றச் செய்வதற்கு உயர்-சக்தி காவல் தொழில்நுட்ப இயக்கத்தை அமைக்க அவர் அழைப்பு விடுத்தார்.

## IPF குடிமக்கள் திருப்தி கணக்கெடுப்பு - ஸ்மார்ட் போலிசிங், 2021

- இது இந்தியக் காவல்துறை அறக்கட்டளை மூலம் நடத்தப்பட்டது.
- காவல்துறை மீதான ஒரு பொது நம்பிக்கையின் கண்ணோட்டத்தில் குடிமக்களின் கருத்துகளை அளவிடுவதற்கு இது ஒரு கணக்கெடுப்புக் கட்டமைப்பை உருவாக்கியது.
- இதில் ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, அசாம், கேரளா மற்றும் சிக்கிம் ஆகியவை ஒட்டுமொத்தமாக அதிக மதிப்பெண் பெற்ற முதல் ஐந்து மாநிலங்களாகும்.

- கீழே இருந்து மேல் நோக்கி பீகார், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் உள்ளன.
- பீகார் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலங்கள் கிட்டத்தட்ட அனைத்துப் பிரிவுகளிலும் மோசமான நிலையில் உள்ளன.

**INDIAN POLICE FOUNDATION**

## ராணி கைடின்லியு பழங்குடியினச் சுதந்திரப் போராளிகள் அருங்காட்சியகம்

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மணிப்பூரில் உள்ள லுவாங்காவ் கிராமத்தில் ராணி கைய்டின்லியு பழங்குடியினச் சுதந்திரப் போராட்ட அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- லுவாங்காவ் கிராமம் ஒரு புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீராங்கனையான ராணி கெய்டின்லியுவின் பிறப்பிடமாகும்.
- தனது13 வயதில், மணிப்பூரில் உள்ள ஹெராகா சமய இயக்கத்தில் அவர் சேர்ந்தார்.
- அவ்வியக்கம் மணிப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள நாகா வசிப்பிடப் பகுதிகளில் இருந்து ஆங்கிலேயர்களை விரட்டியடிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- 1932 ஆம் ஆண்டு தனது 16வது வயதில் கைய்டின்லியு ஆங்கிலேயர்களால் கைது செய்யப் பட்டார்.
- 1937 ஆம் ஆண்டில் ஷில்லாங் சிறையில் கைடின்லியுவைச் சந்தித்த ஜவஹர்லால் நேரு அவருக்கு "ராணி" என்ற பட்டத்தை வழங்கினார்.
- இறுதியாக 1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு சிறையில் இருந்து அவர் விடுவிக்கப் பட்டார்.



## ஐஎன்எஸ் விசாகப்பட்டினம்

- இது மும்பையில் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
- இது P15B வகையின் ரேடாரில் சிக்காத, வழி நடத்தப்படுகின்ற, ஏவுகணையினை அழிக்கும் முதலாவது கப்பல் ஆகும்.
- இந்தப் போர்க்கப்பல், டிஎம்ஆர் 249 ஏ என்ற உள்நாட்டு வகை எஃகு மூலம் கட்டப் பட்டு உள்ளது.
- இது இந்தியாவின் மிகப்பெரிய ஏவுகணை அழிப்பான்களில் ஒன்றாகும்.
- இது விசாகப்பட்டினம் என்ற அழிக்கும் வகையிலான போர்க் கப்பல்களுள் நான்குக் கப்பல்களுள் முதல் கப்பல் இந்தியக் கடற்படையில் சேர்ந்துள்ளதைக் குறிக்கிறது.




## சிறந்த காவல் நிலையம்




- நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களின் தரவரிசை ஆண்டுதோறும் உள்துறை அமைச்சகத்தால் நடத்தப்படுகிறது.
- குற்ற விகிதம் மற்றும் விசாரணை போன்ற அளவுருக்களின் அடிப்படையில் இவை தீர்மானிக்கப் படுகின்றன.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் பட்டியலின் படி, டெல்லியின் வடக்கு மாவட்டத்தில் உள்ள சதர் பஜார் காவல் நிலையம் நாட்டிலேயே சிறந்ததாக உள்ளது.

- அதைத் தொடர்ந்து ஒடிசாவின் கஞ்சத்தில் உள்ள கங்காபூர் காவல் நிலையம் உள்ளது.
- ஹரியானாவின் ஃபதேஹாபாத்தில் பட்டுக் கலன் (Bhattu Kalan), வடக்கு கோவாவில் வால்போய் மற்றும் கர்நாடகாவின் ராய்ச்சூரில் உள்ள மான்வி காவல் நிலையம் ஆகியன முறையே மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் உள்ளன.
- லட்சத்தீவு ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள காட்மத் தீவு காவல் நிலையம் ஆறாவது இடத்திலும், மகாராஷ்டிராவின் சாங்கிலியில் உள்ள ஷிராலா காவல் நிலையம் ஏழாவது இடத்திலும், தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியில் உள்ள தொட்டியம் காவல் நிலையம் எட்டாவது இடத்திலும் உள்ளது.

## ஹெர்குலஸ் நடவடிக்கை

- இந்திய விமானப்படை மற்றும் இந்திய இராணுவம் ஆகியவை இணைந்து நாட்டின் வடக்குப் பிரிவு பகுதியில் ஒரு மாபெரும் கூட்டு விமானப் படைப் பயிற்சியினை மேற்கொண்டன.
- இந்தப் பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்டவை C-17, IL-76 மற்றும் An-32 ஆகிய விமானங்கள் ஆகும்.

## ஆதார் ஹேக்கத்தான் 2021

- இந்தியத் தனித்துவ அடையாள ஆணையமானது இந்த நிகழ்வை நடத்தியது.
- இது ஆதார் குழுவினால் நடத்தப்படும் முதல் நிகழ்வாகும்.
- தகவல் தொழில்நுட்பத் துறையில் இளம் கண்டுபிடிப்பாளர்களை அடையாளம் காணச் செய்வதை இது இலக்காகக் கொண்டுள்ளது.
- ஹேக்கத்தான் என்பது நிரலாக்க நிபுணர்கள் ஒரு குறிப்பிட்ட குறுகிய காலகட்டத்தில் ஒன்று கூடி ஒரு திட்டத்திற்கான ஒத்துழைப்பினைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு நிகழ்வு ஆகும்.




## சிறந்த கடல்சார் மாநிலம்

- மீன்வளத் துறையால், இந்தியாவின் சிறந்த கடல்சார் மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் அறிவிக்கப் பட்டுள்ளது.

*முன்னணி மாநிலங்கள்*

- உள்நில (நாட்டின் உள்புறம்) மாநிலங்கள் : தெலங்கானா

- மலைப் பாங்கான மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் : திரிபுரா

*முன்னணி மாவட்டங்கள்*

- சிறந்த கடல்சார் மாவட்டம் : ஒடிசாவின் பாலசோர்
- சிறந்த உள்நில மாவட்டம் : மத்தியப் பிரதேசத்தின் பாலகாட்
- சிறந்த மலைப்பாங்கான மற்றும் வடகிழக்கு மாவட்டம் : அசாமின் போங்கைகான்.




## வீரதீர விருதுகள் 2021



- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள், டெல்லியிலுள்ள இராஷ்டிரபதி பவனில் நடைபெற்றப் பாதுகாப்புத் துணிகர சாகச விழாவில் வீரதீர விருதுகள் மற்றும் சிறப்பான சேவைகளுக்கான விருதுகளை வழங்கினார்.
- ஆயுதப்படை அதிகாரிகளின் துணிச்சல் மற்றும் தியாகத்தினைப் போற்றும் வகையில் இந்திய அரசானது வீரதீர விருதுகளை வழங்கத் தொடங்கியது.

- இந்த விருதுகளின் முன்னுரிமை வரிசையானது பரம் வீர் சக்ரா, அசோக் சக்ரா, மகாவீர் சக்ரா, கீர்த்தி சக்ரா, வீர் சக்ரா மற்றும் சௌரியா சக்ரா ஆகியனவாகும்.
- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றத் தாக்குதலில் பாகிஸ்தான் போர் விமானங்களைப் பின்னடையச் செய்ததில் தான் ஆற்றியப் பங்கிற்காக அணித் தலைவர் அபிநந்தன் வர்த்தமானுக்கு வீர் சக்ரா விருதானது வழங்கப் பட்டது.
- ஜம்மு & காஷ்மீரில் நடைபெற்ற ஒரு ராணுவ நடவடிக்கையில் தீவிரவாதிகளை ஒடுக்கியதற்காக வேண்டி இந்தியாவின் இரண்டாவது உயரிய அமைதிக்கால வீரதீர விருதான கீர்த்தி சக்ரா விருதானது பிரகாஷ் ஜாதவ் (அவரின் மரணத்திற்குப் பின்) என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்திய விமானப்படைத் தலைவர் விவேக் R. சவுதாரி மற்றும் கடற்படைத் தலைமைத் தளபதி துணை அட்மிரல் R. ஹரிக் குமார் ஆகியோரும் பரம் விசிஷ்ட் சேவா என்ற பதக்கத்தைப் பெற்றனர்.

## நிலையான மேம்பாட்டு இலக்குகளின் நகர்ப்புற குறியீடு மற்றும் முகப்புப் பலகை 2021-22

- நிதி ஆயோக் அமைப்பானது இந்தியாவின் இம்மாதிரியிலான முதலாவது குறியீட்டு மாதிரியினை வெளியிட்டது.
- நிலையான மேம்பாட்டு இலக்குகள் மீதான கட்டமைப்பின் 46 இலக்குகளில் 77 SDG குறிகாட்டிகளின் அடிப்படையில் 56 நகர்ப்புறப் பகுதிகளை இது தரவரிசைப் படுத்தி உள்ளது.
- இது நீடித்த மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகளை உள்ளூர்மயமாக்குவதை மேலும் வலுப்படுத்ததுவதையும், நகர அளவில் வலிமைமிக்க ஒரு நிலையான மேம்பாட்டுக் கண்காணிப்பினை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் சிம்லா முதலிடத்தில் உள்ள நிலையில், கோயம்பத்தூர் மற்றும் சண்டிகர் ஆகியவை அதனைத் தொடர்ந்து உள்ளன.
- இந்தக் குறியீட்டின் அடிமட்ட நிலையில் ஹரியானாவின் ஃபரிதாபாத், கொல்கத்தா மற்றும் ஆக்ரா ஆகியவை உள்ளன.



## நகர்ப்புற இந்தியாவில் சுகாதார நல நிலை




- இந்தியாவிலுள்ள 17 வட்டார தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அசீம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் இந்த அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது இந்தியா முழுவதும் உள்ள நகரங்களில் நிலவும் சுகாதாரப் பாதிப்புகள் மற்றும் ஏற்றத் தாழ்வுகளை ஆய்வு செய்கிறது.
- நகர்ப்புறங்களில் உள்ள செல்வச் செழிப்புமிக்க மக்களை விட ஏழை மக்களில் ஆண்களின் ஆயுட்காலம் 9.1 ஆண்டுகள் குறைவாகவும் பெண்களின் ஆயுட்காலம் 6.2 ஆண்டுகள் குறைவாகவும் உள்ளதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இந்திய மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர்.
- 1960 ஆம் ஆண்டில் 18% ஆக இருந்த இதன் எண்ணிக்கையானது 2001 ஆம் ஆண்டில் 28.53% ஆகவும் 2019 ஆம் ஆண்டில் 34% ஆகவும் உயர்ந்து விரைவான வளர்ச்சியைக் கண்டு வருகிறது.
- நகர்ப்புறங்களில் வாழும் சுமார் 30% பேர் ஏழை மக்கள் ஆவர்.

## மெய்நிகர் அறிவியல் ஆய்வகம்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், குழந்தைகளுக்கான இந்தியாவின் முதலாவது மெய்நிகர் அறிவியல் ஆய்வகத்தினை திறந்து வைத்தார்.
- இந்த ஆய்வகமானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் ஜிக்யாசா என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- இத்திட்டமானது இந்தியா முழுவதுமுள்ள அறிவியலாளர்களுடன் மாணவர்கள் உரையாட வழிவகுக்கும்.
- இந்த ஆய்வகமானது அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் ஆய்வகங்களை மாணவர்கள் மெய்நிகர் முறையில் பார்வையிடவும் ஆராய்ச்சிக் கட்டமைப்புப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.

## உலக முதலீட்டாளர்கள் வாரம் 2021




- பங்குச்சந்தை நிறுவனங்களான மும்பை பங்குச்சந்தை மற்றும் தேசியப் பங்குச் சந்தை ஆகியவை உலகளவில் புகழ்பெற்ற 2021 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் வாரத்தின் கொண்டாட்டங்களைத் தொடங்கின.
- மத்திய வைப்புத் தொகை சேவை (இந்தியா) நிறுவனமும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் 21 முதல் 28 வரையில் உலக முதலீட்டாளர் வாரத்தினைக் கொண்டாடுகிறது.
- இது சர்வதேசப் பத்திர ஆணையங்கள் அமைப்பினால் ஊக்குவிக்கப்படும் ஒரு வார அளவிலான உலகளவிலான ஒரு கொண்டாட்டமாகும்.
- இந்தியா முழுவதிலும் முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி இந்த நிகழ்வானது கொண்டாடப் படுகிறது.

## பாரத் கௌரவ் திட்டம்




- இந்திய இரயில்வே நிறுவனமானது "பாரத் கௌரவ்" என்ற ஒரு புதிய திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், சுற்றுலாச் சேவை வழங்கும் தனியார் நிறுவனங்கள் இரயில்வே நிர்வாகத்திடமிருந்து இரயில்களைக் குத்தகையாகப் பெற்று அவர்கள் விருப்பத் தெரிவிற்கு ஏற்ப எந்த (சுற்றுகளில்) பாதையில் வேண்டுமானாலும் இயக்கலாம்.
- இதற்காக இரயில் நிர்வாகம் தோராயமாக 150 ரயில்களுக்கு இணையாக 3033 ICF (ஒருங்கிணைந்த இரயில்பெட்டித் தொழிற்சாலை) பெட்டிகளை ஒதுக்கியுள்ளது.

## பிரதான் மந்திரி கரிப் கல்யான் அன்ன யோஜனா




- ❖ மத்திய அரசானது பிரதான் மந்திரி கரிப் கல்யான் அன்ன யோஜனா என்ற திட்டத்தை நான்கு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.
- ❖ இத்திட்டத்தின் 5 ஆம் கட்டத்தின் ஒரு பகுதியாக 2021 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது
- ❖ இத்திட்டமானது கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிறகு 2020 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- ❖ இத்திட்டத்தின்கீழ், ஒரு நபருக்கு ஒவ்வொரு மாதமும் 5 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப் படுகிறன.
- ❖ நேரடிப் பயன் பரிமாற்றம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (அந்தியோதயா அன்ன யோஜனா மற்றும் முன்னுரிமையுள்ளக் குடும்பங்கள்) ஆகியவற்றின் கீழ் பயன் பெறுபவர்களுக்கும் இது பயனளிக்கிறது.

## O-SMART திட்டம்




- “பெருங்கடல் பணிகள், மாதிரிகளைச் சேகரித்தல், பயன்பாடு, வளங்கள் மற்றும் தொழில்நுட்பம்” (O-SMART: Ocean Services, Modelling, Application, Resources and Technology) என்ற திட்டமானது 2021 – 26 ஆகிய காலக் கட்டத்திற்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.
- பிரதமர் மோடி தலைமையிலான மத்தியப் பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழு இதற்கு ஒப்பதல் அளித்தது.
- O-SMART திட்டம் 7 துணைத் திட்டங்களை உள்ளடக்கியது.
- அனைத்துத் துணைத் திட்டங்களும் புவி அறிவியல் அமைச்சகத்தின் தன்னாட்சி நிறுவனங்களால் செயல்படுத்தப் படுகின்றன.

## தோஸ்தி பயிற்சி

- இந்தியா, மாலத்தீவுகள் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ‘தோஸ்தி’ எனப்படும் 15வது முத்தரப்பு கடலோரக் காவற்படைப் பயிற்சியை மாலத்தீவில் மேற்கொள்கின்றன.
- 2021 ஆம் ஆண்டானது தோஸ்தி என்ற முத்தரப்பு கடலோரக் காவற்படைப் பயிற்சியின் 30வது ஆண்டு நிறைவாகும்.
- இந்தியக் கடலோரக் காவற்படைக் கப்பல்களான ஐ.சி.ஜி.எஸ். அபூர்வா மற்றும் ஐ.சி.ஜி.எஸ். வஜ்ரா ஆகியவை எஸ்.எல்.சி.ஜி.எஸ். சுரக்சா எனும் இலங்கை கடற்படைக் கப்பலுடன் இணைந்து இப்பயிற்சியில் ஈடுபட்டன.

## தேசியத் தொழிற்பயிற்சித் திட்டம்

- பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழுவானது தேசியத் தொழிற்பயிற்சித் திட்டத்தினை அடுத்த 5 ஆண்டுகளுக்குத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2021-22 முதல் 2025-26 வரையில் இத்திட்டத்தைத் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இதன்கீழ், தொழில்துறை மற்றும் வணிக அமைப்புகள் தோராயமாக 9 லட்சம் பயிலர்களுக்குப் பயிற்சி வழங்கும்.

## மைசூர் பிரகடனம்

- ❖ 16 மாநிலங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் மைசூர் பிரகடனத்தில் கையெழுத்து போட்டுள்ளனர்.
- ❖ இதன் கீழ் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் நாட்டில் உள்ள பஞ்சாயத்துகளின் மூலமான பொதுவான குறைந்தபட்சச் சேவை வழங்கீடானது செயல்படுத்தப்பட உள்ளது.
- ❖ இந்தப் பிரகடனமானது குடிமக்களை மையமாக கொண்ட சேவைகளை ஆளுமையின் இதயமாக (மையமாக) அங்கீகரிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தப் பிரகடனமானது பஞ்சாயத்து அமைப்புகளால் நேரடியாக வழங்கப்படும் சேவைகள் மற்றும் ஒரு கண்காணிப்புச் செயல்முறையின் மூலம் பஞ்சாயத்து அமைப்புகளால் வழங்கப்படும் பிற துறை சார்ந்த சேவைகள் ஆகியவை பற்றி கூறுகிறது.

## தேசியக் குடும்ப மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பு

**Hunger watch**

The nutritional status of children in India barely improved in 2019-20 from the levels in 2015-16, the National Family Health Survey-5 data show

(IN %)



| Indicator | 2019-20 | 2015-16 | 2005-06 |
|---|---|---|---|
| Children aged six to 59 months who are anaemic | 67.1 | 58.6 | 69.4 |
| Children under five who are stunted | 35.5 | 38.4 | 48 |
| Children under five who are wasted | 19.3 | 21 | 19.8 |
| Children under five who are severely wasted | 7.7 | 7.5 | 6.4 |
| Children under five who are underweight | 32.1 | 35.8 | 42.5 |
| Children aged six to 23 months receiving an adequate diet | 11.3 | 9.6 | - |
| Institutional births | 88.6 | 78.9 | 38.7 |

- ❖ 5வது தேசியக் குடும்பம் மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பானது வெளியிடப் பட்டு உள்ளது.
- ❖ இது நாட்டின் சமூகப் பொருளாதாரம் மற்றும் சுகாதாரக் குறிகாட்டிகள் மீதான மிக விரிவான ஒரு கணக்கெடுப்பாகும்.
- ❖ முந்தையக் கணக்கெடுப்புகள் 1992-93, 1998-99, 2005-06 மற்றும் 2015-16 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்டன.
- ❖ இந்தக் கணக்கெடுப்புகள் அனைத்தும் மும்பையில் உள்ள மக்கள்தொகை அறிவியலுக்கான சர்வதேசக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப் படுகின்றன

*முக்கிய தகவல்கள்*

- ❖ 2019-2021 ஆகிய ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 1020 பெண்கள் இருந்தனர்.

- 1881 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதலாவது நவீன ஒத்திசைவு மக்கள்தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு தேசியக் குடும்பம் மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்புகளிலும் இதுவே மிக அதிகப் பாலின விகிதமாகும்.
- மக்கள்தொகையானது ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு அதனை மாற்றிக் கொள்ளும் ஒரு நிலைக்கு வரும் என்று எதிர்பார்க்கும் ஒரு வரம்பிற்கும் கீழாக மொத்தக் கருவுறுதல் வீதம் சரிந்துள்ளது.
- 2019-2021 ஆம் ஆண்டில் 2 ஆக இருந்த மொத்தக் கருவுறுதல் வீதமானது 2.1 என்ற அளவிலான மாற்றுக் கருவுறுதல் வீதத்தை விடச் சற்று குறைவாக இருந்தது.
- குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவானது மேம்பட்டுள்ள அதே சமயத்தில் அது மெதுவான வேகத்திலேயே மேம்பட்டுள்ளது.
- இந்தியா உணவுப் பாதுகாப்பு நிலையினை அடைந்திருந்தாலும், 60% இந்தியர்கள் ஊட்டச் சத்து மிக்க உணவுகளை வாங்க இயலாத நிலையிலேயே உள்ளனர்.

## 37வது CORPAT ரோந்துப் பயிற்சி

- 37வது இந்திய-இந்தோனேசிய ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியானது இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடத்தப் பட்டது.
- பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக ஓர் ஆண்டில் இரண்டு முறை CORPAT பயிற்சி நடத்தப் படுகிறது.
- இந்தப் பயிற்சியானது 2002 ஆம் ஆண்டில் முதல்முறையாக நடத்தப்பட்டது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியக் கடற்படைக் கப்பலான கஞ்சர் மற்றும் டார்னியர் கடல்சார் ரோந்து விமானம் ஆகியவை CORPAT பயிற்சியில் ஈடுபட்டன.
- இந்தோனேசியக் கடற்படைக் கப்பல் KRI சுல்தான் தாஹா சைஃபுதீன் (376) (Thaha Syaifuddin) இந்தோனேசியா சார்பாக இப்பயிற்சியில் ஈடுபட்டது.



## ஐ.என்.எஸ் வேலா



- ஐ.என்.எஸ். வேலா என்றக் கப்பலானது இந்தியக் கடற்படையில் மேற்கத்தியப் படைப் பிரிவில் (மும்பை) இணைக்கப் பட்டது.
- இது இந்திய கடற்படையின் திட்டமான 75 என்ற திட்டத்தின் 4வது ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல் ஆகும்.
- திட்டம் 75 ஆனது 6 ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டமைப்பதற்கான ஒரு திட்டமாகும்.
- ஐ.என்.எஸ். வேலா கப்பலானது நேவல் குரூப் ஆஃப் ஃபிரான்சு (Naval Group of France) என்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்து மும்பையிலுள்ள மசகான் என்ற கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டது.

## நொய்டா சர்வதேச விமான நிலையம்




- உத்தரப் பிரதேசத்தின் ஜேவார் என்னுமிடத்தில் நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்குப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- ஜேவார் விமான நிலையமானது டெல்லி-தேசிய தலைநகர்ப் பகுதியில் உள்ள 2வது சர்வதேச விமான நிலையமாகும்.
- இது உத்தரப் பிரதேசத்தில் உள்ள 5வது சர்வதேச விமான நிலையமாகும்.
- இந்தியாவிலேயே தற்போது அதிக சர்வதேச விமான நிலையங்களைக் கொண்ட ஒரு மாநிலமாக உத்தரப் பிரதேசம் மாறியுள்ளது.

- கட்டி முடிக்கப் பட்டவுடன், இது நாட்டின் மிகப்பெரிய விமான நிலையமாக இருக்கும்.
- இந்தியாவில் இது முதலாவது சுழியக் கரிம உமிழ்வு கொண்ட விமான நிலையமாக இருக்கும்.

## இந்தியா: உலக வேதிப் பொருள் & பெட்ரோலிய வேதிப் பொருட்கள் உற்பத்தி மையம் மீதான 2வது உச்சி மாநாடு 2021

- உலக வேதிப் பொருள் & பெட்ரோலிய வேதிப் பொருட்கள் உற்பத்தி மையம் மீதான 2வது உச்சி மாநாடானது புது தில்லியில் தொடங்கப்பட்டது.
- இந்த உச்சி மாநாடானது வேதிப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய வேதிப் பொருட்கள் துறையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.
- இந்த மாநாடு இந்திய வேதிப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய வேதிப் பொருட்கள் துறையின் செயல்திறனை உலகிற்கு எடுத்துரைக்கிறது.
- ஆந்திரப் பிரதேசம், ஒடிஸா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகியன இந்த நிகழ்வில் பங்குதார மாநிலங்களாக பங்கேற்கின்றன.




## ஊதிய விகிதக் குறியீட்டின் புதிய வெளியீடு




- மத்தியத் தொழிலாளர் அமைச்சகமானது 2016 ஆம் ஆண்டினை ஒரு அடித்தளமாகக் கொண்டு ஊதிய விகிதக் குறியீட்டின் புதிய வெளியீட்டினை வெளியிட்டுள்ளது.
- பொருளாதார மாற்றங்களின் தெளிவான விவரங்களை வழங்குவதற்கும் ஊழியர்களின் ஊதிய முறையைப் பதிவு செய்வதற்குமான முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகளுக்காக ஊதிய விகிதக் குறியீட்டின் அடிப்படை ஆண்டினை அரசு அவ்வப்போது மாற்றி அமைக்கிறது.

- 2016 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட இந்த குறியீடானது (100) 1963-65 ஆம் ஆண்டு வெளியான பழைய வெளியீட்டிற்கு மாற்றாக அமையும்.

## விதைகளை அடைதலுக்கான குறியீடு – 2021

- உள்நாட்டு விதை உற்பத்தித் துறையில் அதிகளவில் உலக விதைத் தொழில்துறையின் முதலீடுகளை ஈர்க்கும் 6 தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும்.
- இது விதைகளை அடைதலுக்கான குறியீட்டின் (2021) 3வது பதிப்பின் படி உள்ளது.
- இந்தக் குறியீடானது உலக தரப்படுத்துதல் கூட்டணியின் ஒரு பகுதியாக வெளியிடப் பட்டது.
- இந்தக் குறியீடானது, சிறு விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான உலகின் முன்னணி விதை நிறுவனங்களின் முயற்சிகளை மதிப்பிட்டு ஒப்பிடுகிறது.
- இதில் 21 நிறுவனங்கள் 9 நாடுகளில் அதன் செயல்முறை மையங்களைக் கொண்டு உள்ளன.
- அவற்றுள் 17 நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன.

## தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் கிரையோ ஜெனிக் ராக்கெட் எஞ்சின்




- ஹைதராபாத்தில் அமைந்துள்ள ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் (Skyroot Aerospace) எனப்படும் விண்வெளி தொழில்நுட்பப் புத்தாக்க நிறுவனமானது தவான் – 1 எனும் ஒரு எஞ்சினை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
- இது தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது முழுவதும் கிரையோஜெனிக் தொழில்நுட்பம் கொண்ட ராக்கெட் எஞ்சின் ஆகும்.
- இது பயன்பாட்டிற்கு வர உள்ள விக்ரம் – 2 எனும் சுற்றுப்பாதை ஏவு கலத்தின் மேல்நிலைகளுக்கு ஆற்றல் ஊட்டும்.
- தவான்-1 என்பது முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் எஞ்சின் ஆகும்.

- இது மீவெப்ப உலோகக் கலவைக் கொண்ட முப்பரிமாண அச்சிடல் முறையில் (3D printing with a superalloy) உருவாக்கப்பட்டது.
- முப்பரிமாண அச்சிடல் முறையின் பயன்பாடானது சுமார் 95% உற்பத்தி நேரத்தைக் குறைத்துள்ளது.
- இந்த எஞ்சின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் திரவ ஆக்சிஜன் கொண்டு எரியூட்டப் படுகிறது.

## நதி நகரங்கள் கூட்டணி

- ஜல் சக்தி அமைச்சகமானது சமீபத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்துடன் இணைந்து நதி நகரங்கள் என்ற கூட்டணியைத் தொடங்கியுள்ளது.
- இது நகர்ப்புறங்களின் வழியே பாயும் நதிகளின் நிலையான மேலாண்மைக்காக வேண்டிய கருத்துகளை உருவாக்கவும், அவற்றை விவாதிக்கவும் மற்றும் அது பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்குமான ஒரு பிரத்தியேக தளமாகும்.
- இந்தக் கூட்டணியானது கட்டமைத்தல், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு போன்ற மூன்று பரந்த கருத்துருக்கள் மீது ஈடுபாடு செலுத்தும்.
- கங்கைப் படுகையிலுள்ள நகரங்களில் இந்தக் கூட்டணி தொடங்கப்பட்டாலும் அதற்கு அப்பால் உள்ள நகரங்களுக்கும் இது நீட்டிக்கப்பட்டது.




## தக்சின் சக்திப் பயிற்சி

- இந்திய தரைப் படை, கடற்படை மற்றும் விமானப் படை மற்றும் இதர துணை ராணுவப் படைகள் ஆகியவற்றின் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியான 'தக்சின் சக்தி' இராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டத்தில் நவம்பர் 26 அன்று நிறைவடைந்தது.
- இந்தப் பயிற்சியானது நவம்பர் 20 அன்று தொடங்கியது.
- ஆயுதப் படைகள், விண்வெளித் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பிரிவுகளிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினை நிறுவுவதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கோவிட்-19 தொற்றிற்கான நேசல் ஸ்ப்ரே மருந்து (நாசித் தெளிப்பு மருந்து)




- ITC நிறுவனமானது கோவிட்-19 தொற்றினைத் தடுப்பதற்கான நேசல் ஸ்ப்ரே என்ற வகை மருந்தினை (நாசி மூலம் உட்செலுத்தப்படும் மருந்து) உருவாக்கி வருவதாகவும் அதற்கான மருத்துவப் பரிசோதனைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் உறுதி செய்து உள்ளது.
- இது பெங்களூருவிலுள்ள ITC வாழ்க்கை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் அறிவியலாளர்களால் உருவாக்கப்பட்டது.
- தேவையான அனைத்து ஒழுங்குமுறை ஒப்புதல்களையும் பெற்ற பிறகு சேவ்லான் என்ற தயாரிப்பின் பெயரில் இதனைச் சந்தைப்படுத்த இந்த நிறுவனம் திட்டம தீட்டியுள்ளது.

## 5 மில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெய் வழங்கீடு

- இந்தியா முதன்முறையாக தனது மூலோபய பெட்ரோலிய இருப்புகளிலிருந்து, சுமார் 5 மில்லியன் பீப்பாய் என்ற அளவில் கச்சா எண்ணெயை வெளியிட திட்டமிட்டுள்ளது.
- இது உலகளவில் கச்சா எண்ணெய் விலையைக் குறைப்பதற்கு என்று அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரிய ஆகிய நாடுகளுடன் இணைந்து ஆலோசித்து மேற்கொள்ளப்படுகிறது.
- கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதிகளிலுள்ள 3 இடங்களில் நிலத்தடிக் குழிகளில் சுமார் 38 மில்லியன் பீப்பாய்களில் கச்சா எண்ணெயை இந்தியா சேமித்து வைத்துள்ளது.
- 5 மில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெயானது விசாகப்பட்டினத்திலுள்ள இந்துஸ்தான் பெட்ரோலியக் கழக நிறுவனம் மற்றும் மங்களூருவிலுள்ள மங்களூரு சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோலிய வேதிப்பொருட்கள் நிறுவனம் ஆகிய அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

## சாகர் சக்தி பயிற்சி

- சாகர் சக்தி பயிற்சியானது கட்ச் தீபகற்பத்தின் கடற்கழிப் பகுதியில் நடத்தப் பட்டது.
- இது 4 நாட்கள் அளவிலான ஒரு மாபெரும் இராணுவப் பயிற்சி ஆகும்.
- இந்தப் பயிற்சியின்போது, பல பரிமாணப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை விரைவாக எதிர்கொள்வதற்கான இந்தியாவின் செயல்திறன் மற்றும் தயார் நிலையானது விரிவாக

பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

## SWADESH திட்டம்




Fig 1: Framework for SWADESH: a comprehensive platform for multimodal neuroimaging data, quality control, and data analytics. The major components are: (a) data acquisition, (b) big data management and analytics framework, and (c) visualization and applications

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்திற்கான இணை அமைச்சர் (சுயாதீனப் பொறுப்பு) டாக்டர். ஜிதேந்திர சிங் SWADESH என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- SWADESH திட்டமானது குறிப்பாக இந்திய மக்களுக்கென வடிவமைக்கப்பட்ட முதல் வகையான மிகப்பெரிய பல்முனை நரம்பியல் விவரச் சேகரிப்புத் தரவுத் தளமாகும்.
- இந்தத் தனித்துவமிக்க மூளை அறிவியல் சார்ந்த முன்னெடுப்பானது ஹரியானாவின் குர்காவ்ன் நகரிலுள்ள உயிரித் தொழில்நுட்பத் துறையின் தேசிய மூளை ஆராய்ச்சி மையத்தினால் உருவாக்கப்பட்டது.

## இந்திய இணையதள ஆளுகை மன்றம் 2021

- இது இணையதள ஆளுகை குறித்த 3 நாட்கள் அளவிலான ஒரு இணைய நிகழ்ச்சி ஆகும்.
- இதை மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் இந்தியத் தேசிய இணையப் பரிமாற்ற அமைப்பு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.
- "இணையத்தின் ஆற்றலின் மூலம் இந்தியாவிற்கு அதிகாரமளித்தல்" (Empowering India through Power of the Internet) என்ற கருத்துருவினை மையமாகக் கொண்டு இந்த நிகழ்வு நடத்தப் படுகிறது.




## ஆயுர்வேத பர்வ் – 2021

- ஆயுஷ் அமைச்சகத்தின் இணை அமைச்சர் முன்ஜ்பரா மஹேந்த்ரபாய், புதுச்சேரியில் ஆயுர்வேத பர்வ் எனும் நிகழ்வினை காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.
- ஆயுர்வேத பர்வ் – 2021 ஆனது 3 நாட்கள் அளவிலான ஒரு நிகழ்ச்சியாகும்.
- இது ஆயுர்வேதத்தினை ஊக்குவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## இந்தியாவில் பெண் வாக்காளர்களின் பங்கேற்பு

- இந்தியத் தேர்தல் ஆணையமானது புதுடெல்லியில் சர்வதேச வலையரங்கம் ஒன்றை நடத்தியது.
- "பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூத்தக் குடிமக்கள் ஆகியோரின் தேர்தல்

பங்கேற்பினை அதிகரித்தல் : சிறந்த நடைமுறைகள் மற்றும் புதிய முன்னெடுப்புகள் போன்றவற்றைப் பகிர்தல்" என்ற கருத்துருவுடன் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

- 70 ஆண்டுகள் மற்றும் 17 பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு, வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதில் பெண்களின் பங்கானது ஆண்களை விட அதிகமாகி உள்ளது என்று இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் சுசில் சந்திரா இந்த வலையரங்கில் (webinar) குறிப்பிட்டார்.
- 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெண்களின் பங்கேற்பு 67 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது.
- 1962 ஆம் ஆண்டில் –16.71% ஆக இருந்த பாலின இடைவெளி 2019 ஆம் ஆண்டில் +0.17 என்ற அளவில் மாறியுள்ளது.
- 1971 ஆம் ஆண்டு தேர்தல் முதல் கொண்டு இந்தியாவின் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 235.72% ஆக அதிகரித்துள்ளது.

## முக்கிய மந்திரி தீர்த்த யாத்திரா யோஜனா

- டெல்லி அரசானது பாகிஸ்தானிலுள்ள கர்தாபூர் சாஹிப் மற்றும் தமிழ் நாட்டிலுள்ள வேளாங்கண்ணி தேவாலயம் ஆகியவற்றை 'முக்கிய மந்திரி தீர்த்த யாத்ரா யோஜனா' என்ற தனது யாத்திரைத் திட்டத்தில் சேர்ப்பதாக அறிவித்தது.
- ஏற்கனவே உள்ள 13 யாத்திரை வழித்தடங்களைத் தவிர, அதில் மேலும் இரண்டு வழித் தடங்களைச் சேர்ப்பதற்கு டெல்லி அரசு முடிவு செய்துள்ளது.
- அந்த இரண்டு வழித்தடங்களாவன : டெல்லி-வேளாங்கண்ணி-டெல்லி மற்றும் டெல்லி-கர்தாபூர் சாகிப்-டெல்லி ஆகும்.
- பக்தர்கள் டெல்லி-வேளாங்கண்ணி-டெல்லி வழித்தடத்தில் AC-III என்ற ஒரு இரயில் பெட்டியில் பயணிப்பர்.
- கர்தாபூர் சாகிப் பகுதிக்கு, பயணிகள் குளிர்சாதன வசதி பெற்ற ஒரு பேருந்தில் பயணிப்பர்.



## பல்பரிமாண வறுமைக் குறியீட்டு அறிக்கை




- பீகார், ஜார்க்கண்ட் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியன இந்தியாவின் ஏழ்மையான மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.
- இது நிதி ஆயோக்கின் முதலாவது பல்பரிமாண வறுமை குறியீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- பீகாரில் வாழும் 51.91 சதவீதத்தினர் ஏழ்மையானவர்கள் என இந்த அறிக்கை கூறுகிறது.
- இதனைத் தொடர்ந்து ஜார்க்கண்ட் (42.16%), மற்றும் உத்தரப் பிரதேசம் (37.79%) ஆகியவை உள்ளன.
- ஏழ்மையில் முதலில் உள்ள 5 மாநிலங்கள் பீகார், ஜார்க்கண்ட், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் மேகாலயா ஆகியனவாகும்.
- அதே சமயத்தில் கேரளா (0.71 சதவிகிதம்), கோவா (3.76 சதவிகிதம்), சிக்கிம் (3.82 சதவிகிதம்), தமிழ்நாடு (4.89 சதவிகிதம்) மற்றும் பஞ்சாப் (5.59 சதவிகிதம்) ஆகிய மாநிலங்கள் இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களில் ஏழ்மை குறைவாக உள்ள 5 மாநிலங்கள் ஆகும்.
- இந்தக் குறியீட்டின் படி நாடு முழுவதும் சுழிய அளவில் வறுமையினைப் பதிவு செய்த ஒரே மாவட்டம் கேரளாவின் கோட்டயம் ஆகும்.
- பீகார் மாநிலம் அதிக ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் கொண்டுள்ள மக்களைக் கொண்ட ஒரு மாநிலமாகவும் உள்ளது.
- இதனைத் தொடர்ந்து ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை உள்ளன.

## ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில் கட்டமைப்பு



- ❖ புதுடெல்லியின் பிங் லைன் என்ற இளஞ்சிவப்பு நிறக் குறியீடு கொண்ட ஒரு வழித் தடத்தில் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில் சேவை சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- ❖ இந்த நடவடிக்கையானது டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தினை உலகின் 4வது மிகப்பெரிய ஓட்டுனரல்லாத மெட்ரோ இரயில் கட்டமைப்பாக மாற்றியுள்ளது.
- ❖ மஜிலிஸ் பூங்காப் பகுதியை சிவ் விகார் பகுதியுடன் இணைக்கும் பிங் லைன் வழித் தடமானது தலைநகரில் உள்ள நீளமான மெட்ரோ வழித் தடமாகும்.
- ❖ மேலும் புதுடெல்லியில் ஓட்டுனரல்லாத மெட்ரோ இரயில் சேவை இயக்கப்படும் 2வது மெட்ரோ வழித்தடமும் இதுவாகும்.
- ❖ 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், தாவரவியல் பூங்கா பகுதியினை ஜனக்பூரி மேற்குப் பகுதியுடன் இணைக்கும் டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தின் மெஜந்தா வழித் தடத்தில் நாட்டின் முதலாவது ஓட்டுனர் இல்லாத மெட்ரோ இரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.

## இந்தியாவின் அதிக பயன்பாடுடைய தயாரிப்புகள் 2021

- ❖ அமேசான், ஆசியன் பெயின்ட்ஸ் மற்றும் டாடா ஆகியவை 2021 ஆம் ஆண்டில் தொழில் நுட்பம், FMCG அல்லாத மற்றும் FMCG (Fast-Moving Consumer Goods/அதிகம் விற்பனை செய்யப் படும் நுகர்வுப் பொருட்கள்) பிரிவுகளில் இந்தியாவின் அதிகப் பயன்பாடு கொண்டுள்ள தயாரிப்புகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.
- ❖ இது கன்தார் சோவ்ஸ் (Kantar shows) எனப்படும் ஒரு நுண்ணறிவு மற்றும் ஆலோசக நிறுவனத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட பிரான்ட்ஸ் இந்தியா (BrandZ India) என்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- ❖ தொழில்நுட்பப் பிரிவில் அமேசான், உணவு விநியோகத் தளமான சொமாட்டோ, கூகுளின் யூடியூப், உணவு விநியோகத் தளமான ஸ்விகி மற்றும் வால்மார்டின் ஃபிளிப்கார்ட் ஆகியவை உள்ளன.
- ❖ FMCG அல்லாத பிரிவில், ஆசியன் பெயின்ட்ஸ், ஜியோ, சாம்சங், எம்ஆர்எஃப், டாடா ஹவுசிங் மற்றும் ஏர்டெல் ஆகியவை உள்ளன.
- ❖ FMCG பிரிவில் டாட்டா டீ, சர்ஃப் எக்செல், தாஜ் மஹால், மேகி, பாராசூட், பிரிட்டானியா ஆகியவை உள்ளன.
- ❖ 2020-21 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் அதிகப் பயன்பாடுகளைக் கொண்டுள்ளத்

தயாரிப்புகளுக்கான கன்தார் பிராண்ட்ஸ் தரவுத் தளமானது 418 தயாரிப்புகளின் தகவல்களை உள்ளடக்கியது.




# சர்வதேசச் செய்திகள்

## நீர்வாழிடங்களில் நெகிழி மாசுபாடு




- 'மாசுபாடு முதல் தீர்வு வரை: கடலிலுள்ள குப்பைகள் மற்றும் நெகிழி மாசுபாடு குறித்த

உலகளாவிய மதிப்பீடு' என்ற அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.

- இந்த அறிக்கையானது சுற்றுச்சூழலில் கடல் குப்பைகள் மற்றும் நெகிழி மாசுபாடுகளின் தாக்கம் மற்றும் சூழலமைவு, வனவிலங்கு மற்றும் மனிதர்களில் அவற்றின் விளைவுகள் குறித்து வெளிப்படுத்துகிறது.
- கடலிலுள்ள நெகிழிகளின் அளவானது சுமார் 75 – 199 மில்லியன் டன்கள் என இந்த அறிக்கையில் மதிப்பிடப் பட்டுள்ளது.
- சரியான நடவடிக்கை எடுக்கப் படவில்லையெனில் நீர்வாழிடங்களில் குவியும் நெகிழிக் கழிவுகளின் அளவானது 2040 ஆம் ஆண்டுக்குள் கிட்டத்தட்ட 3 மடங்காகும் என கணிக்கப் பட்டுள்ளது.

## உமிழ்வு இடைவெளி அறிக்கை 2021

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் 2021 ஆம் ஆண்டு உமிழ்வு இடைவெளி அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- இது 12வது உமிழ்வு இடைவெளி அறிக்கையாகும்.
- மற்ற நாடுகளுடனான தணிப்பு நடவடிக்கைகளுடன் சேர்ந்து தேசங்களின் புதிய பருவநிலை உறுதிப்பாடுகளானது உலக வெப்பநிலையை இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 2.7°C வரையிலான வெப்பநிலை உயர்விற்கான பாதையில் உலகை வைக்கின்றன என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட எதிர்பாராத வகையிலான 5.4% சரிவைத் தொடர்ந்து, உலகளாவிய கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுகளின் அளவுகள் மீண்டும் முந்தைய நிலைக்குத் திரும்பி வருகின்றன.
- வளிமண்டலத்திலுள்ள பசுமை இல்ல வாயுக்களின் செறிவும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.



## தீர்மானம் 2601

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது ஒரு தனித்துவமிக்க முதல் வகையிலான ஒரு தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இது கல்வி உரிமையை உடனடியாக பாதுகாக்கவும், பள்ளிகளின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் வேண்டி ஆயுதமேந்திப் போராடும் கட்சிகளை வலியுறுத்தச் செய்வதற்கான ஒரு தீர்மானமாகும்.
- 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது பள்ளிகள், குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு எதிரானத் தாக்குதல்களை வலுவாக கண்டித்து, 2601 தீர்மானத்தினை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.
- இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியாவும் வாக்களித்துள்ளது.

## இந்தியாவின் தீர்மானத்திற்கு அங்கீகாரம் – ஐக்கிய நாடுகள் பொதுச் சபை

- சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவிற்குப் பார்வையாளர் அந்தஸ்து வழங்குவதற்காக இந்தியாவினால் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு வரைவு தீர்மானமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த வரைவு தீர்மானமானது பொதுச் சபையின் 6வது குழுவில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76வது கூட்டத் தொடரானது இனி 6வது குழுவின் பரிந்துரையை முறையாக ஏற்க வேண்டும்.

## மிலு மான்

- அழிவின் விளிம்பிலிருந்து மிலு வகை மான் இனம் மீண்டு வந்தது சீனாவின் வளங்காப்பு முயற்சிகளுக்குக் கிடைத்த ஒரு அரிய வெற்றியைக் குறிக்கிறது.
- மிலு மான் (எலாபுருஸ் டேவிடியினஸ்) ஓர் அரிய மற்றும் அருகி வரும் இனமாகும்.
- பைரே டேவிட் மான் எனவும் அறியப்படும் இவ்வகை மான்கள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அழிவின் விளிம்பில் இருந்தன.
- மிலு வகை மான்கள், சீனாவின் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவையாகும்.



## மறக்கப்பட்ட இராஜ்ஜியங்கள்

- தாதானைட் மற்றும் லிஹ்யானைட் நாகரிகங்களுடன் தொடர்புடைய ‘5 இராஜ்ஜியங்கள்’ குறித்து அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள சவுதி அரேபிய இராஜ்ஜியம் முடிவு செய்துள்ளது.
- தாதானைட் மற்றும் லிஹ்யானைட் நாகரிகங்களுடன் தொடர்புடைய அருகமைந்த தளங்களில் அந்நாட்டு அரசு அகழ்வாராய்ச்சி செய்ய உள்ளது.
- இந்த இரண்டு நாகரிகங்களும் சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு முக்கியமான பிராந்திய அதிகார சக்தியாக இருந்தன.
- இந்த இராஜ்ஜியங்கள் பொது ஆண்டு 100 வரை சுமார் 900 ஆண்டுகள் நீடித்தன.

## உலகளாவிய மீத்தேன் உறுதிமொழி




- உலகளாவிய மீத்தேன் உறுதிமொழியானது ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 26வது பங்குதாரர்கள் பருவநிலை மாநாட்டின் போது வெளியிடப் பட்டது.
- இந்த உறுதிமொழியானது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இணைந்து மேற்கொண்ட ஒரு முயற்சியாகும்.
- இந்த உறுதிமொழியானது மீத்தேன் உமிழ்வின் அளவினை 2020 ஆம் ஆண்டு அளவை விட 2030 ஆம் ஆண்டுக்குள் 30% வரை குறைக்கும் நோக்கத்துடன் அறிவிக்கப் பட்டு உள்ளது.
- இந்த உறுதிமொழியானது வளிமண்டலத்தில் மீத்தேன் 2வது மிகுதியான பசுமை இல்ல வாயுவாகத் திகழ்வதால் மிகவும் முக்கியமானதாகும்.

## ஒரு சூரியன், ஓர் உலகம், ஒரு கட்டமைப்பு




- பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரிட்டின் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் இணைந்து ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 26வது பங்குதாரர்கள் பருவநிலை மாநாட்டில் "ஒரு சூரியன், ஓர் உலகம், ஒரு கட்டமைப்பு" என்ற முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளனர்.
- இந்தத் திட்டமானது உலகம் முழுவதும் சூரிய ஆற்றலை விநியோகிப்பதற்காக "நாடுகளுக்கிடையேயான தேசிய மின்சாரக் கட்டமைப்பினை" அமைப்பதற்கு என்று உருவாக்கப் பட்டதாகும்.
- இந்தத் திட்டத்தின் பின்னணியிலுள்ள நோக்கமானது "The Sun Never Sets" என்பதாகும்.
- சூரிய ஒளி ஆற்றலின் சவால்களைச் சமாளிப்பதில் இந்த திட்டமானது பயன்படுத்தப் படும்.

## கிளாஸ்கோ நகரில் வினிஷா உமாசங்கர்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த வினிஷா உமாசங்கர் சமீபத்தில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 26வது ஐ.நா. பருவநிலை மாற்றப் பங்குதாரர்கள் மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்றச் சந்திப்பில் தூய ஆற்றல் பற்றி பேசினார்.
- இந்தச் சந்திப்பானது தூய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு பற்றி விவாதித்தது.
- பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பது குறித்த நடவடிக்கையில் பேசுவதை நிறுத்தி விட்டு உடனடியாகச் செயல்பட தொடங்குமாறு அவர் உலகத் தலைவர்கள், வர்த்தக தலைவர்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகளை வலியுறுத்தினார்.
- வெற்று வாக்குறுதிகளை அளித்து அவற்றை நிறைவேற்றத் தவறிய தலைவர்கள் மீது இளைஞர்கள் கோபமும் விரக்தியும் அடைவதற்கு அனைத்துக் காரணங்களும் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




## டெசர்ட் வாரியர் பயிற்சி

- டெசர்ட் வாரியர் என்பது இந்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கு இடையேயான ஒரு இருதரப்பு இராணுவப் பயிற்சியாகும்.
- இது அந்த நாடுகளின் விமானப்படைகளுக்கிடையே நடத்தப் பெறும் பயிற்சி ஆகும்.
- இது எகிப்து நாட்டிலுள்ள எல் பெரிகாட் வான்படைத் தளத்தில் நடத்தப் பட்டது.

## உபரி ஆற்றலை விற்பனை செய்யும் நேபாளம்

- நேபாள அரசு உபரி மின்சாரத்தை இந்தியச் சந்தையில் விற்பனை செய்ய இந்தியா அனுமதி வழங்கியுள்ளது.
- நேபாளத்திடமிருந்து இந்தியா மின்சாரம் வாங்குவது இதுவே முதல்முறையாகும்.
- 39 MW திறன் மின்சாரத்தினை இந்திய ஆற்றல் பரிமாற்ற நிறுவனத்திடம் விற்பனை செய்வதற்கு மத்திய மின்சார ஆணையமானது நேபாளத்திற்கு அனுமதி வழங்கியது.
- இவை 24 MW திரிசூலி நீர்மின் நிலையம் மற்றும் 15 MW வேதிகாட் நீர்மின் நிலையம் ஆகியவற்றால் உற்பத்தி செய்யப்படும்.
- அந்த இரண்டு நீர்மின் நிலையங்களும் இந்தியாவின் உதவியுடன் உருவாக்கப்பட்டன.

## கோவிட் – 19 சிகிச்சைக்கான வாய்வழி மாத்திரை

- அறிகுறிகளுடன் கூடிய கோவிட் – 19 தொற்றிற்குச் சிகிச்சை அளிப்பதற்காக வேண்டி உலகின் முதல் மாத்திரையை பிரிட்டனின் சுகாதாரக் கட்டுப்பாளர்கள் அங்கீகரிக்கச் செய்துள்ளனர்.
- மோல்னுபிராவிர் எனும் இந்த வைரஸ் தடுப்பு மருந்தானது லேசானது முதல் மிதமானது வரையிலான கோவிட் – 19 தொற்று உள்ளவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல் மற்றும் உயிரிழப்பு அபாயம் ஆகியவற்றைக் குறைப்பதில் பாதுகாப்பானதாகவும் பயனுள்ளதாகவும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.




## சர்வதேச மீத்தேன் உமிழ்வு ஆய்வகம்




- ❖ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது G20 உச்சி மாநாட்டில் சர்வதேச மீத்தேன் உமிழ்வு ஆய்வகத்தினைத் துவக்கி வைத்துள்ளது.
- ❖ இந்த ஆய்வகமானது பசுமை இல்ல வாயு உமிழ்வினைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதற்காக தொடங்கப்பபட்டது.
- ❖ இது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் தொடங்கப் பட்டது.
- ❖ இந்த ஆய்வகமானது செயற்கைக் கோளின் மூலம் மீத்தேன் உமிழ்வினைக் கண்காணிக்கும்.

## BRICS கூட்டுப் புள்ளிவிவர வெளியீடு

- ❖ BRICS நாடுகளின் தேசியப் புள்ளிவிவர அலுவலக தலைவர்களின் 13வது சந்திப்பானது சமீபத்தில் நடத்தப் பட்டது.

- இது இந்தியாவின் தலைமையில் நடத்தப் பட்டது.
- இந்தச் சந்திப்பானது "நிலையான மேம்பாட்டு இலக்குகளைக் கண்காணிப்பதில் தேசியப் புள்ளிவிவர அலுவலகங்களின் பங்கு" என்ற கருத்துருவுடன் நடத்தப் பட்டது.




## Vax

- 'Vax'எனும் வார்த்தையானது ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியால் ஆண்டின் சிறந்த வார்த்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- Vax எனும் வார்த்தையானது 'பசு' எனப் பொருள்படும் Vacca என்ற ஒரு இலத்தீன் வார்த்தையிலிருந்துப் பெறப்பட்டது.
- Vax என்ற வார்த்தையானது நோய் ஏற்படுவதிலிருந்து உடலைப் பாதுகாப்பதற்காக ஒரு நபரின் உடலில் செலுத்தப்படும் பொருளான தடுப்பூசியைக் குறிப்பதற்கான ஒரு குறுஞ்சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.




## சீனாவில் யாஹூ சேவைகள் நிறுத்தம்

- Yahoo நிறுவனமானது சீனாவின் பிரதான நிலப்பகுதிகளில் தனது சேவையை நிறுத்தி விட்டதாக அறிவித்துள்ளது.
- அந்த நாட்டில் அதிகரித்து வரும் சவாலான வணிகம் மற்றும் சட்டச் சூழலே இதற்குக் காரணம் ஆகும்.
- இத்துடன் சீனச் சந்தையில் யாஹூ நிறுவனமானது தனது 22 ஆண்டுகாலச் சேவைகளை

முடித்துக் கொண்டது.

- முன்னதாக, அமெரிக்கத் தொழில்நுட்ப தளமான LinkedIn நிறுவனமும் சீனாவில் தனது உள்ளூர்மயமாக்கப்பட்ட சமூக ஊடக வலையமைப்பை மூடுவதாக அறிவித்தது.

## QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2022

- QS அமைப்பானது (Quacquarelli Symonds) 2022 ஆம் ஆண்டிற்கான QS உலகப் பல்கலைக் கழகத் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையில் சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக்கழகம் (NUS) தொடர்ந்து 4வது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதைத் தொடர்ந்து சீனாவின் பீக்கிங் பல்கலைக் கழகம் 2வது இடத்திலும், சிங்கப்பூரில் உள்ள நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் மற்றும் ஹாங்காங்கில் உள்ள ஹாங்காங் பல்கலைக் கழகம் ஆகியவை 3வது இடத்திலும் உள்ளன.
- மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் (பிராந்திய ரீதியாக 42வது இடத்தில்) மற்றும் டெல்லியின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் (பிராந்திய ரீதியாக 45வது இடத்தில்) ஆகியவை முதல் 50 இடங்களில் உள்ள இரண்டு இந்தியக் கல்வி நிறுவனங்களாகும்.
- கடந்த ஆண்டு 50வது இடத்தில் இருந்த சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகமானது 4 இடங்கள் பின் தள்ளி தற்போது 54வது இடத்தில் உள்ளது.
- 126 பல்கலைக் கழகங்களுடன் இந்தத் தரவரிசையில் இடம் பெற்ற சீனாவைத் தொடர்ந்து 118 இந்தியப் பல்கலைக்கழகங்களுடன் இந்தியா இடம் பெற்றுள்ளது.




## இந்தியா-பிரான்ஸ் இடையிலான உத்திசார் பேச்சுவார்த்தை

- இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள், அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அவர்களின் ராஜதந்திர ஆலோசகரான இம்மானுவேல் போன் மற்றும் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான அஜித் தோவல் ஆகியோர் வாயிலாக தங்களது இரண்டாவது உத்திசார் பேச்சுவார்த்தையை பாரீஸ் நகரில் நடத்தின.
- இந்தப் பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ்தான், இந்தோ-பசிபிக் மற்றும் கடல்சார் பாதுகாப்பைப் பலப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.




## உலக மருந்து கொள்கைக் குறியீடு

- முதலாவது உலக மருந்துக் கொள்கைக் குறியீட்டில் இடம்பெற்ற 30 நாடுகளில் இந்தியா 18வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் தீங்கு குறைப்பிற்கான கூட்டமைப்பால் வெளியிடப்பட்டது.
- நார்வே, நியூசிலாந்து, போர்ச்சுகல், ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் மனிதாபிமானம் மற்றும் சுகாதாரம் சார்ந்த மருந்துக் கொள்கைகளில் முதல் 5 நாடுகளாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- பிரேசில், உகாண்டா, இந்தோனேசியா, கென்யா மற்றும் மெக்சிகோ ஆகியவை குறைவான தரங்களைப் பெற்ற ஐந்து நாடுகள் ஆகும்.

| RANK | COUNTRY | SCORE |
|---|---|---|
| **TOP 5** | | |
| 1 | Norway | 74/100 |
| 2 | New Zealand | 71/100 |
| 3 | Portugal | 70/100 |
| 4 | UK | 69/100 |
| 5 | Australia | 65/100 |
| 18 | India | 46/100 |
| **BOTTOM 5** | | |
| 26 | Mexico | 35/100 |
| 27 | Kenya | 34/100 |
| 28 | Indonesia | 29/100 |
| 29 | Uganda | 28/100 |
| 30 | Brazil | 26/100 |

## நிலையான முறையில் நகர்ப்புறத்தைக் குளிர்மயமாக்குதல் கையேடு

- நிலையான முறையில் நகர்ப்புறத்தைக் குளிர்மயமாக்குதல் கையேடு என்பது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையாகும்.
- எதிர்காலத்தில் நகரங்கள் வாழ முடியாத அளவுக்கு வெப்பம் மிகுந்ததாக மாறும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இது நிலையான முறையில் நகர்ப்புறத்தைக் குளிர்மயமாக்குதல் பற்றிய தீர்வுகளின் கலைக் களஞ்சியமாகும்.
- உலக நகரங்கள் உலக சராசரியை விட இரண்டு மடங்கு அதிகமாக வெப்பமடைகின்றன என்று இந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நகர்ப்புற வெப்பத் தீவுகளின் தாக்கமே இதற்கான ஒரு முக்கிய காரணமாகும்.




### 17வது காலநிலை மாற்றத்திற்கான செயல்திறன் குறியீடு 2022

- இது ஜெர்மன் வாட்ச், நியூ க்ளைமேட் இன்ஸ்டிடியூட் மற்றும் க்ளைமேட் ஆக்சன் நெட்வொர்க் ஆகியவற்றால் தொகுக்கப்பட்டுள்ளது.
- இது 60 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலைத் தணிப்பு முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறது.
- அனைத்துக் குறியீட்டு வகைகளிலும் எந்த நாடும் போதுமான அளவில் செயல்படாததால், ஒட்டு மொத்தத் தரவரிசையில் முதல் மூன்று இடங்கள் காலியாக வைக்கப்பட்டுள்ளன.
- பசுமை இல்ல வாயு உமிழ்வுப் பிரிவிலும் முதல் மூன்று இடங்கள் காலியாக வைக்கப் பட்டுள்ளன.
- பசுமை இல்ல வாயு உமிழ்வின் அடிப்படையில், ஸ்வீடன், எகிப்து, சிலி மற்றும் இங்கிலாந்து ஆகியவை முதல் 7 இடங்களில் உள்ளன.
- ஒட்டு மொத்தத் தரவரிசையில் இந்தியா 69.22 புள்ளிகளுடன் 10வது இடத்தில் உள்ளது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் 'நடுத்தர' பிரிவில் இருப்பதோடு சேர்த்து, மற்ற பிரிவுகளில் இந்தியா உயர் செயல்திறன் கொண்டதாக விளங்குகிறது.
- ஒட்டு மொத்தமாக, கஜகஸ்தான் மற்றும் சவுதி அரேபியாவுடன் ஆஸ்திரேலியா, தென் கொரியா மற்றும் ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை குறைந்த செயல்திறன் கொண்ட நாடுகளாக உள்ளன.
- சீனா ஒட்டுமொத்தமாக இதில் 37வது இடத்தில் உள்ளதோடு ஒட்டு மொத்த மதிப்பீட்டில் "குறைவான" செயல்திறன் என்ற பிரிவில் உள்ளது.

**CLIMATE CHANGE PERFORMANCE INDEX**

| Rank | Country | Score |
|---|---|---|
| 4. | Denmark | 76.92 |
| 5. | Sweden | 74.46 |
| 6. | Norway | 73.62 |
| 7. | UK | 73.29 |
| 8. | Morocco | 71.64 |
| 9. | Chile | 69.66 |
| 10. | India | 69.22 |
| 11. | Lithuania | 69.06 |
| 12. | Malta | 64.39 |
| 13. | Germany | 63.82 |
| 14. | Finland | 62.74 |
| 15. | Switzerland | 61.98 |
| 16. | Portugal | 61.45 |
| 17. | France | 61.33 |
| 18. | Luxembourg | 61.03 |
| 19. | Netherlands | 60.81 |
| 20. | Ukraine | 60.52 |

**GREENHOUSE GAS EMISSIONS**

| Rank | Country | Score |
|---|---|---|
| 4. | UK | 33.93 |
| 5. | Sweden | 33.84 |
| 6. | Mexico | 32.85 |
| 7. | Chile | 32.69 |
| 8. | Malta | 31.56 |
| 9. | Morocco | 29.35 |
| 10. | India | 31.42 |
| 11. | Denmark | 31.22 |
| 12. | Morocco | 30.71 |
| 13. | Norway | 30.50 |
| 14. | Switzerland | 30.03 |
| 15. | Germany | 29.12 |
| 16. | Philippines | 28.80 |
| 17. | Ukraine | 27.38 |
| 18. | Romania | 27.37 |
| 19. | Finland | 27.21 |
| 20. | France | 26.97 |

*No rankings allotted from 1 to 3 because "no country performed well enough in all categories to achieve an overall very high rating, or did enough to lower their gas emissions"*

## FW டி கிளர்க்

- இவர் தனது 85 வயதில் காலமானார்.
- இவர் தென் ஆப்பிரிக்காவின் கடைசி வெள்ளையினத் தலைவர் ஆவார்.
- 1990 ஆம் ஆண்டில் நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்று FW டி கிளர்க் தான் அறிவித்தார்.
- 1993 ஆம் ஆண்டில் FW டி கிளர்க் மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோருக்கு நோபல் பரிசானது வழங்கப்பட்டது.
- இவர் வெள்ளையினச் சிறுபான்மையினர் ஆட்சிக் காலத்தில் இருந்த கடைசி அதிபர் ஆவார்.



- கிளர்க்கின் அரசானது தென் ஆப்பிரிக்காவில் நிறவெறி முறையை ஒழித்து மக்களாட்சியை அறிமுகப்படுத்தியது.
- இவரையடுத்து 1993 ஆம் ஆண்டில் நெல்சன் மண்டேலா தென் ஆப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபராக பதவியேற்றார்.

## உலக NCAP




- மஹிந்திரா XUV 700 வாகனமானது சமீபத்திய உலக NCAP (New Car Assessment Program) விபத்துச் சோதனையில் 5 நட்சத்திரத் தரத்தைப் பெற்றது.
- இந்த வாகனமானது முதிர்பருவப் பயணிகள் பிரிவில் 5 நட்சத்திரங்களையும், குழந்தைகள் பயணிகள் பிரிவில் 4 நட்சத்திரங்களையும் பெற்றது.
- தன்னிச்சையான அவசர தடைக்கருவியை ஒரு பாதுகாப்பு வசதியாக வழங்கிய, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, இந்திய நாட்டிற்குச் சொந்தமான முதல் நிறுவனமாக மஹிந்திரா மாறியுள்ளது.
- மஹிந்திரா XUV 300 கார் ஆனது முதிர்பருவப் பயணிகளுக்கு 5 நட்சத்திரங்களுடனும் குழந்தைப்பருவப் பயணிகளுக்கு 4 நட்சத்திரங்களுடனும் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.
- டாட்டா மோட்டார்ஸ் நிறுவனத்தின் அல்ட்ராஸ் வாகனமானது முதிர்பருவப் பயணிகளுக்கு 5 நட்சத்திரத் தரத்துடனும் குழந்தைப் பருவப் பயணிகளுக்கு 3 நட்சத்திரத் தரத்துடனும் ஒரு வலுவான இடத்தைப் பெற்றுள்ளது.
- புதிய கார் மதிப்பீட்டுத் திட்டம் (New Car Assessment Program) என்பது உலகம் முழுவதும் உள்ள வாகனங்களின் பாதுகாப்புப் பகுதிகளை உறுதி செய்வதற்கான ஓர் உலகளாவிய வாகனப் பாதுகாப்புக் கண்காணிப்பு அமைப்பாகும்.
- இது ஐக்கிய ராஜ்ஜியத்தில் பதிவு செய்யப்பட்ட 'Towards Zero Foundation' என்ற ஒரு அறக்கட்டளையின் ஒரு முக்கியத் திட்டமாகும்.

## சீனாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம்

- சீனப் பொதுவுடைமைக் கட்சியானது அரிதான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தினை நிறைவேற்றியுள்ளது.
- இது சீனாவின் மறுமலர்ச்சியில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் ஒரு தீர்க்கமான

முக்கியத்துவத்தினைப் பாராட்டுவதற்கானதாகும்.

- இது சமூகவாதப் புரட்சி மற்றும் கட்டமைப்புகளுள் ஒன்றாக இந்தக் காலத்தை குறிப்பிடுகிறது.
- இது சீனப் பொதுவுடைமைக் கட்சியின் 100 ஆண்டுகால வரலாற்றில் இது போன்ற 3வது தீர்மானமாகும்.
- மற்ற இரு தீர்மானங்கள் மா சேதுங் (1945) மற்றும் டெங் சியாபிங்க் (1981) ஆகியோர் தலைமையில் நிறைவேற்றப்பட்டன.
- மா சேதுங் 1949 ஆம் ஆண்டில் அந்நாட்டில் பொதுவுடைமையாளர்களை அரசு அதிகாரத்திற்குக் கொண்டு வந்தார்.
- டெங் சியாபிங், 1980 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் சீனாவை ஒரு பொருளாதார ஆற்றல் மையமாக உருவாக்கியது.
- சீனப் பொதுவுடைமைக் கட்சியானது 2018 ஆம் ஆண்டில் அதிபர் பதவிக்காலம் மீதான வரம்புகளை நிராகரித்தது.




## பருவநிலை மாற்றத்தினால் அவதி

- பருவநிலை மாற்றத்தினால் பாதிக்கப்பட்ட முதல் நோயாளியாக கனடாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
- கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள நெல்சன் எனுமிடத்தில் அமைந்த கூட்னே லேக் என்ற மருத்துவமனையின் மருத்துவர் டாக்டர் கெய்லே மெரிட் இந்த நோயாளிக்கு ஏற்பட்ட பாதிப்பைக் கண்டறிந்துள்ளார்.
- இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட தீவிரமான வெப்பக் காற்றலைகளே இவரின் இத்தகைய நிலைக்குக் காரணம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.
- இந்த வெப்பக் காற்றலைகளானது ‘வெப்ப குவிப்புப் பகுதி’ என்பதால் ஏற்பட்டது.
- இது ஓர் “உயர் அழுத்த முகடாகும்.”

## COP27 மற்றும் COP28

- எகிப்து நாடானது ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்ற மாநாட்டின் 27வது பங்குதாரர்கள் மாநாட்டினை 2022 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.

- கிளாஸ்கோ நகரில் நடந்த COP26 மாநாட்டின் போது இது முடிவு செய்யப்பட்டது.
- எகிப்து நாடானது ஷர்ம் எல்-ஷேக் நகரின் செங்கடல் தங்கும் விடுதியில் இந்த மாநாட்டை நடத்த உள்ளது.
- அது மட்டுமின்றி 2028 ஆம் ஆண்டில் COP28 சர்வதேசப் பருவநிலை மாநாட்டை நடத்த ஐக்கிய அரபு அமீரகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




## ADIPEC மாநாடு

- ADIPEC மாநாடு அபுதாபி நகரில் நடைபெற்று வருகிறது.
- இந்த மாநாட்டின் போது, இந்தியாவின் பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, எண்ணெய் உற்பத்தியில் OPEC+ கூட்டமைப்பு நாடுகளுடன் இந்தியா ஓர் "ஒருங்கிணைந்த உந்துதலை" கொண்டுள்ளது எனக் கூறினார்.
- COP26 பருவநிலைப் பேச்சுவார்த்தை மற்றும் ஆற்றல் துறையில் விலை உயர்வு ஆகியவற்றின் பின்னணியில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

## இந்தியக் கடலோர நாடுகள் கூட்டமைப்பின் அமைச்சர்கள் குழுவின் 21வது சந்திப்பு

- இந்தியக் கடலோர நாடுகள் கூட்டமைப்பின் அமைச்சர்கள் குழுவின் 21வது வருடாந்திரச் சந்திப்பானது வங்கதேசத்தின் டாக்காவில் நடைபெற்றது.
- இந்தியா இந்த மாநாட்டில் காணொளி வாயிலாக பங்கேற்றது.
- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர், டாக்டர் ராஜ்குமார் ரஞ்சன் சிங், இந்தியா சார்பாக இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்.

- இந்தச் சந்திப்பின் முடிவில், டாக்கா பிரகடனமானது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## உலகப் புகையிலைப் பயன்பாட்டின் போக்குகள் குறித்த அறிக்கை 2000-2025

- உலக சுகாதார அமைப்பானது உலகப் புகையிலைப் பயன்பாட்டின் போக்குகள் குறித்த 4வது அறிக்கையினை வெளியிட்டது
- தென்கிழக்கு ஆசியப் பகுதி நாடுகளானது புகையிலைப் பயன்பாட்டில் மிக விரைவான வீழ்ச்சியைக் கண்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 2000 ஆம் ஆண்டில் ஆண்களிடையே சராசரியாக 50 % ஆக இருந்த புகைபிடிக்கும் பழக்கமானது 2020 ஆம் ஆண்டில் 25% ஆகக் குறைந்துள்ளது.
- இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் 2025 ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய தொற்றாநோய்க்கான ஒரு செயல்திட்ட இலக்கை அடைவதற்காக புகையிலைப் பயன்பாட்டில் ஒப்பீட்டளவில் 30% குறைப்பு என்ற ஒரு இலக்கை அடைவதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளன.

## யுனெஸ்கோ நிர்வாகக் குழு – இந்தியா




- யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) நிர்வாகக் குழுவின் 2021-2025 ஆகிய ஆண்டுகளுக்கான பதவிக் காலத்திற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தியா 164 வாக்குகள் பெற்று இதில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- குரூப் IV என்ற ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளில், ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், குக் தீவுகள் மற்றும் சீனா ஆகியவையும் தேர்ந்தெடுக்கப் பட்டன.

## கமலா ஹாரிஸ்

- 2021 ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று அமெரிக்கத் துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் அவர்கள் அமெரிக்காவின் முதல் பெண் தற்காலிக ஜனாதிபதியாக ஒரு மணி நேரம் மற்றும் 25 நிமிடங்களுக்குப் பதவியேற்றார்.
- அமெரிக்காவின் 250 ஆண்டு கால வரலாற்றில் ஜனாதிபதிக்கான அதிகாரங்களைத்

தற்போது அடைந்த முதலாவது பெண் கமலாவே ஆவார்.

- கமலா ஹாரிஸ் அமெரிக்காவின் இரண்டாவது அதிகாரம் மிக்கப் பொறுப்பினை வகிக்கும் முதல் பெண், முதல் ஆப்பிரிக்க அமெரிக்கர், முதல் ஆசிய அமெரிக்கர் மற்றும் முதல் இந்திய அமெரிக்கர் ஆவார்.
- அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மயக்க மருந்தின் கீழ் ஒரு வழக்கமான கொலோனோஸ்கோபி என்ற சிகிச்சையினை மேற்கொண்டதால் அவர் தற்காலிகமாக ஹாரிஸிடம் அதிகாரத்தை ஒப்படைத்தார்.




## பிரிக்ஸ் புத்தாக்க நடவடிக்கை 2021-24

- இது இந்தியாவின் தலைமையில் தயாரிக்கப்பட்டது.
- இந்தியா நடத்திய 13வது BRICS அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குழுவின் கூட்டத்தில் அனைத்து BRICS நாடுகளும் இதை ஒப்புக் கொண்டன.
- இது அடுத்து வரவிருக்கும் BRICS S&T மற்றும் புத்தாக்க அமைச்சகத்திற்கான மாநாட்டில் ஒரு முக்கியப் பங்காக இருக்கும்.
- இது இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நடத்தப்பட உள்ளது.



## கிளாஸ்கோ காலநிலை ஒப்பந்தம் 2021




- அதிகளவில் கார்பனை வெளியிடும் நாடுகள், 2030 ஆம் ஆண்டிற்கான வலுவான உமிழ்வுக் குறைப்பு இலக்குகளுடன், 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தங்கள் கால நிலைச் செயல் திட்டங்களை மீண்டும் வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டன.
- முந்தைய வரைவில் நிலக்கரியை "வெளியேற்றுவது" என்று அளிக்கப்பட்ட ஒரு உறுதி மொழியானது, அதற்குப் பதிலாக நிலக்கரியை " குறைப்பதற்கான" உறுதிமொழிக்கு தற்போது மாற்றப் பட்டுள்ளது.
- இது கிட்டத்தட்ட ஏழை நாடுகளைத் திருப்திப் படுத்துவதற்குப் போதுமான நிதி ஊக்குவிப்புகளை உள்ளடக்கியுள்ளதோடு கார்பன் வர்த்தகத்திற்கு வழி வகுக்கும் ஒரு நீண்ட காலப் பிரச்சனையைத் தீர்ப்பதாக உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபை இந்த இலக்கை அடைய 3 அளவுகோல்களை நிர்ணயித்து இருந்தாலும் அவற்றில் எதுவும் அடையப்படவில்லை.
- அந்த மூன்று உறுதிமொழிகள்
  - 2030 ஆம் ஆண்டிற்குள் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தைப் பாதியாக குறைக்க உறுதிமொழி
  - பணக்கார நாடுகளில் இருந்து ஏழைகளுக்கு $100 பில்லியன் நிதி உதவி
  - அந்தப் பணத்தில் பாதியானது வளரும் நாடுகளுக்குப் பருவநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளுக்கு ஏற்றவாறு உதவுவதை உறுதி செய்தல்.

## உலகின் பணக்கார நாடு – சீனா

- இது McKinsey என்ற ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு புதிய அறிக்கையாகும்.
- உலகளவில் பணக்கார நாடான அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி சீனா உலக அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- உலகளவில் உள்ள செல்வத்தில் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்காவிலும் சீனாவிலும் உள்ள 10% பணக்காரக் குடும்பங்களின் கைவசம் உள்ளது.
- அந்த இரண்டுமே உலகின் மிகப்பெரியப் பொருளாதாரங்கள் ஆகும்.
- கடந்த இரண்டு தசாப்தங்களில் உலகளாவியச் செல்வம் மூன்று மடங்கு அதிகரித்து

உள்ளது.

- ஆக உலகம் முன்பு இருந்ததை விட இப்போது மிகவும் செல்வச் செழிப்புடன் உள்ளது.



## சர்வதேச சட்ட ஆணையம்




- பேராசிரியர் பீமல் படேல் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் ஐந்தாண்டுக் காலத்திற்கு சர்வதேச சட்ட ஆணையத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அவர் ராஷ்ட்ரிய ரக்சா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும், இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.
- சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான் வேட்பாளர்களை உள்ளடக்கிய ஆசிய-பசிபிக் குழுவில் அவர் அதிக வாக்குகளைப் பெற்றார்.
- சர்வதேச சட்ட ஆணையமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 1947 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## SITMEX–21




- SITMEX–21 எனப் பெயரிடப்பட்ட முத்தரப்புக் கடல்சார் பயிற்சியின் 3வது பதிப்பு அந்தமான் கடலில் ராயல் தாய் கடற்படையால் நடத்தப்பட்டது.
- இதில் இந்தியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் கடற்படையினர் பங்கேற்கின்றனர்.

## அதிகளவு பணவரவினைப் பெறும் நாடு




- 'உலக வங்கியின் பண வரவு மதிப்புகளின் உலகளாவிய தரவுத் தளம்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையானது உலக வங்கியால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் 87 பில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெற்றதன் மூலம் , உலகில் அதிகளவு பண வரவு பெறும் நாடாக இந்தியா மாறியது.
- இந்த நிதிகளில் 20 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்புடன் அமெரிக்கா இதன் மிகப்பெரிய ஆதாரமாக விளங்குகிறது.
- இந்தியாவைத் தொடர்ந்து சீனா, மெக்சிகோ, பிலிப்பைன்ஸ், எகிப்து ஆகிய நாடுகள் உள்ளன.

## புகைபிடிக்கும் பழக்கம் குறித்த தரவு




- ❖ புகைபிடிப்பிற்கு எதிரான ஒரு போராட்டத்தை மீண்டும் எழுப்புவதற்கான சர்வதேச ஆணையத்தின் அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ❖ உலக வங்கி போன்ற மூல ஆதாரங்களில் இருந்து இரண்டாம் நிலை தரவுகளைப் பயன்படுத்தி இந்த அறிக்கையானது தயாரிக்கப்பட்டது.
- ❖ 16 முதல் 64 வயதுக்குட்பட்ட புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் எண்ணிக்கையில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன.
- ❖ புகைபிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவோர் விகிதம் குறைவாக உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- ❖ சீனாவிலும் இந்தியாவிலும் 16 முதல் 64 வயதுக்குட்பட்டவர்களில் புகைபிடிக்கும் பழக்கம் உள்ள 500 மில்லியன் நபர்கள் உள்ளனர்.

## சிட்னி பேச்சுவார்த்தை




- ❖ சிட்னி பேச்சுவார்த்தையில் பிரதமர் நரேந்திர மோடி ஒரு சிறப்புரையாற்றினார்.

- இந்நிகழ்ச்சியில் அவர் 'இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சியும் புரட்சியும்' என்ற ஒரு தலைப்பில் உரையாற்றினார்.
- இந்தப் பேச்சுவார்த்தையானது ஆஸ்திரேலிய உத்திசார் கொள்கை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது டிஜிட்டல் களத்தின் வீழ்ச்சியைப் பற்றி விவாதிப்பதற்காக இணையதளம் மற்றும் சில முக்கியமான தொழில்நுட்ப நிறுவனங்கள் கூடும் ஒரு வருடாந்திர உச்சி மாநாடு ஆகும்.

## TRACE லஞ்ச வழங்கீட்டின் ஆபத்து குறித்த உலகளாவியத் தரவரிசை 2021

- இந்தத் தரவரிசையில் இந்தியா 82வது இடத்திற்குச் சரிந்துள்ளது (2020 ஆம் ஆண்டில் இருந்த நிலையில் இருந்து 5 இடங்கள் சரிந்துள்ளது).
- இந்த தரவரிசையில் டென்மார்க் முதலிடம் பிடித்துள்ளது.
- இது டிரேஸ் இண்டர்நேஷனல் என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- இது 194 நாடுகளில் வணிக ரீதியில் நிலவும் லஞ்ச வழங்கீடு குறித்த ஒரு அபாயத்தை மதிப்பிடுகிறது.




## இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கின் 7வது பதிப்பு

- இந்தியப் பெருங்கடல் கடற்படைத் தலைவர்கள் கருத்தரங்கு பாரீஸில் பிரெஞ்சுக் கடற்படையால் நடத்தப் பட்டது.
- இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கின் தலைமைப் பொறுப்பு தற்போது பிரான்சு நாட்டின் வசம் உள்ளது.
- இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கானது 2008 ஆம் ஆண்டில் இந்தியக் கடற்படையால் துவங்கப்பட்டது.
- இது இந்தியப் பெருங்கடல் பகுதியிலுள்ள பிராந்தியங்களின் கடற்படைகளுக்கு இடையே கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்த முயல்கிறது.




## யுனெஸ்கோவின் 75வது ஆண்டு நிறைவு

- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு அல்லது யுனெஸ்கோ என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.
- இது பிரான்சின் பாரீஸ் நகரில் உள்ள உலகப் பாரம்பரிய மையத்தினைத் தலைமை மையமாகக் கொண்டுள்ளது.
- இது 1945 ஆம் ஆண்டில் பல நாடுகள் கூட்டிணைவின் அறிவுசார் ஒத்துழைப்பு மீதான சர்வதேசக் குழு என்பதன் வழித் தோன்றலாக நிறுவப்பட்டது.
- இது கல்வி, சமூகம் (அ) மனித அறிவியல், இயற்கை அறிவியல் கலாச்சாரம் மற்றும் தொடர்பு அல்லது தகவல் ஆகிய 5 முக்கியப் பகுதிகள் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்கிறது.



## உலக நிதி நிலைத்தன்மை அறிக்கை 2021




- சர்வதேச நாணய நிதியமானது இந்த அறிக்கையை வெளியிட்டது.
- இது உலக நிதிச் சந்தையின் உறுதித் தன்மையை மதிப்பிடுவதற்கான அரையாண்டு அறிக்கையாகும்.
- 2020 ஆம் ஆண்டில் வெளியான ஒரு உலக நுகர்வோர் ஆய்வின்படி, அதில் பங்கேற்றவர்களில் 99% பேர் தாங்கள் இணைய சங்கேதப் பணம் மீது வர்த்தகம் செய்ததாகப் பதிலளித்தனர்.
- நைஜீரியா, வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் இந்த ஆய்வில் முதலிடத்தில் உள்ளன.
- இணைய சங்கேதப் பண ஏற்புத் தன்மையில் சீனா, அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை விட இந்தியா உயர் மதிப்பில் உள்ளது.
- பெரும்பாலும் புழக்கத்தில் உள்ள இணைய சங்கேதப் பணமாக பிட்காயின் உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

## மடோசின்ஹோஸ் அறிக்கை

- ஐரோப்பிய விண்வெளி நிறுவன மன்றமானது ஐரோப்பாவில் விண்வெளிப் பயன்பாட்டினை அதிகரிப்பதற்காக வேண்டி மடோசின் ஹோஸ் என்ற ஒரு அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ஐரோப்பிய நாடும் அதன் குடிமக்களும் எதிர்கொள்ளும் எதிர்பாராத அளவில் சமூகம்,

பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த சவால்களைச் சமாளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக ஜனநாயக (மக்களாட்சி) நிலை அறிக்கை 2021

- இந்த அறிக்கையானது சர்வதேச ஜனநாயக மற்றும் தேர்தல் உதவிக்கான நிறுவனத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்லும் நாடுகளின் எண்ணிக்கை என்பது ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் நாடுகளின் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது.
- இந்த அறிக்கையானது ஜனநாயகம், கலப்பு மற்றும் சர்வாதிகார ஆட்சிகள் என்று மூன்று முக்கிய ஆட்சி வகைகளைக் குறிப்பிடுகின்றது.
- கலப்பு மற்றும் சர்வாதிகார ஆட்சி ஆகிய இரண்டுமே ஜனநாயகம் சாராதவை என வகைப் படுத்தப்பட்டுள்ளன.
- பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் நிலைகளை "பிற்போக்கான நடைமுறைகளை நோக்கி நகரும் மிகவும் கவலையளிக்கும் வகையிலான எடுத்துக் காட்டுகள்" என்று இந்த அறிக்கை குறிப்பிட்டது.
- இருப்பினும், இந்தியா 2000 ஆம் ஆண்டு முதல் நடுத்தர அளவிலான செயல்திறன் கொண்ட ஜனநாயகம் என்ற வகைப்பாட்டிலேயே உள்ளது.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 3 உறுப்பினர் நாடுகள் (ஹங்கேரி, போலந்து மற்றும் ஸ்லோவேனியா) ஆகியனவும் குறிப்பிடத் தக்க அளவில் ஜனநாயக வீழ்ச்சியைக் கண்டுள்ளன.



## சர்வதேச எம்மி விருதுகள் 2021

**FULL LIST OF WINNERS AT EMMYS 2021**

- Best Performance By An Actress - Hayley Squires for Adult Material (UK)
- Best Performance By An Actor - David Tennant for Des (UK)
- Comedy - Call My Agent Season 4 (France)
- Documentary - Hope Frozen: A Quest To Live Twice (Thailand)
- Drama Series - Tehran (Israel)
- Non-English Language U.S. Primetime Program - 21st Annual Latin GRAMMY Awards (USA)
- Non-Scripted Entertainment - The Masked Singer (UK)
- Short-Form Series - INSiDE (New Zealand)
- The Masked Singer (UK)
- Telenovela - The Song Of Glory (China)
- TV Movie / Mini-Series - Atlantic Crossing (Norway)
- Arts Programming - Kubrick By Kubrick (France)

- 49வது சர்வதேச எம்மி விருதுகள் வழங்கும் விழாவானது அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்றது.
- இது அமெரிக்க நாட்டிற்கு வெளியே வேறு நாடுகளில் உருவாக்கப்படும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் சிறந்த நிகழ்ச்சிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கிறது.
- இந்த ஆண்டு சர்வதேச எம்மி விருதுகளை இந்தியா தவற விட்டுள்ளது.

## சிர்கான்

- ரஷ்யக் கடற்படையானது "சர்கான்" எனும் ஒரு மீயொலி சீர்வேக ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- ரஷ்யா 'நுடோஸ்' எனும் தனது செயற்கைக்கோள் எதிர்ப்பு ஏவுகணை ரீதியிலான ஒரு செயற்கைக் கோளை அழித்தது.
- இது விண்வெளிக் கலங்களின் உதிரி பாகங்கள் விண்ணில் ஒரு மேகம் போல் திரள வழி வகுத்தது.




## அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து




- ஆஸ்திரேலியாவின் கான்பெரா என்னுமிடத்தில் அமெரிக்கா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்துடன் ஓர் ஒப்பந்தத்தில் ஆஸ்திரேலியா கையெழுத்திட்டதைத் தொடர்ந்து, அவற்றுடனான புதிய அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கி பாதுகாப்புக் கூட்டணியில் அதிகாரப் பூர்வமாக இணைந்தது.
- AUKUS ஒப்பந்தத்தின் கீழ், ரேடார் கருவிகளுக்குப் புலப்படாத தொழில்நுட்பம் மற்றும் நீண்டதூர வரம்புகளைக் கொண்ட பணிகள் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடிய 8 அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆஸ்திரேலியாவிற்கு வழங்கப்படும்.
- AUKUS (ஆஸ்திரேலியா – ஐக்கிய ராஜ்ஜியம் – அமெரிக்கா) பாதுகாப்பு ஒப்பந்தம் உருவான பிறகு 3 நாடுகளால் கையெழுத்திடப்பட்ட முதல் தொழில்நுட்ப ஒப்பந்தம் இதுவாகும்.

## 13வது ASEM உச்சி மாநாடு




- 13வது ஆசிய–ஐரோப்பா சந்திப்பின் உச்சி மாநாடானது சமீபத்தில் நடத்தப் பட்டது.
- இதில் இந்தியத் தரப்பானது துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்ய நாயுடுவால் பிரதிநிதித்துவப் படுத்தப் பட்டது.
- இந்த அமைப்பிற்குத் தற்போதைய தலைமை என்ற வகையில் கம்போடியா இதனை நடத்தியது.
- 2021 ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் ஒரு புதிய உறுப்பினர் துருக்கி ஆகும்
- இந்த உச்சி மாநாட்டிற்கு "பகிரப்பட்ட வகையிலான வளர்ச்சிக்குப் பன்முகத் தன்மை வாதத்தை வலுப்படுத்துதல்" (Strengthening Multilateralism for Shared Growth) எனத் தலைப்பிடப் பட்டுள்ளது.
- இந்தச் சந்திப்பானது 51 உறுப்பினர் நாடுகளின் பங்கேற்புடன் காணொலி வாயிலாக நடத்தப் பட்டது.
- உறுப்பினர் நாடுகள் தவிர, ASEAN மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அமைப்பு நாடுகளும் இதில் பங்கேற்றன.

## உலக ஊட்டச்சத்து அறிக்கை 2021

- உலக மக்கள்தொகையில் பாதி அளவினர் எடை குறைந்தவர்களாகவோ, அதிக எடை உள்ளவர்களாகவோ அல்லது உடல் பருமன் உடையவர்களாகவோ உள்ளனர் என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இந்த அறிக்கையானது 2013 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு தன்னிச்சையானக் கணக்கெடுப்பு ஆகும்.
- இளம்பருவத்தினரிடையே நிகழும் உயிரிழப்புகளில் கால்பகுதி ஆனது மோசமான உணவு முறையால் நிகழ்வதாக இந்தத் தரவுகள் கூறுகின்றன.
- உலக சுகாதார அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட 6 உலக ஊட்டச்சத்து இலக்குகளில் 5 இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கான பாதையில் உலக நாடுகள் செயல்பட வில்லை என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.
- தற்போது, உணவு உற்பத்தியினால் உலகின் மொத்தப் பசுமை இல்ல வாயு உமிழ்வில்

மூன்றில் ஒரு பங்கு வெளியிடப்படுகிறது.

- ❖ உணவில் செந்நிற இறைச்சியின் பயன்பாடானது தாவரம் சார்ந்த உணவுகளை விட தோராயமாக 100 மடங்கு அதிக உமிழ்வினை ஏற்படுத்துவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ ஆனால் செந்நிற இறைச்சியின் உபயோகம் அதிகரித்து வருகிறது.




## ‘NFT’ - 2021 ஆம் ஆண்டின் வார்த்தை

- ❖ கோலின்ஸ் அகராதியானது ‘NFT’ என்பதை 2021 ஆம் ஆண்டின் வார்த்தையாக அறிவித்துள்ளது.
- ❖ ‘NFT’ என்பது ‘non-fungible token’ என்பதன் ஒரு சுருக்கமாகும்.
- ❖ NFT என்பது கலைப்படைப்பு அல்லது தொகுப்புகள் போன்ற சொத்துகளின் உரிமைகளைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படுகின்ற பிளாக்செயின் என்ற தொழில் நுட்பத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு தனித்துவ டிஜிட்டல் சான்றிதழ் என விவரிக்கப் பட்டுள்ளது.

- கோலின்ஸ் என்ற ஆங்கில அகராதியானது ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரிலுள்ள ஹார்பர் கோலின்ஸ் என்ற பதிப்பகத்தால் வெளியிடப்படுகிறது.




## உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாடு

- உலக வர்த்தக அமைப்பானது தனது அமைச்சர்களின் மாநாட்டினை ஒத்தி வைத்து உள்ளது.
- புதிய ஓமைக்ரான் எனும் கோவிட்-19 மாற்றுருவின் பரவலைக் கருத்தில் கொண்டு இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்த மாநாடானது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற இருந்தது.
- உலக சுகாதார அமைப்பின் 12வது அமைச்சர்கள் மாநாடானது கோவிட்-19 தொற்று காரணமாக இதற்கு முன்பு ஏற்கனவே ஒருமுறை ஒத்தி வைக்கப் பட்டிருந்தது.
- இந்த மாநாடானது பொதுவாக 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.




## ஓமைக்ரான்

- உலக சுகாதார அமைப்பானது B.1.1529 என்ற SARS-CoV-2 மாற்றுருவினை ஒரு ‘கவலைக்கிடமான மாற்றுருவாக’ நிர்ணயித்துள்ளது.
- SARS-CoV-2 வைரசின் இந்த மாற்றுருவிற்கு ஓமைக்ரான் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த மாற்றுருவானது தென் ஆப்பிரிக்காவின் போட்ஸ்வானா பகுதியில் நவம்பர் 24 அன்று முதன்முதலில் கண்டறியப்பட்டது.

- தென் ஆப்பிரிக்காவில் பதிவான கோவிட்-19 தொற்றுகளின் அதிகரிப்பானது ஓமைக்ரான் என்ற மாற்றுரு கண்டுபிடிக்கப்பட்டதோடு ஒத்துப் போகிறது.
- நவம்பர் 09 அன்று சேகரிக்கப்பட்ட மாதிரியிலிருந்து ஓமைக்ரான் தொற்று முதலில் உறுதிப்படுத்தப்பட்டது.
- புதிதாகக் கண்டறியப்பட்ட மாற்றுருவானது அதிக அளவிலான சடுதி மாற்றத்தைக் கொண்டுள்ளது.
- சில சடுதி மாற்றங்கள் கவலை அளிக்கக் கூடியவையாக உள்ளன.




## WISER திட்டம்

- அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சியில் பெண்களின் ஈடுபாடு என்ற ஒரு திட்டமானது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இது நேரடிச் சேர்க்கை மூலம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் பெண்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்காக தொடங்கப்பட்ட முதல் வகையான திட்டமாகும்.
- இது ஆராய்ச்சி 4 மேம்பாட்டுத் திட்டங்களின் பெண் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கச் செய்வதற்காக இந்தோ-ஜெர்மானிய (IGSTC - Indo-German Sciences Technology Centre) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தினால் தொடங்கப் பட்டது.
- இந்தத் திட்டமானது IGSTC திட்டம் மூலம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் பெண்களின் பங்கேற்பு மற்றும் பாலினச் சமத்துவம் ஆகியவற்றிற்கு வழி வகுக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## K.V. காமத்

- இந்திய அரசானது தேசிய நிதியியல் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியின் தலைவராக K.V. காமத் என்பவரை நியமித்துள்ளது.
- இவர் இந்தியாவின் புகழ்பெற்ற வங்கியாளர் மற்றும் புதிய மேம்பாட்டு வங்கியின் முதல்

தலைவர் ஆவார்.

- இந்த வங்கியானது இந்தியாவில் புதிதாக நிறுவப்பட்ட மேம்பாட்டு நிதியியல் நிறுவனமாகும்.
- இது 2021 ஆம் ஆண்டு தேசிய நிதியியல் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கிச் சட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு நிதியியலுக்காக நிறுவப்பட்டுள்ளது.
- இதன் தலைமையகம் மும்பையில் உள்ளது.

## அடமானம் இல்லாத சிறுகடன்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, சிறுகடன் வங்கிகளுக்கு மட்டுமல்லாத அனைத்து கடன் வழங்கு நிறுவனங்களுக்கும் அடமானம் அல்லாத சிறு கடன்களை வழங்க முன் வந்து உள்ளது.
- தற்போதைய ஒழுங்குமுறைக் கட்டமைப்பானது குறைந்த வருமானமுடைய குடும்பங்களையும் கடன் பெறச் செய்தல் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் கடனைத் திரும்பப் பெறும் சமயத்தில் மேற்கொள்ளும் சில கடுமையான நடைமுறைகளிலிருந்து கடனாளிகளைப் பாதுகாத்தல் போன்ற ஒரு நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது.
- இந்த ஒழுங்குமுறை நடவடிக்கையானது வங்கிசாரா கடன் நிறுவனங்களுக்கு – சிறு கடன் வங்கிக்கு மட்டுமே பொருந்தும்.
- இந்தியாவில் ஒரு லட்சத்திற்குக் குறைவான கடன்கள் சிறுகடன்களாகக் கருதப் படுகின்றன.

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மீதான வட்டி விகிதம்




- 2020-21 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகளின் மீதான வட்டி விகிதத்தினை 8.5% ஆக விதித்து நிதி அமைச்சகம் அங்கீகரித்துள்ளது.
- இந்த விகிதமானது 2019-20 ஆம் ஆண்டில் மாற்றப்படாமல் இருந்தது.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியானது PPF மற்றும் சுகன்யா சம்ரிதி ஆகிய

கணக்குகளுடன் விலக்கு - விலக்கு - விலக்கு என்ற திட்டத்தின் கீழ் முழுவதும் வரி விலக்கு பெற்ற ஒரு நிலையான வருவாய் வசதியாகும்.

## பந்தன் வங்கி

- இந்திய ரிசர்வ் வங்கியானது தற்போது அரசு வணிகத்தை நடத்துவதற்கு என்று பந்தன் வங்கியை தனது முகமை வங்கியாக நியமித்துள்ளது.
- பந்தன் வங்கியானது இந்திய ரிசர்வ் வங்கியின் முகமை வங்கியாக நியமிக்கப் பட்டு உள்ள மற்ற தனியார் வங்கிகளுடன் இணைந்துள்ளது.
- GST, VAT மற்றும் மாநில வரி வசூல் தொடர்பான பரிவர்த்தனைகளை கையாள்வதற்கு பந்தன் வங்கிக்கு தற்போது அங்கீகாரம் வழங்கப்படும்.

Bandhan Bank

## கச்சா சமையல் எண்ணெய்களுக்கான அடிப்படை வரி

- கச்சா பாமாயில், கச்சா சோயா எண்ணெய், மற்றும் கச்சா சூரியகாந்தி எண்ணெய் ஆகியவை மீதான அடிப்படை வரியை 2.5 சதவீதத்திலிருந்து பூஜ்ஜியமாக இந்திய அரசு குறைத்துள்ளது.
- இந்த எண்ணெய்கள் மீதான வேளாண் வரியானது கச்சா பாமாயிலுக்கு 20 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- மேலும் கச்சா சோயா எண்ணெய் மற்றும் கச்சா சூரியகாந்தி எண்ணெய்க்கு இது 5% என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது.
- RBD பாமாயில், சுத்திகரிக்கப்பட்ட சோயா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றிற்கு இது தற்போதைய 32.5 சதவீதத்திலிருந்து 17.5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

## நிதி உள்ளடக்க அளவீடுகள் அறிக்கை

- பாரத ஸ்டேட் வங்கியானது தனது நிதி உள்ளடக்க அளவீடுகள் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது பாரத ஸ்டேட் வங்கி குழுமத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகரான சௌமியா காந்தி கோஷ் என்பவரால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 2015 ஆம் ஆண்டில் 100000 இளம் பருவத்தினருக்கு 13.6 என்ற ஒரு எண்ணிக்கையில் என்று இருந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கையானது, 2020 ஆம் ஆண்டில் 14.7 ஆக உயர்ந்துள்ளது.
- பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா திட்டம் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு போன்றவையே இதற்கான காரணமாகும்.

- இந்த எண்ணிக்கையானது ஜெர்மனி, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதிகமாகும்.
- 2015 ஆம் ஆண்டில் 1000 இளம்பருவத்தினர் மத்தியில் 183 ஆக இருந்த இணைய வங்கிப் பரிவர்த்தனைகள் 2019 ஆம் ஆண்டில் 13, 615 ஆக அதிகரித்துள்ளது.
- பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா கணக்குகளில் இருப்புத் தொகைகளை அதிக அளவில் கொண்ட மாநிலங்களில் குற்றங்கள் ஒரு சரிவைச் சந்தித்துள்ளன.
- அதிக அளவில் பிரதான் மந்திரி ஜன்தன் கணக்குகள் துவக்கப் பட்ட மாநிலங்களில் மது மற்றும் புகையிலைப் பொருட்கள் போன்ற போதைப் பொருட்களின் நுகர்வானது ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் பொருளாதார அளவில் கணிசமான வீழ்ச்சியைக் கண்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் 34,174 என்ற எண்ணிக்கையில் இருந்த கிராமப் புற வங்கி அலுவலகங்களின் எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 12.4 லட்சமாக உயர்ந்துள்ளது.




## வேளாண் பொருள்களுக்கான ஊக்கத் தொகை

- பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழுவானது பருத்தி, கரும்பு மற்றும் சணல் விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதற்காக வேண்டி பல நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இது கரும்புச் சாறிலிருந்துப் பிரித்தெடுக்கப்பட்ட எத்தனாலைப் பெட்ரோலுடன் கலப்பதை ஊக்குவிப்பதற்காக வேண்டி அதன் விலையை அதிகரித்துள்ளது.
- மேலும் இது சரக்குப் பொதிகளில் சணல் பயன்பாட்டினைக் கட்டாயமாக்கும் பதிவு விதிகளுக்கு தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- இந்த ஒப்புதலுடன் 100% உணவு தானியங்கள் மற்றும் 20% கரும்பு ஆகியவை சணல் பைகளில் அடைக்கப்பட வேண்டும்.
- பெட்ரோலுடன் எத்தனாலைக் கலப்பது 2022 ஆம் ஆண்டிற்குள் 10% வரையும் 2024 ஆம் ஆண்டிற்குள் 20% வரையும் எட்டும் என இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகிறது.

- எண்ணெய்ச் சந்தைப்படுத்தும் நிறுவனங்களானது சுத்திகரிப்பு மையங்கள் மற்றும் சர்க்கரை ஆலைகளிடமிருந்து அரசு நிர்ணயித்த வீதத்திலேயே எத்தனாலைக் கொள் முதல் செய்கின்றன.
- எத்தனால் கலப்புத் திட்டமானது கச்சா எண்ணெய் இறக்குமதியைச் சார்ந்து இருப்பதைக் குறைத்துள்ளது.

## வாடிக்கையாளரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்




- இந்திய ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய இரண்டு புதிய முன்னெடுப்புகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- அந்த இரு முன்னெடுப்புகள் ரிசர்வ் வங்கியின் நேரடி சில்லறை விற்பனைத் திட்டம் மற்றும் ரிசர்வ் வங்கி - ஒருங்கிணைந்தக் குறைதீர்ப்புத் திட்டம் ஆகியவை ஆகும்.
- ரிசர்வ் வங்கியின் நேரடி சில்லறை விற்பனைத் திட்டமானது சில்லறை முதலீட்டாளர்கள் அரசாங்கப் பங்குச் சந்தையை அணுகுவதை மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய அரசு மற்றும் மாநில அரசுகள் வழங்கும் பத்திரங்களில் நேரடியாக முதலீடு செய்வதற்கான புதிய வழியை இது அவர்களுக்கு வழங்குகிறது.
- ரிசர்வ் வங்கி-ஒருங்கிணைந்த குறைதீர்ப்புத் திட்டமானது, ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு எதிராக வாடிக்கையாளர் அளிக்கும் புகார்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை மேலும் மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மையக் கருப்பொருளானது, வாடிக்கையாளர்கள் தங்கள் புகார்களைத் தெரிவிக்க ஓர் இணைய தளம், ஒரு மின்னஞ்சல் மற்றும் ஒரு முகவரியுடன்

'ஒரே தேசம்-ஒரே நடுவம் ' என்ற அடிப்படையிலானதாகும்.

## குறைதீர்ப்பு செயல்முறை (நடுவம்)

- இந்திய ரிசர்வ் வங்கி ஆனது பின்வரும் இரண்டு வகையான வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்காக (NBFCs) உள்துறை ரீதியிலான குறைதீர்ப்புச் செயல்முறையை அறிமுகப் படுத்துவதாக அறிவித்துள்ளது.
- இந்த இரண்டு வகையான வங்கி சாரா நிதி நிறுவனங்களாவன
    - 10 அல்லது அதற்கு மேற்பட்ட கிளைகளுடன் கூடிய வைப்புத் தொகை பெறுகின்ற வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs-D) மற்றும்
    - பொது வாடிக்கையாளர்களுக்கான இடைமுகம் கொண்ட, ரூ.5,000 கோடி மற்றும் அதற்கு மேற்பட்டச் சொத்து மதிப்புடன் கூடிய, வைப்புத் தொகை பெறாத வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs-ND) ஆகியவை ஆகும்.

## உலகளாவியச் சேவைத் துறை மீதான மாநாடு 2021




- 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் சேவைகள் என்ற ஒரு ஏற்றுமதி இலக்கை எட்ட இந்தியா தயாராக உள்ளது என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்து உள்ளார்.
- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய உந்துதலாக 'சேவைகள்' துறையை அவர் குறிப்பிட்டார்.
- சேவைத் துறை கிட்டத்தட்ட 2.6 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதோடு இந்தியாவின் மொத்த உலகளாவிய ஏற்றுமதியில் சுமார் 40 சதவீத பங்களிப்பையும் வழங்குகிறது.
- 2020-21 ஆம் ஆண்டில் சேவை வர்த்தக உபரி 89 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருப்பதோடு அது அந்நிய நேரடி முதலீட்டின் ஒரு மிகப்பெரிய பெறுநராக உள்ளது.
- டெல்லியில் நடைபெற்ற இந்த மாநாட்டின் கருத்துரு 'India Serves: Exploring Potential Growth Sectors Beyond IT/ITes' என்பதாகும்.

## இந்திய அமெரிக்க வர்த்தகம்

- இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரராகவும், வர்த்தகத்தில் மிகப்பெரிய ஏற்றுமதிக்கான சந்தையாகவும் அமெரிக்கா திகழ்கிறது.
- 2001 ஆம் ஆண்டில் தோராயமாக 20 பில்லியன் டாலராக இருந்த இதன் மதிப்பு 2019 ஆம் ஆண்டில் 145 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய அமெரிக்கத் தொழில்நுட்ப மாநாடான பெங்களூரு தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் இந்தத் தகவலானது வெளியிடப்பட்டது.

## டிஜிட்டல் முறையில் கடன் வழங்கல்

- டிஜிட்டல் முறையில் கடன் வழங்கல் மீதான செயற்குழுவின் அறிக்கையினை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டது.
- ஜெயந்த் குமார் தாஸ் இக்குழுவிற்குத் தலைமை தாங்குகிறார்.
- சட்ட விரோதமாக டிஜிட்டல் முறையில் கடன் வழங்கும் நடவடிக்கைகளுக்கு எதிரான சட்டம், இது மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணச் செய்வதற்கான சரிபார்ப்பு முறைகள் மற்றும் ஒரு சுய ஒழுங்குமுறை அமைப்பு ஆகியவற்றை உருவாக்குமாறு இக்குழு பரிந்துரைத்துள்ளது.

## பசுமை இந்தியா என்ற திட்டத்திற்கு ஆதரவு வழங்குவதற்கான உறுதிப்பாட்டு அறிக்கை




- இந்திய ரிசர்வ் வங்கியானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டது.
- நிதி அமைப்பினைப் பசுமை மயமாக்குவதற்கான ஒரு கட்டமைப்பிற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஆதரவளிப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 அன்று நிதி அமைப்பினைப் பசுமை மயமாக்குவதற்கான கட்டமைப்பில் (Network for Greening the Financial System – NGFS) உறுப்பினராக இணைந்தது.

- NGFS (Network for Greening the Financial System) என்பது 83 மத்திய வங்கிகள் மற்றும் நிதி கண்காணிப்பு அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பாகும்.
- நிதி அமைப்பினைப் பசுமை மயமாக்குவதை துரிதப்படுத்துவதையே இந்தக் கட்டமைப்பு

நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பருவநிலை மாற்றம் தொடர்பாக மத்திய வங்கிகள் ஆற்ற வேண்டிய பங்குகள் குறித்த பரிந்துரைகளை உருவாக்கவும் இது விழைகிறது.
- இதன் செயலகமானது பாங்க் டி பிரான்ஸ் என்ற வங்கியினால் செயல்படுத்தப் படுகிறது.
- டச்சு சென்ட்ரல் பேங்கர் எல்டர்சன் என்பது தான் NGFS கட்டமைப்பின் தற்போதையத் தலைமை ஆகும்.
- NGFS ஆனது 2017 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற ‘ஒற்றைக் கோள் உச்சி மாநாட்டில்’ அறிவிக்கப் பட்டது.

## கற்கரியாக்கமல்லாத நிலக்கரி (Noncoking coal) இறக்குமதி குறைப்பு

- தொழில்துறைப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் அதிக வெப்பத் திறன் கொண்ட வெப்ப (அனல்) நிலக்கரி மற்றும் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் குறைந்த வெப்பத் திறன் உடைய நிலக்கரி ஆகியவற்றின் இறக்குமதிகளை இந்தியா கணிசமான அளவில் குறைத்துள்ளது.
- நாட்டின் நிலக்கரித் தேவைக்கும் நிலக்கரி உற்பத்திக்கும் இடையேயுள்ள இடைவெளியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இந்தியா நிலக்கரியை இறக்குமதி செய்து வருகிறது.
- குறைந்த வெப்பத்திறன் உடைய கற்கரியாக்கமல்லாத நிலக்கரியானது முக்கியமாக மின் உற்பத்தி துறையில் பயன்படுத்தப்படுவதற்காக இறக்குமதி செய்யப் படுகிறது.
- ஆனால் இறக்குமதி செய்யப்படும் கற்கரியாக்கமல்லாத நிலக்கரிகள் பெரும்பாலும் எஃகு உற்பத்தித் துறையில் பயன்படுத்தப் படுகிறது.

## வீட்டுவேலைப் பணியாளர்கள் கணக்கெடுப்பு




- வீட்டு வேலைப் பணியாளர்கள் குறித்த முதல் அனைத்திந்தியக் கணக்கெடுப்பானது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- இது தொழிலாளர் வாரியத்தினால் நடத்தப்பட்டு வருகிறது.

- இது தேசிய மற்றும் மாநில அளவில் முறைப்படுத்தப் படாத வேலைகளில் ஈடுபட்டு உள்ளவர்கள் மற்றும் புலம்பெயர் மற்றும் புலம்பெயரா தொழிலாளர்கள் ஆகியோரது எண்ணிக்கையை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சரிநிகர் வரி விதிப்பிலிருந்து மாற்றம் 2020

- இணைய வர்த்தக வழங்கீடுகள் மீது இந்தியா விதித்த 2% சரிநிகர் வரி விதிப்பிலிருந்து (2020) மாறுவதற்கும் 2 ஆம் நிலை தீர்வின் கீழான சரிநிகர் வரி விதிப்பு தொடர்பான அமெரிக்காவின் வர்த்தக நடவடிக்கைகள் மீதும் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் தொடங்கப்பட உள்ள இந்த மாற்று அணுகுமுறை டிஜிட்டல் பொருளாதாரத்தின் வரிச் சவால்களுக்கான 2 நிலை தீர்வுகளின் கீழ் மேற் கொள்ளப் பட்டது.

## JP மோர்கன் – உலகின் மிக ஒழுங்கான (முறையான) வங்கி

- முறையான பரந்த நிதி மேலாண்மை அமைப்பிற்காக வேண்டி உலகின் மிக ஒழுங்கான வங்கியாக J.P. மோர்கன் சேஸ் வங்கி மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலக ஒழுங்குமுறை அமைப்புகளால் வெளியிடப்பட்ட சமீபத்திய வருடாந்திர முன்னணி கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் தரவரிசையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.
- G20 நாடுகளின் ஒழுங்குமுறை அமைப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட நிதி நிலைத்தன்மை வாரியமானது உலகின் 30 மிக ஒழுங்கான வங்கிகளின் சமீபத்தியப் பட்டியலை வெளியிட்டது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புவி காந்தப் புயல்

- அமெரிக்க விண்வெளி சார்ந்த வானிலை முன்னறிவிப்பு மையமானது AR2887 என்ற சூரியப் புள்ளியிலிருந்து Xl – ரக சூரியப் பிழம்புகள் தற்போது வெளியேறி வருவதாக உறுதிப்படுத்தி உள்ளது.
- இது சூரியனின் மையத்தில் அமைந்திருப்பதோடு அது தனது அமைவிடத்தின் அடிப்படையில் பூமியை நோக்கி அமைந்திருந்தது.
- அக்டோபர் 30 அன்று புவியைத் தாக்கிய புவி காந்தப் புயலானது சூரிய நிகழ்வுகளின் 5 படிநிலைகள் எனும் அளவீட்டில் G3 எனத் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- G3 சூரியப் புயலின் தாக்கமானது பெரும்பாலும் பெயரளவு (குறைவான) என்ற வகைப் பாதிப்பாகவே இருக்கும்.




## குவாங்மு

- சீன நாடானது குவாங்மு எனப்படும் ஒரு புவி அறிவியல் செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியுள்ளது.
- இது வடக்கு சான்ஷி மாகாணத்தில் உள்ள தாயூவான் எனும் செயற்கைக்கோள் ஏவுதள மையத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- லாங்க் மார்ச்-6 தாங்கி எனும் ராக்கெட் மூலம் விண்ணிற்கு ஏவப்பட்ட செயற்கைக் கோளானது அதன் திட்டமிடப்பட்ட சுற்று வட்டப்பாதையில் நுழைந்துள்ளது.
- இது நிலையான மேம்பாட்டிற்காக ஐ.நா. விதித்த 2030 செயல்பாட்டு நிரலைப் பூர்த்தி செய்வதற்கான உலகின் முதலாவது விண்வெளி அறிவியல் செயற்கைக்கோளாகும்.




## புயல்களை ஆய்வு செய்வதற்கான புதிய திட்டம் – நாசா

- நாசா நிறுவனமானது வெப்பமண்டலப் புயல் மற்றும் இடிமின்னல்களின் போக்கு பற்றியும் வானிலை & பருவநிலை மாற்றத்தின் மீது அவை ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் ஆய்வு செய்வதற்கான ஒரு புதிய புவி அறிவியல் திட்டத்தைத் தேர்வு செய்து உள்ளது.
- இந்தத் திட்டமானது 3 சிறிய செயற்கைக் கோள்கள் இறுக்கமான ஒருங்கிணைப்புடன் இயங்கும் ஒரு தொகுப்பாக விளங்கும் என அமெரிக்க விண்வெளி நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்தது.
- இது Investigation of Convective Updrafts (INCUS) என அழைக்கப்படும்.
- இது 2027 ஆம் ஆண்டில் நாசாவின் புவிக் கிரகத்திற்கான ஒரு துணிகர முயற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## லியோனைட்ஸ் விண்கல் பொழிவு

- இது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 06 முதல் நவம்பர் 30 வரையில் பொழிகின்ற வருடாந்திர லியோனைட்ஸ் விண்கல் பொழிவானது தொடங்கியது.
- இந்த விண்கல் பொழிவானது நவம்பர் 17 அன்று உச்சத்தை அடையும்.
- இந்த உச்ச நிலையானது விண்கல் கூளங்களின் அடர்த்தி மிகுந்த பகுதி வழியே புவி கடந்து செல்லும் போது நிகழும்.
- நவம்பர் 17 அன்று புவியிலிருந்து காஸ்மிக் கூளங்களை மக்கள் பார்க்க இயலும்.
- இந்த விண்கல் பொழிவை ஏற்படுத்தும் கூளமானது லியோ விண்மீன் தொகுப்பிலுள்ள "55P/Temple-Tuttle" எனப் பெயரிடப்பட்ட ஒரு சிறியக் குள்ளக்கோளிலிருந்து உருவாகச் செய்கின்றன.

- இது சூரியனைச் சுற்றிவர 33 வருடங்களாகும்.




## 4660 நெரியஸ்

- ஈஃபில் கோபுரம் அளவிலான ஒரு குறுங்கோளானது டிசம்பர் மாதத்தில் புவியை நோக்கி நகரும் என நாசா கூறியுள்ளது.
- கணிசமான அளவில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இந்தப் பாறையானது டிசம்பர் 11 அன்று புவியைக் கடந்து விடும் என்று அந்த குறுங்கோள் மீதான கண்காணிப்புக் கருவி கணித்து உள்ளதால் அது குறித்து அச்சமடையத் தேவையில்லை என்று நாசா விண்வெளி நிறுவனம் உறுதியாக கூறியது.




## கமோஓலேவா

- கமோஓலேவா எனும் குறுங்கோளானது புவியினைப் போன்று உள்ள ஒரு பகுதியளவு துணைக் கோளாகும்.
- இது ஹவாயிலுள்ள PanSTARRS என்ற தொலைநோக்கியின் மூலம் 2006 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட, புவியின் ஒரு பழைய துணைக்கோளாகும்.

- பூமிக்கு அருகிலுள்ள விண்பொருளாக கருதப்படும் இது, பூமியிலிருந்து சுமார் 9 மில்லியன் மைல்களுக்கு அருகில் சூரியனைச் சுற்றி வருகிறது.
- இதற்குத் தானே பயணிக்கும் ஒரு சந்ததியைக் குறிக்கக் கூடிய மற்றும் ஹவாய் மந்திரத்தின் ஒரு பகுதியுமான வார்த்தையைக் கொண்டு கமோஓலேவா என்று பெயரிடப் பட்டது.



## நூற்றாண்டின் மிக நீளமான பகுதியளவு சந்திர கிரகணம்

- நவம்பர் 19 அன்று காலையில், 2021 ஆம் ஆண்டின் இரண்டாவது சந்திரக் கிரகணத்தை பல நாடுகளில் இருந்து காண இயலும்.
- இந்த நூற்றாண்டின் மிக நீளமான பகுதியளவு சந்திர கிரகணம் இதுவாகும்.
- இந்த கிரகணத்தின் உச்சக் கட்ட நிலையின் போது சந்திரனின் விட்டத்தில் 4% ஆனது பூமியின் இருண்ட குடை போன்ற நிழல் பகுதியில் மூழ்கி விடும்.
- இந்தியாவில், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அசாம் ஆகிய இடங்களின் ஒரு சில பகுதிகளில் இந்தப் பகுதியளவு கிரகணத்தைக் காண இயலும்.
- இந்தக் கிரகணத்தின் இறுதிப் பகுதியினை பீகார், உத்தரப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில் இருந்து காண இயலும்.



## DA-ASAT ஏவுகணை

- நேரடியாக மேலெழும்பும் செயற்கைக் கோள் எதிர்ப்பு ஏவுகணையினை (DA-ASAT) ரஷ்யா பரிசோதனை செய்துள்ளது.

- DA-ASAT ஏவுகணையானது காஸ்மோஸ் 1408 என்ற ஒரு ரஷ்யச் செயற்கைக்கோளை தாக்கியதன் விளைவாக, தாழ்மட்டப் புவி சுற்றுப் பாதையில் விண்கழிவுப் பொருள்கள் குவிந்தன.
- இந்தச் சோதனையானது இதுவரையில் சுமார் 1500 என்ற எண்ணிக்கையில் கண்காணிக்கும் வகையிலான சுற்றி வரக் கூடிய விண்கழிவுப் பொருள்களை உருவாக்கியுள்ளது.
- எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சோதனைகள், நூற்றாயிரக்கணக்கான சிறிய, சுற்றி வரக் கூடிய விண்கழிவுப் பொருள்களை உருவாக்கும்.
- USSPACECOM என்ற அமைப்பின் ஆரம்பக் கட்ட மதிப்பீட்டின்படி, இந்த விண்கழிவுப் பொருள்கள் பல ஆண்டுகளாக சுற்றுப்பாதையில் சுற்றி வரும் எனக் கூறப்படுகிறது.
- இதன் விளைவாக, சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள பணியாளர்களுக்கு இது குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் கூறப்படுகிறது.

## அண்டார்டிகாவினை நோக்கிய 41வது அறிவியல் ஆய்வுப் பயணம்




- அண்டார்டிகா பகுதிக்கான 41வது அறிவியல் ஆய்வுப் பயணத்தை இந்தியா வெற்றிகரமாக துவக்கியது.
- 23 அறிவியலாளர்கள் மற்றும் துணை ஊழியர்களைக் கொண்ட குழுவின் முதல் தொகுதியினர் இந்திய அண்டார்டிக் நிலையமான மைத்ரியை அடைந்துள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் மையப்பகுதியில் மேலும் நான்கு தொகுதியினர் அண்டார்டிகாவைச் சென்றடைவர்.
- 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்திய அண்டார்டிக் திட்டமானது இதுவரையில் 40 அறிவியல் ஆய்வுப் பயணங்களை நிறைவு செய்துள்ளது.

## இந்திய விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புறக்கோள்

- அபிஜித் சக்ரவர்த்தி என்பவர் தலைமையிலான இந்திய விஞ்ஞானிகள் வியாழனை விட 1.4 மடங்கு பெரிய கிரகம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த புதிய புறக் கோளானது சூரியனை விட 1.5 மடங்கு அதிக நிறையினைக் கொண்டு இருப்பதோடு, வியாழனை விட 1.4 மடங்கு பெரியதாகவும் உள்ளது.
- இந்த புறக்கோள் ஆனது TESS அட்டவணையின்படி TOI 1789 என்றும் ஹென்றி டிராப்பர் அட்டவணையின்படி HD 82139 என்றும் அழைக்கப்படுகிறது.
- அகமதாபாத்தைச் சேர்ந்த இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் இதனைக் கண்டுபிடித்து உள்ளது.
- அதன் ஆராய்ச்சியாளர்கள் மவுண்ட் அபு ஆய்வகத்தில் உள்ள PRL (Physical Research Laboratory) அமைப்பின் 1.2 மீட்டர் அளவிலான தொலைநோக்கியில் PRL மேம்பட்ட சுற்று வட்ட-திசைவேக அபு-வான் ஆராய்ச்சி (PARAS - PRL Advanced Radial-velocity Abu-sky Search) ஒளியிழை மூலமான நிறமாலை அமைப்பினைப் பயன்படுத்தினர்.




## ஸ்பைரோஃபை

- இது இந்தியாவின் முதல் நியூமோட்டாக் அடிப்படையிலான கையில் எடுத்துச் செல்லத் தக்க வகையிலான ஒரு கம்பியில்லா ஸ்பைரோமீட்டர் ஆகும்.
- இது சிப்லா என்ற நிறுவனத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது சுவாசப் பாதை அடைப்பு நோயை (OAD - Obstructive Airway Disease) கண்டறிதலில் புரட்சியை ஏற்படுத்த முனைகிறது.
- ஸ்பைரோமெட்ரி என்பது நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோயை (Chronic obstructive pulmonary disease - COPD) அறிதலுக்கான ஒரு சிறந்த முறையாகும்.

- தற்போது, இதய நோய்களுக்குப் பிறகு இந்தியாவில் இறப்புக்கான 2வது பொதுவான காரணியாக COPD நோய் உள்ளது.
- உலகளாவிய COPD நோயாளிகளில் 32% இந்தியாவில் மட்டுமே உள்ளனர்.




## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் CRISP-M தொழில்நுட்பப் பயன்பாடு

- ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 75% கிராமப் பஞ்சாயத்துகளுக்கான புவியியல் தகவல் அமைப்பு (GIS - Geographical Information System) திட்டங்களை நிறைவு செய்ததன் மூலம் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது.
- இந்தத் தொழில்நுட்பத்தினை ஊரக மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் பிரிட்டிஷ் அரசு ஆகியவை இணைந்து உருவாக்கின.




- CRISP-M ஆனது பல்வேறு புவி இயற்பியல் அளவுருக்களின் அடிப்படையில், மாறி வரும் பருவநிலையின் தாக்கத்தை உள்ளூர் மக்கள் புரிந்து கொள்வதற்கு உதவும்.

- பருவநிலை நெகிழ்திறன் தகவல் அமைப்பு மற்றும் திட்டமிடல் (CRISP-M) தொழில் நுட்பமானது இந்தப் புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படையிலான திட்டமிடல் தரவுகளைப் பருவநிலைத் தரவுகளுடன் ஒருங்கிணைக்கும்.

## அண்டார்டிகாவினை நோக்கிய 41வது அறிவியல் ஆய்வுப் பயணம்

- இது கோவாவிலுள்ள தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையத்தினால் மேற்கொள்ளப் படுகிறது.
- இந்த ஆராய்ச்சி மையமானது புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு சுயாதீன தன்னாட்சி நிறுவனமாகும்.
- 1981 ஆம் ஆண்டில் இந்திய அண்டார்டிகா திட்டங்கள் தொடங்கப் பட்டன.
- இந்தத் திட்டங்கள் அண்டார்டிகா பகுதியில் மூன்று நிரந்தர ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதில் உதவின. அவை,
  - தக்சின் கங்கோத்ரி – 1983
  - மைத்ரி – 1988 மற்றும்
  - பாரதி – 2012




## இஸ்ரோவின் சந்திரயான் – 2 மற்றும் நாசாவின் சந்திர ஆய்வுப் பணிக்கான விண்கலம் (LRO)

- இஸ்ரோவின் சந்திரயான்-2 மற்றும் நாசாவின் சந்திர ஆய்வுப் பணிக்கான விண்கலம் (LRO - Lunar Reconnaissance Orbiter) ஆகியவை துருவ சுற்றுப்பாதையில் நிலவினைச் சுற்றி வருகின்றன.
- இரு விண்கலங்களும் ஒன்றோடொன்று நெருங்கி வந்தன.
- சந்திரயான்-2 விண்கலமானது கடந்த 2 ஆண்டுகளாக நிலவைச் சுற்றி வருகிறது.

- இஸ்ரோ மற்றும் நாசா ஆகிய இரு நிறுவனங்களும் அவற்றினுடைய விண்கலங்கள் மோதிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக ஒரு மோதல் தவிர்ப்பு நடவடிக்கைக்கு ஒப்புக் கொண்டன.
- மோதல் தவிர்ப்பு நடவடிக்கை என்பது, பூமியின் சுற்றுப்பாதையிலுள்ள செயற்கைக் கோள்கள், மற்ற செயற்கைக்கோள்கள் மற்றும் இதர விண்வெளிக் கழிவு சாதனங்கள் உள்ளிட்ட விண்பொருட்களுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்கான ஒரு பொதுவான நடவடிக்கையாகும்.




## இன்சுலின் சமிக்ஞை வழங்கீடு மற்றும் திசுவின் ஆரோக்கியம்




- சமிக்ஞை கட்டமைப்பின் மூலமான தகவல் வழங்கீட்டினை இன்சுலின் அளவு எவ்வாறு தகவமைக்கிறது என்பது குறித்து ஒரு புதிய ஆய்வு தெளிவுபடுத்தியுள்ளது.
- இன்சுலின் சமிக்ஞை வழங்கீடு என்பது இன்சுலின் இருப்பு மற்றும் இரத்தத்தில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் குறித்த தகவல்களை தெரிவிக்கும் ஓர் உயிரி வேதியியல் எதிர்வினை ஆகும்.
- இன்சுலின் சமிஞ்ஞை வழங்கீட்டிற்கு 2 முக்கிய வழிகள் உள்ளன (AKT மற்றும் ERK).

- இவை ஒன்றிணைந்து வளர்சிதை மாற்றத்தையும் வளர்ச்சியையும் சமநிலைப் படுத்துகின்றன.
- இவை குறிப்பாக கல்லீரலில் குளுக்கோஸ் சேமிப்பின் அளவைக் கட்டுப்படுத்தச் செய்வதோடு, எலும்புத் தசைகள் மற்றும் கொழுப்பு ஆகியவற்றில் குளுக்கோஸ் பரிமாற்றத்தையும் தூண்டுகிறது.

## புளூ ஆரிஜின் வழக்கு

- நிலவின் மீது விண்வெளி வீரர்களைத் தரையிறக்குவதற்கான தனது திட்டத்தை 2025 ஆம் ஆண்டிற்கு நாசா நிறுவனம் தள்ளி வைத்துள்ளது.
- எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் X என்ற நிறுவனம் நிலவின் மீது தரையிறங்குவதற்கான விண்கலத்தைக் கட்டமைப்பது தொடர்பான ஒரு கருத்து முரண்பாட்டின் காரணமாக இது தள்ளி வைக்கப்பட்டுள்ளது.
- ஜெப் பெசோஸினுடைய விண்வெளி நிறுவனமானது புளூ ஆரிஜின் என அறியப் படுகிறது.

## நாசாவின் லேசர் தகவல் தொடர்பு பரிமாற்றச் செயல்விளக்கம்




- நாசா நிறுவனமானது விண்வெளியில் லேசர் தகவல்தொடர்பு பரிமாற்றச் செயல் விளக்கத்தினைப் பரிசோதிக்க உள்ளது.
- விண்வெளி சார்ந்த தகவல்தொடர்புகளை மிக விரைவாக்கும் நோக்கத்துடன் இந்த முயற்சியானது மேற்கொள்ளப்பட உள்ளது.
- இது அமெரிக்காவின் ஃபுளோரிடாவிலுள்ள கேப் கேனவெரல் என்ற விண்வெளித் தளத்திலிருந்து விண்ணில் ஏவப்பட உள்ளது.

## பிரான் நெபுலா

- ஹபிள் தொலைநோக்கியானது “பிரான் நெபுலா” (Prawn Nebula) என்ற விண்மீன் திரளைக் கண்டறிந்துள்ளது.
- இது ஸ்கார்பியஸ் விண்மீன் திரளில் சுமார் 6000 ஒளி ஆண்டுகள் தொலைவிற்கு அப்பால் அமைந்துள்ள ஒரு மிகப்பெரிய நட்சத்திரக் குவியலாகும்.
- வானியலாளர்கள் இந்தப் பிரான் நெபுலாவினை உமிழ்வு நெபுலா என வகைப்படுத்தச் செய்கின்றனர்.
- அதாவது இதன் வாயுவானது அருகமைந்த நட்சத்திரங்களின் கதிர் வீச்சினால் ஆற்றலூட்டப்பட்டு (அ) அயனியூட்டப்பட்டு அமைந்துள்ளது.

## DART திட்டம்




- அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, DART எனப்படும் இது போன்ற முதல் வகை திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது ஒரு குறுங்கோளின் மீது ஒரு விண்கலத்தை வேண்டுமென்றே மோதச் செய்வதன் மூலம் அதன் பாதையை மாற்றுவதற்கான ஒரு திட்டமாகும்.
- DART என்பதன் விரிவாக்கம் Double Asteroid Redirection Test (இரட்டைக் குறுங்கோள் மாற்றுப் பாதைப் பரிசோதனை) ஆகும்.
- DART விண்கலமானது அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள வான்டன்பெர்க் என்ற விண்வெளி தளத்திலிருந்து ஸ்பேஸ் X பால்கன் 9 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப் படும்.

## SWOT ஆய்வுத் திட்டம்

- மேற்பரப்பு நீர் மற்றும் பெருங்கடல் நில அமைப்பு ஆய்வுத் திட்டமானது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்ணில் ஏவப்பட உள்ளது.
- SWOT (Surface Water and Ocean Topography Mission) திட்டமானது ஐக்கிய ராஜ்ஜியத்தின் விண்வெளி நிறுவனம் மற்றும் கனடா விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புகளுடன் கூடிய, நாசா மற்றும் பிரான்சு தேசிய விண்வெளி ஆய்வு மையம் ஆகியவற்றிற்கிடைப்பட்ட ஒரு ஒத்துழைப்புத் திட்டமாகும்.

- SWOT ஆய்வுத் திட்டத்திற்கான செயற்கைக் கோளானது புவியிலுள்ள பெருங் கடல்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் உள்ளிட்ட உப்புநீர் மற்றும் நன்னீர் ஆதாரங்களின் உயரம் குறித்த தரவுகளை சேகரிக்கும்.
- இது உலகெங்கிலும் உள்ள நீர் ஆதாரங்களின் அடர்த்தி மற்றும் அமைவிடங்களைக் கண்காணிப்பதற்கு ஆராய்ச்சியாளர்களுக்கு உதவி வழங்கும்.



## நட்சத்திரங்கள் கண்டுபிடிப்பு

- புனேவிலுள்ள தேசிய ரேடியோ வானியற்பியல் மையத்தினைச் சேர்ந்த வானியலாளர்கள் 8 நட்சத்திரங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- அவை முதன்மை வரிசை ரேடியோ இயக்க உமிழ்விகள் (Main-sequence Radio Pulse emitters – MRPs) எனப்படும் அரிய வகையைச் சேர்ந்தவை.
- MRPs ஆனது புனேவில் அமைந்துள்ள மிகப்பெரிய மீட்டர் அளவு ரேடியோ அலை தொலைநோக்கியின் மூலம் கண்டறியப்பட்டது.
- இதற்கு முன்பு, இந்தத் தொலைநோக்கியைப் பயன்படுத்தி இதே போன்ற மேலும் மூன்று நட்சத்திரங்களை இக்குழு கண்டறிந்துள்ளது.
- எனவே, இதுவரையில் 15 கண்டறியப்பட்ட MRPs உள்ளன.
- 11 MRP உமிழ்விகள் மிகப்பெரிய மீட்டர் அளவு ரேடியோ அலை தொலைநோக்கியைக் கொண்டு கண்டுபிடிக்கப் பட்டன.
- 2021 ஆம் ஆண்டில் மட்டும் 8 MRP உமிழ்விகள் கண்டுபிடிக்கப்பட்டன.

## ரெகோலித் அடுக்கில் ஆக்சிஜன்

- ரெகோலித் எனப்படும் நிலவின் மேலடுக்குப் பாறைகள், பூமியில் வாழும் 8 மில்லியன் மக்கள் கிட்டத்தட்ட 100,000 ஆண்டுகள் வரை வாழ்வதற்குப் போதுமான ஆக்சிஜனைக் கொண்டுள்ளன.
- செயின்ட் லூயிஸ் நகரிலுள்ள வாசிங்டன் பல்கலைக்கழகத்தின் விண்கல் தகவல் அறிக்கையில் இந்தத் தகவலானது கூறப்பட்டுள்ளது.
- ரெகோலித் அடுக்கிலிருந்து மனித வாழ்விற்கு உயிரளிப்பதற்கு உதவக் கூடிய, மனிதப் பயன்பாட்டிற்கு ஏதுவான ஆக்சிஜனைப் பிரித்தெடுக்க இயலும் என இந்த அறிக்கை தெரிவித்தது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்கு அறிக்கை 2021

- OP ஜிண்டால் உலகப் பல்கலைக்கழகமானது இது போன்ற முதல் வகையிலான "நிலையான மேம்பாட்டு இலக்குகளை அமல்படுத்துதல் : சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் பல்கலைக்கழகங்கள் மற்றும் மக்கள் சமுதாயத்தின் பங்கு" எனும் ஒரு அறிக்கையினை வெளியிட்டது.
- இது ஐக்கிய நாடுகள் விதித்த 17 நிலையான மற்றும் வளங்குன்றா மேம்பாட்டு இலக்குகளுக்கு இணங்குவதை மதிப்பிடுகிறது.

## பருவநிலை பாதிப்புக் குறியீடு

- ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் தண்ணீர் மீதான சுற்றுச்சூழல் சார் ஆலோசனைக் குழுவானது தன்னளவில் இது போன்ற முதல் வகையிலான தனது "மாவட்ட அளவிலான பருவநிலைப் பாதிப்பு மதிப்பீடு (அ) பருவநிலை பாதிப்புக் குறியீட்டினை" மேற் கொண்டுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள 140 மாவட்டங்களைப் புயல், வெள்ளம், வெப்ப அலைகள், வறட்சி போன்ற தீவிரமான வானிலைகளுக்கு எவ்வளவு பாதிப்பிற்கு உள்ளாகின்றன என்று மதிப்பிட்டுள்ளது.
- இந்த மதிப்பீட்டின்படி, இந்தியாவில் வெள்ளம், வறட்சி மற்றும் புயல் போன்ற தீவிரப் பருவநிலை நிகழ்வுகளுக்கு மிகவும் பாதிப்புள்ளாகக் கூடியதாக அசாம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் பீகார் ஆகியவை உள்ளன.
- அசாமில் உள்ள தேமாஜி மற்றும் நகாவோன், தெலங்கானாவிலுள்ள கம்மம், ஒடிசாவிலுள்ள கஜபதி, மகாராஷ்டிராவிலுள்ள சாங்கிலி, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விஜய நகரம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சென்னை ஆகியவை பருவநிலையினால் அதிகம் பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்களாகும்.



## ஆர்க்டிக் டெர்ன்ஸ் (வடமுனை ஆலா குருவி)




- ஆர்க்டிக் பகுதியிலிருந்து மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோளக் காப்பத்திற்கு வரும் ஆர்க்டிக் டெர்ன்ஸ் உள்ளிட்ட பறவைகளின் வருடாந்திர இடம்பெயர்வானது தொடங்கியுள்ளது.
- இந்தப் பருவகால இடம் பெயர்வானது மத்திய ஆசியாவின் வான்வழிப் பாதையில் நிகழ்கிறது.
- ஆர்க்டிக் டெர்ன்ஸ் பறவைகளானது கோண வடிவ (கூர்முனை) இறக்கைகள் கொண்டுள்ள மற்றும் நீர்நிலையை விரும்புகின்ற பறவைகளாகும்.
- இவை நீண்ட தூர வருடாந்திர இடம்பெயர்விற்காக நன்கு அறியப்படுகின்றன.
- இவை ஒவ்வொரு ஆண்டும் 70,000 கி.மீ. தூரம் பயணித்து ஒரு துருவம் முதல் மற்றொரு துருவம் வரை (ஆர்க்டிக் முதல் அண்டார்டிகா வரை) இடம் பெயர்கின்றன.

## உலகிலுள்ளப் பவளப்பாறைகளின் நிலை : 2020 அறிக்கை

- இந்த அறிக்கையானது உலகளாவியப் பவளப்பாறைகள் கண்காணிப்புக் கட்டமைப்பினால் தயாரிக்கப் பட்டது.
- இது உலகிலுள்ள பவளப்பாறைகளில் அளவிடப்பட்ட வெப்பநிலை உயர்வு பற்றிய அறிவியல் தகவல்களை வழங்குகிறது.
- 2019 ஆம் ஆண்டு முதல் உலகின் 14% பவளப்பாறைகள் அழிந்து விட்டதாக இந்த அறிக்கை கூறுகிறது.




## உமிழ்வுநிலைப் பட்டியலுக்கு இந்தியா அங்கீகாரம்

- ❖ இத்தனை ஆண்டுகளாக வளர்ச்சியடைந்த நாடுகள் (வரலாற்று ரீதியிலான) வெளியிட்ட கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைப் பட்டியலிடுகின்ற, இந்தியப் பருவ நிலை நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு வலைதளத்திற்கு இந்தியா அதிகாரப் பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் உமிழ்வுகளில் உள்ள வேறுபாட்டினை எடுத்துரைக்கும் நோக்கத்துடன் இந்த உமிழ்வுப் பட்டியலானது தயாரிக்கப் பட்டது.
- ❖ அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் போன்றவை நிகர கார்பன் கடனைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடப் படுகின்றன.
- ❖ இந்தியா மற்றும் சீனா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் நிகர கடனைப் பெற்று உள்ளன.
- ❖ எனவே வளர்ந்து வரும் நாடுகளைவிட உமிழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான உயரிய இலக்குகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் உறுதியளிப்பதே நியாயமானது என்று இந்த தரவுத்தளம் குறிப்பிடுகிறது.

*குறிப்பு*

- ❖ வருடாந்திர அடிப்படையில் கரியமில வாயு உமிழ்வில் இந்தியா 3வது பெரிய நாடாக உள்ளது.
- ❖ இருப்பினும் அதன் வரலாற்று ரீதியிலான உமிழ்வின் அடிப்படையில் அது 6வது பெரிய உமிழ்வு நாடாகவே உள்ளது.

- தனது மக்கள் தொகை அளவைக் கருத்தில் கொள்கையில் தனிநபர் உமிழ்வில் இது மிகக் குறைவான அளவையேக் கொண்டுள்ளது.

## அமெரிக்கா மற்றும் ஐஎஸ்ஏ




- சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியில் (ஐஎஸ்ஏ) ஒரு உறுப்பு நாடாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் (அமெரிக்கா) இணைந்துள்ளது.
- ஐஎஸ்ஏ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 101வது நாடு அமெரிக்காவாகும்.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடந்த COP26 காலநிலை உச்சி மாநாட்டில், கால நிலைக்கான அமெரிக்க ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர் ஜான் கெர்ரி முறைப்படி இந்தக் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.
- ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் இந்தியாவை உள்ளடக்கிய "One Sun One World One Grid" திட்டத்தின் வழிகாட்டல் குழுவிலும் அமெரிக்கா சேர்ந்துள்ளது.
- பிரதமர் மோடி மற்றும் பிரான்ஸ் நாட்டின் முன்னாள் அதிபர் பிராங்கோயிஸ் ஹாலண்டே ஆகியோரால் 2015 ஆம் ஆண்டு சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி தொடங்கப் பட்டது.
- இது பிரான்சின் பாரீஸில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்ற மாநாட்டின் (COP-21) 21வது அமர்வின் போது தொடங்கப்பட்டது.

## e-AMRIT தளம்

- ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோவில் நடந்த COP26 உச்சி மாநாட்டில் இந்தியா e-Amrit என்றழைக்கப்படும் மின்சார வாகன விழிப்புணர்விற்கான இணையத் தளத்தை அறிமுகப்படுத்தியது.
- இது இந்தியா-இங்கிலாந்து கூட்டுத் திட்டம் 2030 என்பதின் ஒரு பகுதியாக நிதி ஆயோக் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் உருவாக்கப் பட்டது.
- e-AMRIT தளம் என்பது "இந்தியாவின் போக்குவரத்துக்கான விரைவான மின்வாகனப் போக்குவரத்துப் புரட்சி" (Accelerated e-Mobility Revolution for India's Transportation) என்பது ஆகும்.




## Deocha Pachami Harinsingha Dewanganj




- இது மேற்கு வங்காளத்தின் பிர்பூம் மாவட்டத்தில் அமைந்துள்ள உலகின் இரண்டாவது பெரிய நிலக்கரிச் சுரங்கத் தொகுதியாகும்.
- மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, இந்தத் திட்டத்தால் இடம்பெயர்ந்து அல்லது பாதிக்கப்பட்டு வாழ்பவர்களுக்கு ₹10,000 கோடி அளவிலான ஒரு இழப்பீட்டுத் தொகுப்பினை வழங்க உள்ளதாக அறிவித்தார்.

## அமேசான் காடுகள் அழிக்கப்படுதல்

- சமீபத்திய தரவுகளின்படி, பிரேசிலின் அமேசான் காடுகளில் அழிக்கப்பட்ட வனப் பகுதிகளின் அளவானது 15 ஆண்டுகளில் இல்லாத அளவிலான ஒரு உச்சத்தை எட்டி உள்ளது.
- அமேசான் மழைக்காடுகள் என்பவை அமேசான் உயிரினக் குழுமத்தில் அமைந்துள்ள ஒரு ஈர நிலமான மற்றும் பரந்து விரிந்த வெப்பமண்டல மழைக்காடு ஆகும்.
- அமேசான் பூமியின் மற்ற மழைக் காடுகளில் உள்ள அளவில் பாதிக்கும் மேலான மழைக் காடுகளை உள்ளடக்கியதாகும்.
- அமேசானின் வனப்பகுதிகள் அழிக்கப்படுவதற்கான முக்கிய காரணங்கள் என்பவை மனிதர்களின் குடியேற்றம் மற்றும் நில மேம்பாடு ஆகியவை ஆகும்.

- இந்தக் காடுகளின் அழிவுக்கு மற்றொரு காரணமாக திகழ்வது காட்டுத் தீ ஆகும்.




## கிரிப்டோகாரியா முதுவாரியானா

- இது முதுவர் பழங்குடி சமூகம் வசிக்கும் இடுக்கி வனப்பகுதியில் கண்டறியப்பட்ட ஒரு புதிய வகை தாவர இனமாகும் (Cryptocarya Muthuvariana).
- இந்த வகை மரங்கள் கிரிப்டோகாரியா இனத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- முதுவன் இன மக்கள் மதுரை வம்சத்தின் (Madurai dynasty) விசுவாசம் மிக்க குடிமக்கள் ஆவர்.



## குளோபல் அவுட்லுக் அறிக்கை 2021: காலநிலை லட்சியத்தின் நிலை




- ❖ இது உலக வானிலை அமைப்பு அறிக்கையின் ஒரு தற்காலிகத் தரவாகும்.
- ❖ இது COP26 என்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றப் பேச்சுவார்த்தை மாநாட்டின் தொடக்க நாளன்று செய்தியாளர் சந்திப்பில் வெளியிடப்பட்டது.
- ❖ 2021 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுக்கான தரவுகளின் அடிப்படையில், கடந்த ஏழு வருடங்களும் ஏழு வெப்பமான வருடங்களாக பதிவாகி உள்ளன.
- ❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு தற்காலிக குளிர்ச்சியான "லா நினா" என்ற நிகழ்வு ஏற்படுகிறது என்றால், 2021 ஆம் ஆண்டானது ஐந்தாவது முதல் ஏழாவது வெப்பமான ஆண்டாக "மட்டும்" இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ தொடர்ச்சியான கடல் வெப்பமயமாதல் மற்றும் கடல் அமிலமயமாக்கல் போன்ற நிகழ்வுகளுடன் உலகளாவிய கடல் மட்ட உயர்வு 2013 ஆம் ஆண்டு முதல் உயர்ந்து 2021 ஆம் ஆண்டில் ஒரு புதிய உச்சத்திற்குத் துரிதமாக உயர்ந்துள்ளது.

## 6th Adaptation Gap Report 2021 – தி கேதரிங் ஸ்டோர்ம்

- ❖ இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தால் வெளியிடப்பட்டது.
- ❖ காலநிலை மாற்றத்தை ஏற்று, அதைச் சமாளிக்க, அது சார்ந்த நிதியைத் துரிதமாக உருவாக்க வேண்டிய ஒரு அவசரத் தேவை இருப்பதாக இந்த அறிக்கை கண்டறிந்து உள்ளது.
- ❖ COVID-19 மீட்புத் தூண்டுதல் தொகுப்புகளும் இதற்கு நிதியளிக்கச் செய்வதற்கான ஒரு வாய்ப்பை இழந்துள்ளன.
- ❖ உலகம் வெப்பமயமாதலை 1.5 டிகிரி செல்சியஸாகக் கட்டுப்படுத்தினாலும், பல கால நிலை ஆபத்துகள் தொடர்ந்து நீடித்து வருவதுடன் இயல்பு நிலைக்குத் திரும்பாமலும் இருக்கும்.




## உலகப் பருவநிலை குறித்த அறிக்கை 2021

- இது உலக வானிலை அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- கடந்த ஏழு ஆண்டுகளானது மிக வெப்பமானதாக பதிவாகியுள்ளதாகவும் 2013 ஆம் ஆண்டு முதல் கடல்மட்ட உயர்வு துரிதப்படுத்தப் பட்டு 2021 ஆம் ஆண்டில் அது புதிய ஒரு உச்சத்தை எட்டியுள்ளதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- கடல்நீர் வெப்பமடைதல் மற்றும் கடல்நீர் அமிலமாக்கல் ஆகியவை கடல்நீர் மட்டம் உயர்வதற்கான காரணம் என்று இந்த அறிக்கை கூறுகிறது.




- COP26 மாநாட்டின் போது தண்ணீர் வளம் மற்றும் பருவநிலை தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக உலக வானிலை அமைப்பு தண்ணீர் வளம் மற்றும் பருவநிலை கூட்டணியைத் தொடங்கியது.

- ❖ வானிலை குறித்தக் கணிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் போன்றவற்றை மேம்படுத்தச் செய்வதற்காக ஒரு முறையான கண்காணிப்பு நிதி வசதியையும் இது தொடங்கியது.

## IQAir தரவுகள் - 2020 உலகக் காற்றுத் தரநிர்ணய அறிக்கை

**CAUSE FOR CONCERN**

Of the 15 most polluted cities, 13 were in India

| Rank | City | 2020 AVG PM2.5 |
|---|---|---|
| 1 | Hotan, China | 110.2* |
| 2 | Ghaziabad | 106.6 |
| 3 | Bulandshahr | 98.4 |
| 4 | Bisrakh Jalalpur | 96 |
| 5 | Bhiwadi | 95.5 |
| 6 | Noida | 94.3 |
| 7 | Greater Noida | 89.5 |
| 8 | Kanpur | 89.1 |
| 9 | Lucknow | 86.2 |
| 10 | Delhi | 84.1 |
| 11 | Faridabad | 83.3 |
| 12 | Meerut | 82.3 |
| 13 | Jind | 81.6 |
| 14 | Hisar | 81.1 |
| 15 | Kashgar, China | 81 |

*Unit: µg/m³

SOURCE: 2020 WORLD AIR QUALITY REPORT

- ❖ காற்றின் தரமானது pm2.5, pm10, ஓசோன், சல்பர் டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு மற்றும் கார்பன் மோனாக்சைடு ஆகியவற்றின் அளவை மதிப்பிடுவதன் மூலம் நிர்ணயிக்கப் படுகிறது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் உலகின் மிக மாசடைந்த 100 நகரங்களில் 46 நகரங்கள் இந்திய நகரங்களாகும்.
- ❖ இந்தியாவைத் தொடர்ந்து சீனா (42 நகரங்களுடன்), பாகிஸ்தான் (6 நகரங்களுடன்), வங்காளதேசம் (4 நகரங்களுடன்) ஆகியவை உள்ளன.
- ❖ உலகளவில் முன்னணியிலுள்ள மிகவும் மாசடைந்த 10 நகரங்களில் 9 இடங்களில் இந்திய நகரங்கள் உள்ளன.
- ❖ அந்த 9 நகரங்கள் காசியாபாத், புலந்தர்ஷா, பிஸ்ராக் ஜலால்பூர், பிவடி, நொய்டா, கிரேட்டர் நொய்டா, கான்பூர், லக்னோ மற்றும் டெல்லி ஆகியனவாகும்.
- ❖ 2020 ஆம் ஆண்டில் தொடர்ந்து நேரடியாக மூன்றாவது ஆண்டாக புது தில்லி உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகரமாக உள்ளது.

- 20 முதல் 40 சதவிகிதம் வரையிலான அளவில் டெல்லியின் காற்று மாசுவானது தேசியத் தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயத்தில் எரிக்கப் படும் பயிர்த் தாளடி எரிப்புகளில் இருந்து வருவதாக மதிப்பிடப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டில் சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் உள்ள ஹோடான் நகரம் மிக மோசமான சராசரிக் காற்றுத் தரத்தைக் கொண்டிருந்தது.
- IQAir என்பது சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த காற்றுத்தர தொழில்நுட்ப நிறுவனமாகும்.

## லா நினா




- பசிபிக் பெருங்கடலில் தொடர்ந்து 2வது ஆண்டாக லா நினா என்ற வானிலை நிகழ்வு உருவாகியுள்ளதாக ஆஸ்திரேலியா அறிவித்தது.
- லா நினா என்பது கடல்சார்ந்த மற்றும் வளிமண்டலம் சார்ந்த ஒரு நிகழ்வாகும்.
- லா நினா காலத்தின் போது, மத்தியப் பசிபிக் பெருங்கடலின் கிழக்கு நில நடுக் கோட்டுப் பகுதி முழுவதும் கடல்பரப்பு வெப்பநிலையானது இயல்பைவிட 3 – 5 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் குறைவாக இருக்கும்.
- லா நினா நிகழ்வின்போது, பொதுவாக அதிக வெப்பமண்டலப் புயல்கள், அதிக மழைப் பொழிவு மற்றும் நிலநடுக்கோட்டு பசிபிக் பெருங்கடலில் வெப்ப நிலை சராசரி வெப்ப நிலையை விட குளிர்ந்து காணப்படுதல் போன்ற நிகழ்வுகள் உருவாகும்.
- இது எல் நினோ நிகழ்வின் குளிர்ச்சி மிகுந்த எதிர்வினை ஆகும்.
- இது மிகப்பெரிய எல் நினோ – தெற்கு அலைவு என்ற பருவநிலை நிகழ்வின் ஒரு பகுதி ஆகும்.

## இந்தியாவின் நிலக்கரிப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமான சமூக – பொருளாதார விளைவுகள்

- நேஷனல் பவுண்டேசன் ஃபார் இந்தியா என்ற ஒரு சிந்தனைக் குழு அமைப்பால் இது வெளியிடப் பட்டது.
- இது இந்தியாவிலுள்ள ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்காளம், தெலங்கானா, சத்தீஸ்கர், ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள் ஆகிய 9 மாநிலங்களிலுள்ள நிலக்கரி இருப்புக் கொண்ட சுமார் 266 மாவட்டங்களை மதிப்பீடு செய்து தரவுகளைச் சேகரித்தது.
- நிலக்கரிப் பயன்பாட்டிலிருந்துப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களுக்கு மாறும் சமயத்தில் ஜார்க்கண்ட் மோசமாக பாதிக்கப்படும் என்று இந்த அறிக்கை குறிப்பிட்டு உள்ளது.
- இந்தியாவிலுள்ள நிலக்கரி இருப்புக் கொண்ட 266 மாவட்டங்களில் 135 மாவட்டங்கள் நிலக்கரிப் பயன்பாட்டின் படிப்படியான குறைப்பினால் கடுமையாக பாதிக்கப்படும் என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.



# மாநிலச் செய்திகள்

## கன்னட இராஜ்யோத்சவா




- கர்நாடகத்தின் தனித்துவமான 1000 சுற்றுலாத் தளங்களில் பிரபலமான கன்னடப் பாடல்களை சுமார் 5 லட்சம் பாடகர்கள் பாடினர்.
- இந்த நிகழ்வானது அந்த மாநில அரசின் கன்னட இராஜ்யோத்சவா என்ற கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- கர்நாடக தினம் (அ) கன்னட இராஜ்யோத்சவா (அ) கர்நாடகா ஸ்தாபன தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 01 அன்று கொண்டாடப்படுகிறது.
- 1965 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் தென்னிந்தியாவில் கன்னட மொழி பேசும் மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளும் இணைக்கப்பட்டு கர்நாடக மாநிலமானது உருவாக்கப் பட்டது.

## பள்ளிகளுக்கான FIFA கால்பந்து திட்டம்

- புவனேஷ்வரிலுள்ள கலிங்கா சமூக அறிவியல் கல்வி நிறுவனமானது உலகில் முதல் முறையாக பள்ளிகளுக்கான FIFIA கால்பந்து திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- பள்ளிகளுக்கான கால்பந்து திட்டமானது FIFA என்ற அமைப்பினால் நடத்தப்படும் ஓர் உலகளாவியத் திட்டமாகும்.
- இது சுமார் 700 மில்லியன் குழந்தைகளின் கல்வி, மேம்பாடு மற்றும் அதிகாரம் வழங்குதல் போன்றவற்றில் பங்களிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சாதி அடிப்படையிலான மக்கள்தொகைக் கணக்கெடுப்பு – ஆந்திரப் பிரதேசம்

- 2021 ஆம் ஆண்டிற்கான தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினரைக் குறிப்பிடுவதற்காக ஜாதி அடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை மேற்கொள்ளுமாறு மத்திய அரசிடம் கோரிக்கை ஒன்றை விடுக்க ஆந்திரப் பிரதேச அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- சமீபத்தில் தெலங்கானா மாநில அரசும் இது போன்ற தீர்மானத்தினைத் தனது மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றியது.

- பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரின் நலனுக்கான ஒரு தனித் துறையை அமைக்கவும் ஆந்திரப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- உயர்சாதியைச் சேர்ந்த ஏழை மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தும் நோக்கத்துடன் இத்துறையானது உருவாக்கப்பட்டது.

## நறுமணத் தோட்டம் – உத்தரகாண்ட்

- உத்தரகாண்ட் மாநிலமானது நைனிடால் மாவட்டத்தில் இந்தியாவின் மிகப்பெரிய நறுமணத் தோட்டத்தினை அமைத்துள்ளது.
- உத்தரகாண்ட் வனத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவானது நைனிடால் மாவட்டத்தில் லால்குவான் பகுதியில் அமைந்த இந்தியாவின் மிகப்பெரிய நறுமணத் தோட்டத்தைத் திறந்து வைத்தது.
- இந்தத் தோட்டத்தில் இந்தியா முழுவதும் உள்ள 140 வகையான நறுமணத் தாவரங்கள் உள்ளன.



## ஆப்பிள் திருவிழா

- மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மற்றும் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா ஆகியோர் காணொளி வாயிலாக ஆப்பிள் திருவிழாவைத் தொடங்கி வைத்தனர்.
- இது ஜம்மு & காஷ்மீரின் ஸ்ரீநகரில் முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ளது.
- ஆண்டுக்கு 2 மில்லியன் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான உற்பத்தியோடு ஜம்மு & காஷ்மீரின் ஆப்பிள் உற்பத்தியானது தேசிய உற்பத்தி அளவில் 87% பங்கினை வகிக்கிறது.

## சிந்து நதி ஓங்கில் - கணக்கெடுப்பு

- பஞ்சாப் மாநிலமானது சிந்து நதி ஓங்கில்களின் கணக்கெடுப்பைத் தொடங்க உள்ளது.
- சிந்து நதி ஓங்கிலின் அறிவியல் பெயர் பிளாடானிஸ்தா கேஞ்ஜெட்டிகா மைனர் ஆகும்.
- இது பியாஸ் நதியில் காணப்படும் ஒரு நன்னீர் ஓங்கிலாகும்.
- இந்தத் திட்டமானது 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.
- 2019 ஆம் ஆண்டில் சிந்து நதி ஓங்கிலானது பஞ்சாபின் மாநில நீர்வாழ் உயிரினமாக அறிவிக்கப் பட்டது.

## சுகாதார அமைப்புகள் – மேகாலயா

Meghalaya Health Systems Strengthening Project
World Bank Financed Project, Government of Meghalaya

- இந்திய அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற் கொண்டுள்ளன.
- இது மேகாலயாவில் சுகாதார சேவை அமைப்புகளின் தரத்தை மேம்படுத்தச் செய்வதற்கான ஒப்பந்தமாகும்.
- இதற்கு "மேகாலயாவில் சுகாதார அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்" எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மாநிலத்தின் மேலாண்மை மற்றும் நிர்வாகத் திறன்களோடு அதன் சுகாதார வசதிகளையும் மேம்படுத்தும்.

## சர்வதேச விதை மாநாடு - தெலுங்கானா

- உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் காணொளி மூலம் நடத்தப்படும் மாநாட்டில் பங்கேற்பதற்கு வேண்டி தெலுங்கானா அரசிற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.
- சர்வதேச விதை மாநாடானது 2 நாட்கள் அளவிலான ஒரு மாநாடாகும்.
- இது இத்தாலியின் ரோம் நகரில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் 04 மற்றும் நவம்பர் 05 அன்று நடைபெற உள்ளது.
- இந்த மாநாடானது விதை உற்பத்தித் துறையில் மேம்பாடு குறித்து விவாதிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது.

## ஜனசேவகா திட்டம்



- ஜனசேவகா திட்டமானது கர்நாடக அரசினால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டமானது மாநில அரசின் 56 சேவைகளை மக்களின் வீடு தேடி வழங்குவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இத்திட்டத்தின் கீழ் சொத்துச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் விதவை ஓய்வூதியப் பயன்கள் போன்ற பல சேவைகள் வீடு தேடி வழங்கப்படும்.

## பெரிய அளவிலான மாலிக் அன்ஹைட்ரைடு ஆலை

- அரசிற்குச் சொந்தமான இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனமானது ஹரியானாவிலுள்ள தனது பானிபட் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பெட்ரோலிய வளாகத்தில் இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு பெரிய அளவிலான மாலிக் அன்ஹைட்ரைடு ஆலையினை (Maleic Anhydride Plant) நிறுவ உள்ளது.
- இது மதிப்புக் கூட்டப்பட்ட வேதிப் பொருட்களை தயாரிப்பதற்கான ஆலையாகும்.
- இந்த ஆலையானது ஆண்டுக்கு 1,20,000 டன்கள் அளவில் மாலிக் அன்ஹைட்ரைடை உற்பத்தி செய்யும் வகையில் நிறுவப்பட உள்ளது.
- பாலியஸ்டர் ரெசின்கள் மற்றும் மேற்பரப்புப் பூச்சுகளுக்கான பிளாஸ்டிசைசர்ஸ், வேளாண் வேதிப் பொருட்கள் மற்றும் உயவுப் பொருட்கள் போன்ற சிறப்புத் தயாரிப்புகளைத் தயாரிக்க இது பயன்படுத்தப்படும்.




## குஜராத்திப் புத்தாண்டு

- பெஸ்து வரஸ் என அழைக்கப்படும் குஜராத்திப் புத்தாண்டானது நவம்பர் 05 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இத்தினமானது இந்து நாள்காட்டியில் கார்த்திகை மாதத்தின் பிரதிபத திதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- சுக்ல பட்சமானது குஜராத்திப் புத்தாண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- பெஸ்து வரஸ் என்பது பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடன் தொடர்புடையதாகும்.

## மாடியில் அமைந்த வாகன நிறுத்தத்துடன் கூடிய திரையரங்கம்

- மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஜியோ வேர்ல்ட் டிரைவ் என்ற வணிக வளாகத்தில் இந்தியாவின் முதலாவது திறந்த வெளியிலான மாடியில் அமைந்த வாகன நிறுத்தத்துடன் கூடிய திரையரங்கம் திறக்கப் பட்டது.

- இந்த திரையரங்கமானது மல்டிப்ளக்ஸ் கட்டமைப்பு நிறுவனமான பிவிஆர் லிமிடெட் என்ற நிறுவனம் மூலம் இயக்கப்பட்டு நிர்வகிக்கப்படும்.
- இந்த திரையரங்கில் திரையிடப்பட்ட முதல் படம் அக்ஷய் குமார் நடித்த சூரியவன்ஷி ஆகும்.

## மூங்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட கிரிக்கெட் மட்டை




- திரிபுராவின் மூங்கில் மற்றும் பிரம்பு மேம்பாட்டு நிறுவனமானது வடகிழக்குப் பயன்பாட்டுத் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து இந்தியாவில் முதன்முறையாக மூங்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கிரிக்கெட் மட்டையை உருவாக்கியுள்ளது.
- இந்த கிரிக்கெட் மட்டைகளை உருவாக்க ஹார்டு பூம் வகை (உள்ளூர் பெயர்) மூங்கிலானது பயன்படுத்தப் பட்டது.
- இந்த மட்டைகளை அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் பயன்படுத்தச் செய்யலாம்.
- கிரிக்கெட் மட்டைகளைத் தயாரிக்கப் பெரிதும் பயன்படுத்தப்படும் மரமானது வில்லோ மரமாகும்.

## திசு வளர்ப்பு அடிப்படையிலான விதை உருளைக்கிழங்கு விதிகள் – பஞ்சாப்

- பஞ்சாப் மாநில அமைச்சரவை, 'பஞ்சாப் திசு வளர்ப்பு அடிப்படையிலான விதை உருளைக் கிழங்கு விதிகள்-2021' என்பதற்கு (Punjab Tissue Culture Based Seed Potato Rules -2021) தனது ஒப்புதலை அளித்தது.
- இது பஞ்சாப்பை நிலையான உருளைக்கிழங்கு விதை மையமாக உருவாக்க உள்ளது.
- இந்த முடிவின் மூலம், சான்றிதழ் பெற்ற திசு வளர்ப்பு அடிப்படையிலான வசதியைப் பெற்ற முதல் இந்திய மாநிலமாக பஞ்சாப் உருவெடுத்துள்ளது.
- இது பஞ்சாபின் ஜலந்தர்-கபுர்தலா பகுதியை உருளைக்கிழங்கு ஏற்றுமதி மையமாக மேம்படுத்தும்.
- 'பஞ்சாப் பழ வளர்ப்பிடச் சட்டம்-1961' என்பதினைத் திருத்துவதன் மூலம் 'பஞ்சாப் தோட்டக் கலை வளர்ப்பிடம் மசோதா-2021' என்பதை அறிமுகப்படுத்தவும் அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## கிட்டூர் கர்நாடகா

- மும்பை-கர்நாடகா என்ற பகுதியானது 'கிட்டூர் கர்நாடகா' எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.
- இந்த மாதத் தொடக்கத்தில் கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மையின் அறிவிப்பிற்குப் பிறகு இது நடந்தது
- ஹைதராபாத்-கர்நாடகா என்ற பகுதி ஏற்கனவே 'கல்யாண கர்நாடகா' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ஒனகே ஒபவ்வ ஜெயந்தி

- இந்த ஆண்டு முதல் நவம்பர் 11 ஆம் தேதி அந்த மாநிலம் முழுவதும் ‘ஒனகே ஒபவ்வா ஜெயந்தி’ பண்டிகையைக் கொண்டாட கர்நாடக மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- இவர் 18 ஆம் நூற்றாண்டில் சித்ரதுர்காவில் ஒரு உலக்கையை (கன்னடத்தில் ஒனகே) கொண்டு ஹைதர் அலியின் படைகளை எதிர்த்துத் தனித்துப் போராடிய ஒரு பெண் வீராங்கனையாவார்.
- 18 ஆம் நூற்றாண்டில் மதகரி நாயக்கரால் ஆளப்பட்ட சித்ரதுர்கா கோட்டையைப் பாதுகாப்பதில் இவர் இறந்தார்.
- ஒபவ்வா கன்னடப் பெருமையின் உருவகமாகக் கருதப்படுவதோடு அவர் கர்நாடக மாநிலத்தின் மற்றப் பெண் வீராங்கனைகளுடன் சேர்த்துக் கொண்டாடப்படுகிறார்.



## வேளாண் சட்டங்களுக்கு எதிரான தீர்மானம் - பஞ்சாப் சட்டசபை

- பஞ்சாப் சட்டசபையானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 11 அன்று, மத்திய அரசின் மூன்று சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு உள்ளது.
- அந்தத் திடமானச் சட்டங்கள் சட்டத்திற்குப் புறம்பாக மாநில அரசின் களத்தில் நுழைந்து விட்டதாகக் கூறி இந்தத் தீர்மானமானது நிறைவேற்றப்பட்டது.
- மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக அம்மாநிலச் சட்டசபை நிறைவேற்றிய இரண்டாவது தீர்மானம் இதுவாகும்.

- முதல் தீர்மானம் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இந்தப் புதிய தீர்மானத்தை மாநில வேளாண் அமைச்சர் ரன்தீப் சிங் நாபா தாக்கல் செய்தார்.

## பஞ்சாப் பள்ளிகளில் பஞ்சாபி மொழி கட்டாயம்

- பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பஞ்சாபி மொழி கட்டாயப் பாடமாக கற்பிக்கப்படும் என பஞ்சாப் முதல்வர் சரண்ஜித் சிங் சன்னி அறிவித்து உள்ளார்.
- 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பஞ்சாபி மொழி கட்டாயமாக்கப் படும்.
- இது மட்டுமின்றி, அலுவலகங்களிலும் பஞ்சாபி மொழியானது கட்டாயமாக்கப்படும்.

## நிமோகாக்கல் இணை தடுப்பூசி (PCV) திட்டம் – கர்நாடகா




- உலக நிமோனியா தினத்தை முன்னிட்டு உலகளாவிய நோய்த் தடுப்பு திட்டத்தின் கீழ் இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டது.
- குழந்தைகள் மத்தியில் நிமோனியாவால் ஏற்படும் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைக்கும் நோக்கத்துடன் இது தொடங்கப்பட்டது.

## கைசர்-இ-ஹிந்த்

- கைசர்-இ-ஹிந்த் என்பது மிகப்பெரிய மற்றும் பிரகாசமிக்க வண்ணமயமான ஒரு வண்ணத்துப் பூச்சியாகும்.
- இது தன் பெயரில் ‘இந்தியா’ என்பதைக் கொண்ட கைக்குப் பிடிபடாத சிறிய வாலுடைய ஒரு வண்ணத்துப் பூச்சியாகும்.
- இது சீனாவிலும் காணப்படுகின்றது.
- இது தற்போது அருணாச்சலப் பிரதேசத்தின் மாநில வண்ணத்துப் பூச்சியாக அறிவிக்கப் பட்டுள்ளது.



## வங்கலா திருவிழா

- ❖ மேகாலய மாநிலமானது அதன் 44வது வங்கலா திருவிழாவைக் கொண்டாடியது.
- ❖ இது 100 பறைகளின் ஒரு திருவிழாவாகும்.
- ❖ இது காரோ பழங்குடி மக்களின் அறுவடைக்குப் பிந்தைய ஒரு திருவிழாவாகும்.
- ❖ இது காரோ இன மக்களின் சூரியக் கடவுளான ‘சல்ஜோங்க்’ என்ற கடவுளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இது அறுவடைப் பருவத்தின் முடிவையும் குறிக்கிறது.
- ❖ 1976 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படும் இந்தத் திருவிழாவானது காரோ பழங்குடியினரின் (Garo tribe) மிக முக்கியத் திருவிழாவாகும்.



## பாக்கே பிரகடனம்

- ❖ பருவநிலை மாற்றத்திற்கான நெகிழ்திறனுடன் கூடிய மற்றும் நடவடிக்கைகள் மேற் கொள்ளும் வகையிலான அருணாச்சலப் பிரதேசம் குறித்த பாக்கே புலிகள் காப்பகம் 2047 பிரகடனத்திற்கு அருணாச்சலப் பிரதேச மாநில அரசானது ஒப்புதல் அளித்து உள்ளது.
- ❖ இது அம்மாநிலத்தில் "பருவநிலை நெகிழ்திறன் உருவாக்கத்தினை" மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த அறிவிப்பானது நாட்டிலேயே எந்த மாநில அரசும் இதுவரையில் வெளியிடாத முதல் வகை அறிவிப்பாகும்.




## சிறந்த டிஜிட்டல் நிதிச் சேவைகளுக்கான ASSOCHAM விருது

- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை இணைக் கழகத்தினால் வழங்கப்படும் சிறந்த டிஜிட்டல் நிதிச் சேவைக்கான விருதினை கர்நாடக விகாஸ் கிராமீனா வங்கி பெற்றுள்ளது.
- 'வட்டார கிராமப்புற வங்கிகள்' என்ற பிரிவின் கீழ் இந்த வங்கியானது இந்த விருதைப் பெற்றுள்ளது.
- 'ஆத்ம நிர்பர் பாரத்' என்ற இந்தியாவின் தொலைநோக்கு அம்சத் திட்டத்திற்கு ஏற்ப இந்த விருதானது வழங்கப்படுகிறது.

## மீன்பிடி வணிக காப்பகம்

- ஹரியானா மாநிலத்தின் குருகிராம் நகரில் முதல் முறையாக, பிரத்தியேக மீன்பிடி வணிகக் காப்பக நிறுவனம் என்ற நிறுவனமானது திறக்கப்பட்டுள்ளது.
- இது நிகழ்நேரச் சந்தை நிலவரங்களின் அடிப்படையில் மீன்வளத் தொடக்க நிறுவனங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஒரு காப்பக நிறுவனமாகும்.
- இந்தக் காப்பக நிறுவனமானது LINAC- NCDC (National Cooperative Development Corporation - NCDC) மீன்வள வணிக காப்பு மையம் என அழைக்கப்படுகிறது.

- மத்திய மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் புர்ஷோத்தம் ரூபாலா இதனைத் திறந்து வைத்தார்.




## சிறந்த சுற்றுலாக் கிராமங்கள்

- தெலுங்கானா மாநிலத்தின் யாதாத்ரி புவனகிரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி கிராமமானது ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பினால் சிறந்த சுற்றுலாக் கிராமங்களில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்த கிராமமானது கையினால் நெய்யப்பட்ட பிரபலமான இகாட் ரக புடவைகளுக்கு புகழ் பெற்றது ஆகும்.
- டிசம்பர் மாதம் 02 ஆம் தேதி அன்று ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பினுடைய பொதுச் சபையின் 24வது அமர்வில் இந்த விருதானது வழங்கப்படும்.

## தூய்மை யமுனை நதி

- டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், 2025 ஆம் ஆண்டுக்குள் யமுனை நதியை முழுமையாகச் சுத்தப்படுத்துவோம் என்று உறுதியளித்தார்.
- இந்தப் புனித நதியை சுத்தப்படுத்துவதற்கான ஆறு அம்ச செயல் திட்டத்தையும் அவர் அறிவித்தார்.
- 2025 ஆம் ஆண்டுக்குள் யமுனை நதியைக் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் ஏற்ற வகையில் மாற்றவுள்ளதாகவும் அவர் உறுதியளித்தார்.

## வாட்ஸ் அப் சாட் பாட்

- மேற்கு வங்க அரசானது இந்தியாவின் முதலாவது வாட்ஸ் அப் சாட் பாட்டைப் பொது விநியோகத் துறையில் அறிமுகப்படுத்தியது.
- இந்த சாட்பாட் ஆனது குடிமக்கள் குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பிக்கவும், தங்களது குறைகளைப் பதிவு செய்தல் மற்றும் முக்கியமான ஆதாரங்களை அணுகுதல் போன்றவற்றை எளிதாக்கும்.

- நெல் கொள்முதல் தொடர்பான சரிபார்க்கப்பட்ட தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் சாட் பாட் அவர்களுக்கு உதவும்.
- இந்த சாட் பாட்டை இலவசமாகப் பயன்படுத்துவதோடு ஆங்கிலம் மற்றும் வங்காள மொழிகளில் இது இயங்குகிறது.

## ஹரியானாவின் குருகிராம் நகரில் இந்திய உணவுக் கழகத்தின் ஆய்வகம்

- உணவு மற்றும் பொது விநியோக துறையின் கீழ் இயங்கும் இந்திய உணவுக் கழகமானது உணவு தானிய மாதிரிகளின் உள்ளகச் சோதனைகளை மேற்கொள்ளச் செய்வதற்காக தனது முதல் அதி நவீன தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தினை உருவாக்கி உள்ளது.
- இது கர்நாடகாவின் மைசூரு நகரிலுள்ள மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் நிறுவப் பட்டது.

## அமராவதி – ஆந்திரப் பிரதேசத்தின் ஒற்றைத் தலைநகரம்

- ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மூன்று தலைநகரங்களை ரத்து செய்வதற்கான ஒரு மசோதாவினை அம்மாநில சட்டசபை நிறைவேற்றியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்திற்கு 3 தலைநகரங்கள் என்று திட்டமிடப்பட்டன.
    - அமராவதி – சட்டமன்ற தலைநகரம்
    - விசாகப்பட்டினம் – நிர்வாகத் தலைநகரம்
    - கர்னூல் – நீதி தலைநகரம்




## பஞ்சாயத்து (பட்டியலிடப்பட்ட பகுதிகளை விரிவுப்படுத்தும்) சட்டம் – சத்தீஸ்கர்

- சத்தீஸ்கர் அரசானது 1996 ஆம் ஆண்டு பஞ்சாயத்து (பட்டியலிடப்பட்டப் பகுதிகளை விரிவுபடுத்தும்) சட்டத்தின் கீழ், 2021 ஆம் ஆண்டு சத்தீஸ்கர் பஞ்சாயத்து விதிமுறைகள் (பட்டியலிடப்பட்டப் பகுதிகளை விரிவுபடுத்துதல்) விதிகள் என்ற வரைவு விதிகளை உருவாக்கியுள்ளது.
- PESA சட்டத்தின் விரிவாக்கம் Panchayat (Extension of the Scheduled Areas) Act, 1996 என்பது ஆகும்.

- பட்டியலிடப்பட்டப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு கிராம சபைகள் மூலம் சுய நிர்வாகத்தை (தன்னாட்சியை) உறுதி செய்வதற்காக மத்திய அரசினால் இந்த சட்டமானது இயற்றப்பட்டது.
- இந்தச் சட்டமானது பழங்குடியினச் சமூகத்தினர் மற்றும் பட்டியலிடப்பட்டப் பகுதிகளில் வாழும் மக்கள் தங்களது சொந்த தன்னாட்சி அரசு முறைகள் மூலம் அவர்களை நிர்வகிப்பதற்கு சட்ட ரீதியில் அவர்களது உரிமைகளை அங்கீகரிக்கிறது.
- இயற்கை வளங்கள் மீது பழங்குடியினர் பாரம்பரியமாகக் கொண்டுள்ள சிலபல உரிமைகளையும் இது அங்கீகரிக்கிறது.
- இந்த விதிகள் நிறைவேற்றப்பட்டால் PESA சட்டங்களைக் கொண்ட 7வது மாநிலமாக சத்தீஸ்கர் மாறும்.
- PESA சட்டங்களை ஆறு மாநிலங்கள் (இமாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, ராஜஸ்தான், குஜராத் , மகாராஷ்டிரா) நிறைவேற்றி இருக்கின்றன.

## இணையவழி தாலுக்கா – மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேச மாநில அமைச்சரவையானது இணையவழி ரீதியில் தாலுக்காவை உருவாக்குவதற்கான ஒரு முன்மொழிதலுக்கு ஒப்புதல் அளித்தது.
- இணையவழி தாலுக்காவை உருவாக்க உள்ள முதல் இந்திய மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாற உள்ளது.
- இந்த இணையவழி தாலுக்காக்கள் சொத்துகள் மற்றும் நிலங்களின் மீது நிலுவையில் உள்ள வழக்குகளை தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்படும்.

## ரோசென்பாயெர் தீயணைப்பு மாதிரி



- பெங்களூருவிலுள்ள கெம்பெகௌடா சர்வதேச விமான நிலையமானது ஆஸ்திரியாவைச் சேர்ந்த ரோசென்பாயெர் இண்டர்நேஷனல் நிறுவனத்திடமிருந்துப் பெற்ற உத்தி மிக்க ஒரு தீயணைப்பு மாதிரி அமைப்பை நிறுவியுள்ளது.
- தெற்காசியாவில் இது போன்ற அமைப்பை நிறுவிய முதல் விமான நிலையம் இதுவே ஆகும்.
- தீயணைப்புச் செயல்திறனை வலுப்படுத்துவதே இதன் முக்கியப் பயன்பாடாகும்.

### பெங்களூரு தொழில்நுட்ப உச்சிமாநாடு

- குடியரசுத் துணைத் தலைவர் 24வது பெங்களூரு தொழில்நுட்ப உச்சி மாநாட்டினை தொடங்கி வைத்தார்.
- ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் காணொலி வாயிலாக இந்த மாநாட்டில் பங்கேற்றார்.
- பெங்களூருவில் மிக விரைவிலேயே ஆஸ்திரேலியா தனது தூதரகத்தை அமைக்கும் என்றும அவர் அறிவித்தார்.

### மேகாலயா மற்றும் உலக உணவுத் திட்டம்

- வடகிழக்குப் பகுதியில் மேகாலய அரசு, ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்ட அமைப்புடனான முதலாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது அந்த மாநிலத்தில் பொது விநியோக வழங்கீட்டு முறையைச் சீரமைத்து வலுப்படுத்துவதற்கானதாகும்.
- இந்தக் கூட்டிணைவானது, 2வது நிலையான மேம்பாட்டு இலக்கான பசியற்ற நிலையின்மை என்ற நிலையை அடைவதை நோக்கி உலக உணவுத் திட்ட அமைப்பின் அதிகாரிகளும் மாநில அரசும் இணைந்து செயல்பட உதவும்.
- உணவு, பொருள் வழங்கீடு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறையினால், "ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்" என்ற நிகழ்வின் ஒரு பகுதியாக, ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் இந்த ஒப்பந்தமானது கையெழுத்தானது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### புனித் ராஜ்குமார் (46)



- கன்னட சினிமா சூப்பர் ஸ்டார் புனீத் ராஜ்குமார் மாரடைப்பால் காலமானார்.
- இவர் அப்பு என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.
- இவர் 'Who Wants to Be a Millionaire' எனும் வினாடி – வினா நிகழ்ச்சியின் கன்னடப் பதிப்பான கன்னட கோடியாதிபதி என்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியதற்காக பிரபலமாக

அறியப் பட்டார்.

## நிசாமி கஞ்சாவி சர்வதேச விருது




- உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் கெப்ரியேசுஸ் மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் தலைமை இயக்குநர் டேட்டியானா வாவோவயா ஆகியோருக்கு நிசாமி கஞ்சாவி சர்வதேச விருதானது வழங்கப்பட்டது.
- இந்த விருதுகளானது "The world After covid-19" என்ற 8வது உலகளாவியப் பாகு மன்றத்தின் (Baku Forum) போது வழங்கப்பட்டது.
- இந்த விருதானது புகழ்பெற்ற அசர்பெய்ஜான் கவிஞர் நிசாமி கஞ்சாவி அவர்களைக் கொண்டாடும் விதமாக வழங்கப்படுகிறது.
- நிசாமி தனது கவிதை மூலம் ஊக்குவித்த விழுமியங்களைக் கொண்ட புகழ்பெற்ற நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த விருதுகள் அஸ்பெரிஜானின் குடியரசுத் தலைவரான இல்ஹாம் அலியேவ் என்பவரின் தலைமையின் கீழ் நிஜாமி கஞ்சாவி சர்வதேச மையத்தினால் ஏற்படுத்தப் பட்டது.

## கின்னஸ் புத்தகம் - லெப்டினட் கர்னல் பாரத் பன்னு




- லெப்டினட் கர்னல் பாரத் பன்னு குஜராத் முதல் அருணாச்சலப் பிரதேசம் வரையில் நாடு முழுவதும் சைக்கிள் ஓட்டி தனது 3வது கின்னஸ் உலக சாதனையைப் படைத்து உள்ளார்.
- இவர் 9 நாட்கள், ஏழு மணி நேரம் மற்றும் 5 நிமிடத்தில் 3800 கி.மீ. தொலைவைக் கடந்தார்.
- 1971 ஆம் ஆண்டு வங்காள தேச விடுதலைப் போராட்டத்தின் 50 ஆம் ஆண்டின் நினைவிற்கான அனுசரிப்பின் ஒரு பகுதியாக இவர் இந்த முயற்சியை மேற்கொண்டு உள்ளர்.
- அந்த நிகழ்வின் போது உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் அந்த நிகழ்வு "ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்" என அனுசரிக்கப்படுகிறது.

## சுதா மூர்த்தியின் புதிய புத்தகம்



- இன்ஃபோசிஸ் அறக்கட்டளையின் தலைவரும், புகழ்பெற்ற எழுத்தாளருமான சுதா மூர்த்தி தனது புதியப் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- இது "The Sage with Two Horns: Unusual Tales from Mythology" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- இது "Unusual Tales from Mythology" தொடரின் 5வது மற்றும் கடைசிப் புத்தகமாகும்.
- இந்தத் தொடரில் அரசர்கள் மற்றும் அரசிகள், தெய்வங்கள் மற்றும் பெண் தெய்வங்கள், முனிவர்கள் மற்றும் ஞானம் பெற்ற அசாதாரண ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் கதைகள் இடம் பெற்றுள்ளன.

## டென்சிங் நார்கே தேசிய சாகச விருது 2020

- லெப்டினன்ட் கர்னல் சர்வேஷ் தட்வால் மற்றும் கர்னல் அமித் பிஷ்த் ஆகிய இரண்டு இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு மதிப்புமிக்க டென்சிங் நார்கே தேசிய சாகச விருதானது (2020) வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது இந்தியாவின் மிக உயரிய சாகச விளையாட்டு விருது ஆகும்.
- இது இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.
- தனது நிலம் சார்ந்த நடவடிக்கைகளுக்காக இந்திய ராணுவ அதிகாரி கர்னல் அமித் பிஷ்த் இந்த விருதைப் பெற்றுள்ளார்.
- வான்குடை சாகசத்தில் சாதனை படைத்ததற்காக வேண்டி இந்திய ராணுவ அதிகாரி லெப்டினன்ட் கர்னல் சர்வேஷ் தட்வால் இந்த விருதைப் பெற்றுள்ளார்.



## பசவஸ்ரீ விருதுகள் 2021




- ❖ கன்னட நடிகர் புனீத் ராஜ்குமாருக்கு பிருஹன் மத் (மடம்) அமைப்பானது 2021 ஆம் ஆண்டிற்கான பசவஸ்ரீ விருதினை அவரது இறப்பிற்குப் பின்னதாக வழங்க உள்ளது.
- ❖ பப்பு என அன்புடன் அழைக்கப்படும் புனீத் சென்னையில் பிறந்தவராவார்.
- ❖ இந்த விருதானது பகவான் பசவேஷ்வருடைய கொள்கைகளைப் பின்பற்றி அவரவர் துறைகளில் சமூகத்திற்கென செய்த சேவைகளுக்காக வேண்டி அந்த நபர்களுக்கு வழங்கப் படுகிறது.
- ❖ இது 1997 ஆம் ஆண்டு முதல் சித்ர துர்கா பிருஹன் மத் (மடம்) அமைப்பால் வழங்கப் படுகிறது.
- ❖ P.T. உஷா (2009), மலாலா யூசுப்சாய் (2014), P. சாய்நாத் (2016), டாக்டர்.K. கஸ்தூரிரங்கன் (2020) ஆகியோர் சமீபத்தில் இந்த விருதினை வென்றவர்களாவர்.

## டென்சிங் நார்கே தேசிய சாகச விருது 2020

- ❖ இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டு டென்சிங் நார்கே தேசிய சாகச விருதிற்கு பிரியங்கா மோஹித் என்பவரைத் தேர்வு செய்துள்ளது.
- ❖ இவர் மகாராஷ்டிராவைச் சேர்ந்த 28 வயதான மலையேறும் வீராங்கனை ஆவார்.
- ❖ இந்த விருதானது நிலம் சார்ந்த சாகசத் துறையில் இவர் ஆற்றிய சிறப்பான பங்களிப்பிற்காக வேண்டி வழங்கப்படுகிறது.
- ❖ இவர் எவரெஸ்ட், லோட்சே மற்றும் மக்காலு போன்ற உலகின் மிக உயரிய சிகரங்களில் ஏறியுள்ளார்.
- ❖ இவர் உலகின் 10வது உயரிய மலைச் சிகரமான அன்னபூர்ணா சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.
- ❖ 2020 ஆம் ஆண்டு டென்சிங் நார்கே தேசிய சாகச விருதுகளைப் பெறும் 7 நபர்களுள் பிரியங்காவும் ஒருவராவார்.

| Awardee | Category |
|---|---|
| Priyanka Mangesh Mohite | Land Adventure |
| Jay Prakash Kumar | Land Adventure |
| Col. Amit Bisht | Land Adventure |
| Sheetal | Land Adventure |
| Srikaanth Viswanathan | Water Adventure |
| Lt. Col. Servesh Dhadwal | Air Adventure |
| Jai Kishan | Life Time Achievement |

## உள்துறை அமைச்சகத்தின் பத்ம விருதுகள் 2021

- பத்ம விருதுகள் வழங்கப்பட உள்ள 119 நபர்களின் பட்டியலை உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- அவர்கள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தால் இந்த ஆண்டு பத்ம விருதுகள் வழங்கப் பெறுவர்.
- 'பத்மஸ்ரீ' என்பது எந்தவொருத் துறையிலும் சிறப்பான சேவைகளைச் செய்ததற்காக (distinguished service) வழங்கப் படுகிறது.
- ‘பத்ம பூஷன்’ விருதானது ஓர் உயர் வரிசையின் சிறப்பான சேவைக்காக (distinguished service of a high order) வழங்கப்படுகிறது.
- ‘பத்ம விபூஷன்’ என்பது ஒரு தனித்துவமான மற்றும் சிறப்பான சேவைக்காக (exceptional and distinguished service) வழங்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருதானது யாருக்கும் வழங்கப்படவில்லை.



## ஃபால்குனி நேயர் – பெண் கோடீஸ்வரர்



- நைகா நிறுவனத்தின் (Nykaa) நிறுவனர் ஃபால்குனி நேயர் அவர்கள் இந்தியாவின் சுயச் சார்பான ஒரு பெண் கோடீஸ்வரராக உருவெடுத்துள்ளார்.
- இவர் இந்தியாவின் ஏழாவது பெண் கோடீஸ்வரரானார்.
- இவர் 2012 ஆம் ஆண்டில் நைகா நிறுவனத்தை நிறுவினார்.

## இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை




- அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா மற்றும் எலான் மஸ்கின் நிறுவனமான ஸ்பேஸ் X ஆகியவை 'Crew 3' என்ற விண்கலத்தை விண்ணில் ஏவியது.
- இந்தத் திட்டமானது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாசாவின் விண்வெளி வீரரான ராஜா சாரி என்பவரை அதன் திட்ட ஆணையராகக் கொண்டது.
- இத்திட்டத்தின் கீழ் நான்கு விண்வெளி வீரர்கள் 6 மாத அறிவியல் திட்டத்திற்காக சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

## பல்வந்த் மொரேஷ்வர் புரந்தரே



- அவர் தனது 99வது வயதில் காலமானார்.
- அவர் மகாராஷ்டிராவினைச் சேர்ந்த ஒரு சிறந்த வரலாற்றாசிரியர், பேச்சாளர் மற்றும் புகழ்பெற்ற எழுத்தாளர் ஆவார்.
- இவர் பாபாசாகேப் புரந்தரே என்றும் பிரபலமாக அறியப்பட்டார்.
- புரந்தரே மராட்டியப் போராளியான மகாராஜா சத்ரபதி சிவாஜி பற்றி விரிவாக எழுதி உள்ளார்.
- இவர் சிவாஜியின் பாணர் என்று பொருள்படும் மோனிகர் 'ஷிவ் ஷாஹிர்' (Shiv Shahir) என்ற பெயரைப் பெற்றார்.
- இந்தியாவின் இரண்டாவது உயரிய குடிமை விருதான பத்ம விபூஷண் விருதானது 2019 ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது.

## இலக்கியத்திற்கான JCB பரிசு 2021

- நூலாசிரியர் M.முகுந்தன் என்பவருக்கு இந்தப் பரிசானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தப் பரிசானது 'Delhi: A Soliloquy' என்ற அவரது புத்தகத்திற்காக வழங்கப்பட்டது.
- முதலில் மலையாளத்தில் எழுதப்பட்ட இந்தப் புத்தகமானது பாத்திமா E.V. மற்றும் நந்தகுமார்.K ஆகியோரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- இந்தப் புதினமானது வெஸ்ட்லேண்ட் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.
- இது மலையாள இளம் கதாநாயகர்களின் பார்வையில் டெல்லி பற்றிய கதை ஆகும்.




## கின்னஸ் உலக சாதனை – BRO

- எல்லைச் சாலைகள் அமைப்பானது உலகின் மிக உயரமான வாகனப் போக்குவரத்திற்கு ஏதுவான சாலையைக் கட்டமைத்துத் தார்ப்பூச்சு செய்து கின்னஸ் உலக சாதனையைப் படைத்தது.
- இந்தச் சாலையானது லடாக் ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள, 19,024 அடி மற்றும் 0.73 அங்குலம் (5798.251 மீ) உயரமுள்ள உம்லிங்லா கணவாய் வழியாகச் செல்கிறது.
- 52 கிலோமீட்டர் நீளமான சிசும்லே முதல் டெம்சோக் டார்மாக் வரையிலான சாலை, எல்லைச் சாலைகள் அமைப்பின் ஹிமாங்க் என்ற திட்டத்தின் (93RCC/753 BRTF) கீழ் உருவாக்கப் பட்டது.



## பிரகாஷ் படுகோன்

- உலக பேட்மிண்டன் கூட்டமைப்பு (BWF) சபையினால் வழங்கப்படும் 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க வாழ்நாள் சாதனையாளர் விருதிற்கு இந்தியப் பேட்மிண்டன் ஜாம்பவான் பிரகாஷ் படுகோன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 1983 ஆம் ஆண்டின் கோபன்ஹேகன் போட்டியில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் படுகோன் ஆவார்.



## சைரன் விருது

- 2021 ஆம் ஆண்டின் செய்தித்தாள்களுக்கான 'PROJECT SIREN' என்ற விருதானது இந்துப் பத்திரிகைக்கு வழங்கப் பட்டுள்ளது.
- ஜூன் 2020 மற்றும் ஜூன் 2021 ஆகிய காலத்திற்கிடையில் தற்கொலைகள் பற்றிய அதன் பொறுப்பான அறிக்கைக்காக இது வழங்கப்பட்டது.
- SIREN என்பது மனநலச் சட்டம் மற்றும் கொள்கை மையத்தின் கீழ் உள்ள இந்திய மன நலக் கண்காணிப்பு அமைப்பின் ஒரு முன்னெடுப்பாகும்.

IMHO INDIA MENTAL HEALTH OBSERVATORY

## 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த இந்தியத் திரைப்பட ஆளுமை விருது

- நடிகரும் பா.ஜ.க. தலைவருமான ஹேமா மாலினி மற்றும் பாடலாசிரியரும் மத்திய திரைப்படச் சான்றிதழ் வழங்கீட்டு வாரியத்தின் முன்னாள் தலைவருமான பிரசூன் ஜோஷி ஆகியோருக்கு இந்த ஆண்டின் சிறந்த இந்தியத் திரைப்பட ஆளுமை என்ற விருதானது வழங்கப்பட உள்ளது.

- இந்த விருதுகளானது கோவாவில் நடைபெற உள்ள இந்தியாவின் மிகப்பெரிய விருது வழங்கும் விழாவான 52வது இந்திய சர்வதேசத் திரைப்பட விருது வழங்கும் விழாவில் (2021) வழங்கப்பட உள்ளது.
- இந்த ஆண்டில், ஹாலிவுட்டின் பிரபலமான மார்ட்டின் ஸ்கோர்செஸி (Martin Scorsese) மற்றும் ஹங்கேரியத் திரைப்பட தயாரிப்பாளர் இஸ்டெவன் சாபோ (Istevan Szabo) ஆகியோருக்கு சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் என்ற விருதானது வழங்கி கௌரவிக்கப் படவுள்ளது.




## லால் சலாம் புத்தகம்




- மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர், ஸ்மிருதி ஜுபின் இரானி "Lal Salaam: A Novel" என்ற தலைப்பிலான தனது முதல் புதினத்தை வெளியிட உள்ளார்.

- 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சத்தீஸ்கரின் தண்டேவாடா பகுதியில் நடத்தப் பட்ட மாவோயிஸ்ட் தாக்குதலின் போது 76 மத்திய ரிசர்வ் காவல் படை வீரர்கள் கொல்லப் பட்ட ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புதினமானது எழுதப் பட்டுள்ளது.

## Kids Rights அமைப்பின் குழந்தைகளுக்கான சர்வதேசப் பரிசு – 2021

- டெல்லியைச் சேர்ந்த இரண்டு இளம் வயது சகோதரர்களான விஹான் (17) மற்றும் நவ் அகர்வால் (14) ஆகியோருக்கு 17வது குழந்தைகளுக்கான சர்வதேச அமைதிப் பரிசு என்பது வழங்கப் பட்டுள்ளது.
- ஆயிரக்கணக்கான வீடுகள், பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் இருந்து பெறப்படும் குப்பைகளைப் பிரித்தெடுப்பதற்கும் அவற்றை அகற்றுவதற்கும் "One Step Greener" என்ற ஒரு முன்னெடுப்பினை அவர்கள் உருவாக்கினர்.
- இந்தப் பரிசானது நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் நகரில் அமைந்துள்ள KidsRights எனப்படும் ஒரு சர்வதேசக் குழந்தைகள் உரிமை அமைப்பினால் ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.




## 20வது டாடா இலக்கிய விழா – வாழ்நாள் சாதனையாளர் விருது 2021

- அனிதா தேசாய் என்பவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- 50 ஆண்டுகளுக்கும் மேலான அவரது நீண்டகால இலக்கியப் பங்களிப்பினை அங்கீகரிக்கச் செய்வதற்காக வேண்டி இந்த விருதானது அவருக்கு வழங்கப்படுகிறது.
- அதே சமயம், இந்தியக் கவிஞர் அடில் ஜீசாவாலாவிற்கு 2021 ஆம் ஆண்டிற்கான கவிஞர் விருதானது வழங்கப்பட்டது.



## ABU – UNESCO அமைதிக்கான ஊடக விருதுகள் 2021

- ஆசிய பசிபிக் ஒளிபரப்பு ஒன்றியம் – யுனெஸ்கோவின் அமைதிக்கான ஊடக விருதுகள் (2021) என்ற விருது வழங்கும் ஒரு விழாவானது மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடத்தப் பட்டது.
- இந்திய தூர்தர்சன் தொலைக்காட்சி ஊடகத்தின் "DEAFinitely Leading the Way" என்ற ஒரு நிகழ்ச்சியானது "அதீத பன்மையுடன் இயங்குதல்" (Living Well with Super Diversity) என்ற பிரிவின் கீழ் விருதினைப் பெற்றது.
- அகில இந்திய வானொலியின் "Living on the Edge – The coastal Lives" என்ற நிகழ்ச்சியானது "இயற்கையுடனான நெறிசார்ந்த மற்றும் நிலையான உறவு" என்ற ஒரு பிரிவில் விருதினைப் பெற்றது.




## பார்தே கூயெல்ஃபா நைட்ஹூட் (வீரத்திருமகன்) பட்டம்

- கேரளாவைச் சேர்ந்த டாக்டர் S.K. சோஹன் ராய் என்பவர் பார்தே கூயெல்ஃபாவின் நைட் ஹூட் எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.
- இவர் ஏரிஸ் நிறுவனக் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் நிறுவனரும் ஆவார்.
- வணிகம் மற்றும் திரைப்படத் துறையில் இவர் ஆற்றிய மனிதநேயமிக்க மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளுக்காக வேண்டி இவருக்கு இந்தப் பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.



# விளையாட்டுச் செய்திகள்

## 74வது மூத்த தேசிய நீர்நிலை சாம்பியன்சிப் போட்டிகள்

- 74வது மூத்த தேசிய நீர்நிலை சாம்பியன்சிப் போட்டிகளில் கர்நாடகா ஒட்டு மொத்த வெற்றியைப் பெற்றுள்ளது.
- ஸ்ரீஹரி மற்றும் ரிதிமா ஆகியோர் 200 மீ பேக்ஸ்ட்ரோக் பந்தயத்தில் வெற்றி பெற்றனர்.
- ஷோன் கங்குலி 400 மீ மெட்லி போட்டியில் வெற்றி பெற்றார்.
- 100 மீ பட்டர்ஃப்ளை போட்டியில் (53.24) சஜன் பிரகாஷ் ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளார்.




## உன்முக்த் சந்த்

- பிக் பேஸ் போட்டிக்கு (Big Bash League) இடம் பெற்ற முதல் இந்திய ஆண் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை உன்முக்த் சந்த் பெற்றுள்ளார்.
- இவர் அடுத்து நடைபெறவிருக்கும் போட்டியில் மெல்போர்ன் ரெனிகேடெஸ் என்ற அணியின் சார்பாக விளையாட உள்ளார்.
- 28 வயதான இவர் 2012 ஆம் ஆண்டில் 19 வயதிற்குக் கீழானவர்களுக்கான உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய அணிக்குத் தலைமை வகித்தார்.
- இவர் IPL போட்டிகளின் டெல்லி டேர் டெவில்ஸ், மும்பை இந்தியன்ஸ் மற்றும் இராஜஸ்தான் ராயல்ஸ் போன்ற அணிகளில் பங்கேற்றார்.



## உலக காது கேளாதோர் ஜூடோ சாம்பியன்சிப்




- ஜம்மு & காஷ்மீர் காது கேளாதோர் அணியானது இப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அரையிறுதிப் போட்டியில் தென்கொரிய அணியை வீழ்த்தி இந்திய காது கேளாதோர் அணியைச் சேர்ந்த ரகசந்தா மேஹக் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.
- இந்தப் போட்டியானது பிரான்சிலுள்ள வெர்செய்ல்ஸ் எனுமிடத்தில் நடைபெற்றது.
- காது கேளாதோருக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் அமைப்பானது இந்தப் போட்டியினை நடத்துகிறது.

## தேசிய விளையாட்டு விருதுகள் – 2020

- விருது வழங்கும் விழாவானது கோவிட் – 19 தொற்றுக் காலத்தில் காணொளி வாயிலாக நடத்தப் பட்டதனால் இந்த விருதுகளை வென்றவர்கள் அவர்களுக்கான கோப்பைகள் மற்றும் பாராட்டுப் பத்திரங்களைத் தவிர்த்து பரிசுத் தொகையை மட்டும் ஏற்கனவே பெற்றுள்ளனர்.
- சமீபத்தில் விளையாட்டுத் துறை அமைச்சகமானது நேரடியாக அவர்களிடம் 2020 ஆம் ஆண்டின் தேசிய விளையாட்டு விருதிற்கானக் கோப்பைகளை வழங்கியது.
- விளையாட்டுத் துறை அமைச்சகமானது மொத்தம் 74 தேசிய விளையாட்டு விருதுகளை வழங்கியுள்ளது.
- இதில் 27 அர்ஜீனா விருதுகள் மற்றும் 5 இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுகளும் அடங்கும்.

| Rashtriya Khel Protsahan Puruskar |
|---|
| Identification and Nurturing of Budding & Young Talent category- given to Lakshya Institute & Army Sports Institute. |
| Encouragement to sports through Corporate Social Responsibility category- presented to Oil & Natural Gas Corporation (ONGC) Ltd. |
| Employment of sportspersons & sports welfare measures category- presented to Air Force Sports Control Board. |

| | |
|---|---|
| **Rajiv Gandhi Khel Ratna Award 2020** | **Arjuna Award 2020** |
| Presented to Rohit Sharma (Cricket), | Presented to Atanu Das (Archery), |
| Manika Batra (Table Tennis), | Chirag Chandrasekhar Shetty (Badminton), |
| Mariyappan Thangavelu (Para-Athletics), | Dutee Chand (Athletics), |
| Rani Rampal (Hockey) and | Ishant Sharma (Cricket), |
| Vinesh Phogat (Wrestling). | Deepti Sharma (Cricket), |
| | Divya Kakran (Wrestling). |
| | |
| **Dronacharya Award (Life-Time Category) 2020** | **Dhyan Chand Award 2020** |
| Presented to Naresh Kumar (Tennis), | Presented to Kuldip Singh Bhullar (Athletics), |
| Romesh Pathania (Hockey), | Lakha Singh (Boxing), |
| Dharmendra Tiwary (Archery), | Trupti Murgunde (Badminton), |
| Om Parkash Dahiya (Wrestling). | N Usha(Boxing), |
| | Manpreet Singh (Kabaddi), |
| | Nandan Bal (Tennis). |

## ISSF பிரசிடென்ட்ஸ் கோப்பை



- ISSF பிரசிடென்ட்ஸ் கோப்பைப் போட்டியின் தொடக்கப் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டெல் கலப்பு அணிப் பிரிவில் இந்தியாவின் மகளிர் பிஸ்டல் நட்சத்திர வீராங்கனை மனு பாக்கர் மற்றும் ஈரானிய ஒலிம்பிக் சாம்பியன் ஜாவத் பௌரௌகி ஆகியோர் தங்கம் வென்றனர் (ISSF – International Shooting Sport Federation – சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் போட்டிக் கூட்டமைப்பு).
- இந்த இந்திய – ஈரானிய ஜோடியானது பிரஞ்சு – ரஷ்ய ஜோடியான மதில்டே லாமோல் மற்றும் ஆர்டெம் செர்னோசோவ் ஆகியோரை வீழ்த்தி தங்கம் வென்றது.
- 7 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அணியானது ISSF பிரசிடென்ட்ஸ் கோப்பைப் போட்டியில் பங்கேற்கிறது.
- இந்தப் போட்டியானது போலந்து நாட்டிலுள்ள வ்ரோக்லோ எனுமிடத்தில் நடத்தப் பட்டது.

## ரஷீத் கான்

- ஆப்கானிஸ்தானின் ஒரு சுழற்பந்து வீச்சாளரான ரஷீத் கான் T20 போட்டியில் 400 விக்கெட்டுகளை வீழ்த்திய இளம் வயது பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்று உள்ளார்.
- இவர் நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒரு போட்டியில் இந்தச் சாதனையை நிகழ்த்தி உள்ளார்.
- T20 கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணியின் மார்டின் கப்தில் என்பவர் தான் ரஷீத் வீழ்த்திய 400வது விக்கெட் ஆகும்.
- மேற்கிந்தியத் தீவுகளின் டுவைன் பிராவோ (553) மற்றும் சுனில் நரைன் (425), தென் ஆப்பிரிக்காவின் இப்ராஹிம் தாஹீர் (420) ஆகியோரையடுத்து 400 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்களின் வரிசையில் இணையும் 4வது வீரர் இவராவார்.



## 14 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் குத்துச்சண்டை சாம்பியன்சிப்

- 13 வயதான தஜாமுல் இஸ்லாம் என்பவர் உலகக் குத்துச் சண்டைப் போட்டியில் இந்தியாவினைப் பிரதிநிதித்துவப் படுத்திய முதல் காஷ்மீரியப் பெண்மணி ஆவார்.
- இவர் உலகக் குத்துச் சண்டைப் போட்டியில் 14 வயதிற்குட்டோருக்கானப் பிரிவில் விளையாடி தங்கம் வென்றுள்ளார்.
- இந்தப் போட்டியானது எகிப்திலுள்ள கெய்ரோ எனுமிடத்தில் நடத்தப் பட்டது.
- இஸ்லாம் இறுதிப் போட்டியில் அர்ஜென்டினாவின் லாலினாவைத் தோற்கடித்தார்.
- இவர் வடக்கு காஷ்மீரின் பந்திப்போரா மாவட்டத்திலுள்ள தர்க்போரா எனப்படும் ஒரு தொலைதூரக் கிராமத்தில் பிறந்தார்.
- தஜாமுல் பேட்டி பச்சாவ் பேட்டி பதாவ் என்ற திட்டத்தின் ஒரு விளம்பரத் தூதரும் ஆவார்.




## 3000 டி20 ரன்கள் - ரோஹித் சர்மா

- இந்திய வீரர் ரோஹித் சர்மா டி20 கிரிக்கெட் போட்டியில் 3000 ரன்களை கடந்துள்ளார்.
- இந்தச் சாதனையை நிகழ்த்திய உலகின் மூன்றாவது கிரிக்கெட் வீரர் என்ற ஒரு பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- நமீபியாவுக்கு எதிரான ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பைப் போட்டியில் ரோஹித் 3000 ரன்களை எட்டினார்.
- இதில் 3227 ரன்களுடன் விராட் கோலி முதலிடத்தில் உள்ளார்.
- அவரைத் தொடர்ந்து நியூசிலாந்தின் மார்ட்டின் கப்டில் மற்றும் இந்தியாவின் ரோஹித் சர்மா இதில் உள்ளனர்.



## ISSF President's cup

- இந்தப் போட்டியின் முதல் பதிப்பில் இந்தியா 5 பதக்கங்களை வென்றுள்ளது.
- போலந்தில் உள்ள ரோக்லா என்ற இடத்தில் இது நடத்தப் பட்டது.
- இதில் இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் அடங்கும்.
- இதில் இந்தியாவின் மனு பாக்கர் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றார்.




## T20 உலகக் கோப்பை வெற்றிப்பட்டம்

- ஆஸ்திரேலிய அணியானது தனது முதலாவது T20 உலகக் கோப்பைப் பட்டத்தை வென்றது.
- இந்த அணி இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.
- ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் மார்ஷ் (Mitchell Marsh) போட்டியின் ஆட்ட நாயகனாகவும் டேவிட் வார்னர் தொடர் நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.



## VVS லட்சுமணன்

- தேசிய கிரிக்கெட் அகாடமியின் (NCA) அடுத்தத் தலைவராக இந்திய அணியின் முன்னாள் மட்டைப் பந்து வீரர் VVS லக்ஷ்மன் பதவியேற்கவுள்ளார்.
- லக்ஷ்மண் தனது முன்னாள் சக வீரரான ராகுல் டிராவிட்டினையடுத்து இதற்குப் பொறுப்பேற்க உள்ளார்.

- ரவி சாஸ்திரியின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ராகுல் டிராவிட் சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.



## SAI நிறுவனம்சார் விருதுகள்

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் முதலாவது SAI நிறுவனம்சார் விருதுகளை புதுடெல்லியில் வழங்கினார்.
- இந்த விருதானது 246 விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப் பட்டது.
- தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக சிறந்த விருது மற்றும் சிறப்பு விருது ஆகிய பிரிவுகளில் மொத்தம் 162 விளையாட்டு வீரர்கள் மற்றும் 84 பயிற்சியாளர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.




## ICC ஆடவர் கிரிக்கெட் குழுவின் தலைவர்

- BCCI அமைப்பின் தலைவர் சவுரவ் கங்குலி ICC ஆடவர் கிரிக்கெட் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2012 ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற அனில் கும்ப்ளேவினையடுத்து கங்குலி நியமிக்கப் பட்டுள்ளார்.

- கும்ப்ளே அதிகபட்சமாக மூன்று தனித்தனி ரீதியிலான மூன்றாண்டு கால பதவிக் காலத்தினை வகித்ததைத் தொடர்ந்து அந்தப் பதவியில் இருந்து விலகினார்.



## கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் நாடுகளின் பட்டியலை ICC அறிவித்துள்ளது

- சர்வதேச கிரிக்கெட் குழுவானது 2024 ஆம் ஆண்டு முதல் 2031 வரை ICC ஆடவர் வெள்ளைப் பந்துப் பிரிவுப் போட்டிகளை நடத்த உள்ள 14 நாடுகளின் பட்டியலை அறிவித்துள்ளது.
- இந்தியா 2029 சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டியினை நடத்த உள்ளதோடு 2026 ICC ஆடவர் இருபது 20 உலகக் கோப்பைப் போட்டியை இலங்கையுடன் இணைந்து நடத்த உள்ளது.
- வங்கதேசத்துடன் இணைந்து இந்தியாவானது 2031 ஆம் ஆண்டின் ICC ஆடவர் 50 ஓவர் உலகக் கோப்பைப் போட்டியையும் நடத்த உள்ளது.



## ஆரிப் கான்

- ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த ஆல்பைன் பனிச்சறுக்கு வீரர் ஆரிப் கான் 2022 ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.
- 2022 ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெற்ற ஒரே இந்தியப் பனிச்சறுக்கு பந்தய வீரர் ஆரிப் கான் ஆவார்.
- இது சீனாவில் நடைபெற உள்ள முதல் குளிர்கால ஒலிம்பிக் போட்டி என்பதோடு 2008 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு அங்கு நடைபெற உள்ள ஒரு இரண்டாவது ஒலிம்பிக் போட்டி ஆகும்.
- முன்பு கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய அதே நகரத்தில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.



## ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்பின் 22வது பதிப்பு 2021




- இந்திய அணி ஒரு தங்கம், நான்கு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.
- வங்கதேசத்தில் உள்ள டாக்காவில் இது நடைபெற்றது.

- பதக்கப் பட்டியலில் தென் கொரியாவிற்கு அடுத்த இடத்தில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இதில் தென் கொரியா, இந்தியா, கஜகஸ்தான், ஈரான் மற்றும் வங்கதேசம் ஆகிய ஐந்து நாடுகள் பங்கேற்றன.
- ஆந்திராவின் ஜோதி சுரேகா தனிநபர் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

## சையத் முஷ்டாக் அலி கோப்பை

- கிரிக்கெட் போட்டியில், தமிழ்நாடு அணி சையத் முஷ்டாக் அலி கோப்பையை வென்று உள்ளது.
- இறுதிப் போட்டியில் 152 ரன்களைக் குவித்து கர்நாடக அணியை வீழ்த்தி தமிழக அணி வெற்றி பெற்றது.
- பேட்ஸ்மேன் M. சாருக்கான் கடைசிப் பந்தில் அதிரடியாக சிக்ஸர் அடித்து தமிழ்நாடு அணி T-20 போட்டியை வெல்ல வழி வகுத்தார்.
- இந்தப் போட்டியானது டெல்லியின் அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்றது.
- தமிழ்நாடு அணி சையத் முஷ்டாக் அலி போட்டியில் கோப்பையினை வெல்வது இது 3வது முறையாகும்.

## பாட் கம்மின்ஸ்



- ஆஸ்திரேலியாவின் 47வது டெஸ்ட் போட்டி அணித் தலைவராக பாட் கம்மின்ஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.
- ஸ்டீவ் ஸ்மித் அந்த அணியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- டிம் பெய்னேவையடுத்து பாட் கம்மின்ஸ் அணித் தலைவராக பொறுப்பேற்கிறார்.
- 1956 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆஸ்திரேலிய ஆடவர் டெஸ்ட் போட்டி அணியின் முழு நேரத் தலைமைப் பொறுப்பை ஏற்கும் முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற ஒரு பெருமையை கம்மின்ஸ் பெற்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## தேசிய ஆயுர்வேத தினம் – 02 நவம்பர்

- இத்தினமானது ஆயுஷ் அமைச்சகத்தினால் நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- ஆயுர்வேதமானது இந்தியாவின் சுகாதாரநல அமைப்பின் ஒருங்கிணைந்த அம்சம் ஆகும்.
- இது உலக சுகாதார அமைப்பினால் பாரம்பரிய மருத்துவ முறை என அங்கீகரிக்கப் பட்டது.
- மத்திய ஆயுஷ் அமைச்சகமானது 2016 ஆம் ஆண்டில் தன்வந்திரி ஜெயந்தியினை (தந்தேராஸ் எனவும் அழைக்கப் படுகிறது) ஆயுர்வேத தினமாக அனுசரிக்கத் தொடங்கியது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Ayurveda for poshana (Nutrition)'' என்பதாகும்.




## உலக சுனாமி விழிப்புணர்வு தினம் – 05 நவம்பர்

- சுனாமியின் ஆபத்துகள் தொடர்பான விடயங்கள் குறித்து உலக மக்களிடையே விழிப்புணர்வைப் பரப்புவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டில் இத்தினமானது "செண்டாய் செவன் பிரச்சாரம்" (f) என்ற இலக்கை ஊக்குவிக்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் தற்போதைய கட்டமைப்பைச் செயல்படுத்துவதற்கான உலக நாடுகளின் தேசிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்குப் போதுமான மற்றும் நிலையான ஆதரவை வழங்குவதன் மூலம் வளர்ந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச அளவிலான ஒத்துழைப்பைக் கணிசமான முறையில் மேம்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பள்ளிகளில் இணைய மிரட்டல் உள்ளிட்ட மிரட்டல்கள் மற்றும் வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினம் – 04 நவம்பர்

- இந்த சர்வதேச தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தின் முதல் வியாழன் அன்று யுனெஸ்கோ நிறுவனத்தினால் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டில் இத்தினமானது நவம்பர் 4 ஆம் தேதி அன்று வருகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "குழந்தைகள் மற்றும் இளைஞர்களை குறி வைக்கும் இணைய மிரட்டல் மற்றும் இணைய வன்முறையின் பிற வடிவங்களை சமாளித்தல்" என்பதாகும்.
- பள்ளிகளில் வன்முறை மற்றும் இணைய மிரட்டல் ஆகியவை குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான உரிமைகளை மீறுவதாகும் என்பதை இந்த தினம் அங்கீகரிக்கிறது.




## உலக ரோமானிய மொழி தினம் – 05 நவம்பர்

- யுனெஸ்கோ அமைப்பானது 2015 ஆம் ஆண்டில் உலக ரோமானிய மொழி தினத்தை அறிவித்தது.
- இது ரோமானிய மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கும், ரோமானிய மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்குமான தினம் ஆகும்.
- அனைத்துச் சமூகங்களும் பகிர்ந்து கொள்ள ஏதுவாக உள்ள பலத்தின் ஆதாரமாக விளங்கும் அனைத்து மொழிகளின் பன்முகத் தன்மையின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காகவும் வேண்டி இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

## தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் – 07 நவம்பர்

- புற்றுநோய், அதன் அறிகுறிகள் மற்றும் அதற்கான சிகிச்சை குறித்த ஒரு விழிப்புணர்வை பரப்புவதற்காக வேண்டி இந்தியாவில் ஆண்டுதோறும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உலகளவிலான உயிரிழப்புகளுக்கு புற்றுநோய் இரண்டாவது முக்கிய காரணியாக உள்ளது என உலக சுகாதார அமைப்பு (WHO) கூறியுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், உலகளவில் சுமார் 18 மில்லியன் வழக்குகள் பதிவாகியுள்ள வேளையில் அவற்றில் இந்தியாவில் மட்டும் 1.5 மில்லியன் வழக்குகள் பதிவாகி உள்ளன.

- 2018 ஆம் ஆண்டில், இந்தியாவில் சுமார் 0.8 மில்லியன் மக்கள் மற்றும் உலகளவில் 9.5 மில்லியன் மக்கள் என்ற அளவில் புற்றுநோயால் இறந்தவர்களின் எண்ணிக்கைகள் பதிவாகின.
- 2014 ஆம் ஆண்டு நவம்பர் 07 அன்று, முன்னாள் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் நவம்பர் மாதத்தின் ஏழாவது நாள் தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினமாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.

## சிசுப் பாதுகாப்புத் தினம் – 07 நவம்பர்

- குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பரப்புவதையும், குழந்தைகளை சரியான முறையில் கவனித்து அவர்களின் உயிரைப் பாதுகாப்பது குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான சிசுப் பாதுகாப்புத் தினத்தின் கருத்துரு, "குழந்தைகளைப் பாதுகாத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்" என்பதாகும்.

## சர்வதேச கதிரியக்க தினம் – 08 நவம்பர்

- கதிரியக்கவியல் என்பது பாதுகாப்பான நோயாளிக்கான ஒரு பராமரிப்பில் எந்த அளவிற்குப் பங்களிக்கிறது என்பதைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை மேம்படுத்தவும், கதிரியக்க வல்லுநர்கள் மற்றும் கதிரியக்க கருவி இயக்குநர்கள் சுகாதாரத் துறையில் வகிக்கும் முக்கிய பங்கினைப் பற்றிய பொதுப் புரிதலை மேம்படுத்தவும் இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்தத் தினமானது 1895 ஆம் ஆண்டில் வில்ஹெல்ம் ரோன்ட்ஜென் என்பவரால் X-கதிர்கள் கண்டுபிடிக்கப் பட்டதன் ஆண்டு நிறைவையும் குறிக்கிறது.
- உலக கதிரியக்க தினம் ஆனது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

## உலக நகர்ப்புற தினம் – 08 நவம்பர்

- உலக நகர்ப்புற தினமானது “உலக நகரத் திட்டமிடல் தினம்” எனவும் அழைக்கப் படுகிறது.
- வாழ்வதற்கு ஏதுவான சமூகங்களை உருவாக்குவதில் திட்டமிடுதலின் பங்கினை அங்கீகரித்து அதை ஊக்குவிக்கும் வகையில் இத்தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது நகரம் மற்றும் பிராந்திய அளவில் திட்டமிடுபவர்களுக்கான சர்வதேச சங்கத்தினால் அனுசரிக்கப் படுகிறது.

## தமிழ் அகராதி தினம் – 08 நவம்பர்

- இத்தினமானது இத்தாலிய சமயப் பரப்புனரான கான்ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்சி என்பவரின் பிறந்த நாள் நினைவைக் குறிக்கிறது.
- இவர் வீரமாமுனிவர் எனவும் அழைக்கப் படுகிறார்.
- இவர் சதுரகராதி என்ற முதல் தமிழ் அகராதி வெளிவரக் காரணமாக இருந்தவர் ஆவார்.

- முன்னதாக அறிஞர்கள் பயன்பாட்டிலுள்ளச் சொற்களை ஆவணப்படுத்தினர்.
- இந்த ஆவணத் தொகுப்புகள் 'நிகண்டு' என அழைக்கப்பட்டன.




## தேசிய சட்ட சேவைகள் தினம் – 09 நவம்பர்




- இந்தியாவில், இந்தத் தினமானது அனைத்துச் சட்ட சேவைகள் அமைப்புகளாலும் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரச் சட்டம் இயற்றப் பட்டதை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- சட்டச் சேவைகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு விதிகள் பற்றியும் வழக்காடுவோரின் உரிமைகள் குறித்தும் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## உத்தரகாண்ட் உருவான தினம் – 09 நவம்பர்

- இந்த தினமானது 2000 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டதைக் குறிக்கிறது.
- நவம்பர் மாதம் 9 ஆம் தேதியானது 2000 ஆம் ஆண்டில் உத்தராஞ்சல் மாநிலம் உருவாக்கப் பட்ட.தைக் குறிக்கிறது.
- 2007 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தின் பெயர் உத்தரகாண்ட் என மாற்றப்பட்டது.
- இந்த மாநிலம் கடவுள்களின் நிலம் அல்லது "தேவ் பூமி" என்று அழைக்கப்படுகிறது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கைர்சன் நகரானது உத்தரகாண்டின் கோடைக்காலத் தலைநகராக அறிவிக்கப்பட்டது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் குளிர்காலத் தலைநகரம் டேராடூன் ஆகும்.

## சர்வதேச அறிவியல் மற்றும் அமைதி வாரம் - நவம்பர் 09 முதல் 14 வரை

- ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதம் 9 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை, சர்வதேச அறிவியல் மற்றும் அமைதி வாரமானது உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தச் சிறப்பு வாரமானது, மக்கள் தங்கள் சொந்த நாடுகளில் அமைதியை மேம்படுத்துவதற்கும், வளர்ச்சிக்கான சிறந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் வேண்டி ஊக்கமளிக்கிறது.
- 1986 ஆம் ஆண்டு சர்வதேச அமைதி ஆண்டாக அனுசரிக்கப்படுவதன் ஒரு பகுதியாக அறிவியல் மற்றும் அமைதிக்கான சர்வதேச வாரமானது முதன்முதலில் அனுசரிக்கப் பட்டது.

## உலக சுதந்திர தினம் – 09 நவம்பர்

- இரண்டாம் உலகப் போரிற்குப் பிறகு பெர்லின் சுவர் வீழ்த்தப்பட்ட நிகழ்வை நினைவு கூறும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இது கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசத்தின் வீழ்ச்சியோடுச் சேர்த்து மக்களாட்சி & சுதந்திரத்தின் எழுச்சியைக் குறிக்கிறது.

## அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினம் – 10 நவம்பர்

- சமூகத்தில் அறிவியல் வகிக்கும் முக்கியப் பங்கையும், வளர்ந்து வரும் விஞ்ஞானப் பிரச்சனைகள் குறித்த விவாதங்களில் பொதுமக்களை ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைக்க வேண்டி இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு என்பது அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் தினத்தின் 20வது பதிப்பைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டின் அனுசரிப்பானது "காலநிலைக்குத் தயாராக உள்ள சமூகங்களை உருவாக்குதல்" (Building Climate-Ready Communities) என்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

- 2001 ஆம் ஆண்டில் உலக அறிவியல் தினம் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பால் (யுனெஸ்கோ) அறிவிக்கப்பட்டது.
- இது முதல் முறையாக 2002 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

## தேசியக் கல்வி தினம் – 11 நவம்பர்

- இது மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- 2008 ஆம் ஆண்டில் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் இந்த நாள் அறிவிக்கப் பட்டது.
- ஆசாத் அவர்கள் 1947 ஆகஸ்ட் 15 முதல் 1958 பிப்ரவரி 2 வரை சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்தார்.
- இவர் சவுதி அரேபியாவின் மெக்காவில் 1888 ஆம் ஆண்டில் பிறந்தார்.
- இவருக்கு 1992 ஆம் ஆண்டில் (மறைவுக்குப் பின்) பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.




## உலகத் தரநிலை நாள் – 11 நவம்பர்

- லண்டனில் அமைந்துள்ள சார்ட்டர்ட் குவாலிட்டி இன்ஸ்டிடியூட் (CQI) என்ற ஓர் தொழில்நிபுணத்துவ அமைப்பு இந்த நாளை நிறுவியது.
- ஐக்கிய நாடுகள் சபை 1990 ஆம் ஆண்டில் இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.
- இந்த ஆண்டின் கருத்துரு - 'Sustainability: Improving Our Products, People, and Planet' என்பது ஆகும்.

## போர் நிறுத்த நாள் – 11 நவம்பர்

- முதலாம் உலகப் போரில் நேச நாடுகளுக்கும் ஜெர்மனிக்கும் இடையே பிரான்சில் கையெழுத்திடப் பட்ட ஒரு போர் நிறுத்தத்தைக் குறிக்கும் வகையில் இது ஒவ்வோர் ஆண்டும் நினைவு கூறப் படுகிறது.
- முதலாம் உலகப் போரின் மேற்குப் போர்முனையில் போர் நிறுத்தத்திற்காக வேண்டி இது நடந்தேறியது.

- நினைவு தினம் என்றும் அழைக்கப்படும் இது, போரில் எல்லைக் கடமையின் போது தமது உயிரை இழந்த வீரர்களைக் கௌரவிக்கும் வகையில் முதல் உலகப் போரின் முடிவிற்குப் பின் காமன்வெல்த் உறுப்பு நாடுகளில் ஒரு நினைவு நாளாக அனுசரிக்கப் படுகிறது.
- இது 1919 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் துவக்கப் பட்டது.
- இது முதல் உலகப் போரின் முடிவை நினைவுபடுத்துவதாகக் கருதப்படுகிறது.
- நினைவு தினத்தை அனுசரிப்பதற்கான ஒரு பாரம்பரியம் போர் நிறுத்த நாளில் இருந்து உருவானது.




## பொதுச் சேவை ஒளிபரப்பு தினம் – 12 நவம்பர்

- அகில இந்திய வானொலி மையத்திற்கு தேசத் தந்தை மகாத்மா காந்தி வருகை தந்ததன் 50வது ஆண்டு நிறைவினை நினைவு கூறும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 1947 ஆம் ஆண்டில் டெல்லியிலுள்ள அகில இந்திய வானொலி மையத்திற்கு மகாத்மா காந்தி மேற்கொண்ட முதலாவது மற்றும் ஒரே ஒரு வருகை இதுவாகும்.
- இந்தியப் பிரிவினைக்குப் பிறகு ஹரியானாவிலுள்ள குருசேத்திரத்தில் தற்காலிகமாக குடியேறிய புலம்பெயர்ந்த மக்களிடம் (பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகள்) மகாத்மா உரையாற்றினார்.
- 2001 ஆம் ஆண்டில், இத்தினமானது பொதுச் சேவை ஒளிபரப்பு தினமாக அனுசரிக்கப் படும் என அலுவல் முறையில் அறிவிக்கப்பட்டது.




## உலக நிம்மோனியா தினம் – 12 நவம்பர்

- இத்தினமானது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டில் 'Stop Pneumonia Initiative' மற்றும் சிறார் நிமோனியாவிற்கு எதிரான ஒரு உலகளாவியக் கூட்டணி ஆகியவற்றால் நிறுவப் பட்டு அனுசரிக்கப்படுகிறது.
- Stop Pneumonia என்ற முன்னெடுப்பானது ஒரு பொது தனியார் கூட்டிணைவான 'Every Breath Counts' என்ற கூட்டணியினால் இயக்கப்படுகிறது.
- நிம்மோனியா என்பது 5 வயதிற்குட்பட்டக் குழந்தைகளைத் தாக்கும் ஒரு கொடிய நோய் ஆகும்.
- இது பொதுவாக வைரஸ் அல்லது பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு கடுமையான சுவாசத் தொற்றாகும்.
- ஒவ்வொரு 39 வினாடிக்கும் ஒரு குழந்தையானது நிம்மோனியாவால் இறப்பதாக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியமானது கூறுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Stop Pneumonia, Every Breath Counts" என்பதாகும்.

## உலக பறவை தினம் – 12 நவம்பர்

- நவம்பர் 12 ஆம் தேதியானது மூத்தப் பறவையியல் நிபுணர் சலீம் அலியின் பிறந்த தினமாகும்.
- இவர் 1896 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் நாளன்று மும்பையில் பிறந்தார்.
- சலீம் அலி இந்தியாவின் பறவை மனிதர் என அறியப்படுகிறார்.
- இவர் சிட்னி தில்லான் ரிப்ளேவுடன் இணைந்து "the Birtds of India and Pakistan" என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இவர் இராஜஸ்தானில் பரத்பூர் பறவைகள் சரணாலயத்தை உருவாக்கியதில் ஒரு

முக்கியக் காரணமாக இருந்தார்.

- இவர் 1947 ஆம் ஆண்டுக்குப் பிறகு மும்பை இயற்கை வரலாற்றுச் சமூகத்தின் ஒரு முக்கியப் பிரமுகரானார்.
- மகாராஷ்டிர மாநிலமானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 05 முதல் 12 ஆம் தேதி வரை "பறவைகள் வாரத்தை" கடைபிடிக்கிறது.
- 1990 ஆம் ஆண்டில் இதே நாளில்தான், டிம் பெர்னர்ஸ் லீ என்பவரின் கருத்துடன் உலகளாவிய வலையமைப்பானது (World Wide Web project) தொடங்கப்பட்டது.
- WWW என்பது பெர்னர்ஸ் லீ அவர்களால் உருவாக்கப்பட்ட முதல் இணைய உலாவியின் பெயராகும்.




## உலக கருணை தினம் – 13 நவம்பர்

- இத்தினமானது 1998 ஆம் ஆண்டில் உலக கருணை இயக்க அமைப்பினால் அறிமுகப் படுத்தப் பட்டது.
- சிங்கப்பூர் நாடானது 2009 ஆம் ஆண்டில் முதன்முறையாக இத்தினத்தினை அனுசரித்தது.

## உலக நீரிழிவு நோய் தினம் – நவம்பர் 14




- நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கவனிப்பதில் செவிலியர்கள் வகிக்கும் முக்கியப் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "2021-23 : நீரிழிவுச் சிகிச்சைகளை அணுகச் செய்தல் – இப்போது இல்லையெனில் எப்போது?" என்பதாகும்.
- இது 1922 ஆம் ஆண்டில் சார்லஸ் ஹெர்பர்ட் என்பவருடன் சேர்ந்து இன்சுலின் என்ற ஹார்மோனைக் கண்டுபிடித்த சர் பிரடெரிக் பாண்டிங் என்பவரின் பிறந்த தினத்தைக் குறிக்கின்றது.
- இந்த ஆண்டு இன்சுலின் ஹார்மோன் கண்டுபிடிக்கப்பட்டதன் 100வது ஆண்டு நிறைவை அனுசரிக்கின்றது.

## குழந்தைகள் தினம் – நவம்பர் 14

- இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் குழந்தைகள் தினமானது 'பால் திவாஸ்' என அறியப்படுகிறது.
- இத்தினமானது குழந்தைகளின் உரிமைகள், நலன் மற்றும் கல்வி குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்துடன் கொண்டாடப்படுகிறது.
- 1964 ஆம் ஆண்டில், நேரு அவர்களுக்கு கௌரவமளிக்கும் விதமாகவும் குழந்தைகள் மீது அவருக்கு இருந்த அன்பை நினைவுபடுத்தும் விதமாகவும் குழந்தைகள் தினமானது நவம்பர் 14 அன்று கடைபிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.
- இந்தியாவில், ஆரம்பத்தில் குழந்தைகள் தினமானது உலகளாவிய குழந்தைகள் தினமான நவம்பர் 20 (1956) அன்று அனுசரிக்கப்பட்டது.



## ஜார்க்கண்ட் ஸ்தாபன தினம் – நவம்பர் 15



- இந்த மாநிலமானது 'வனங்களின் நிலம்' அல்லது 'புதர்களின் நிலம்' எனவும் அழைக்கப் படுகிறது.
- 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று பீகாரின் தென் பகுதியிலிருந்து சோட்டா நாக்பூர் பகுதி பிரிக்கப்பட்டு ஜார்க்கண்ட் என்ற மற்றொரு மாநிலம் உருவாக்கப்பட்டது.
- இதன் மூலம் ஜார்க்கண்ட் இந்தியாவின் 28வது மாநிலமாகும்.

## சர்வதேச சகிப்புத்தன்மை தினம் – நவம்பர் 16

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் இத்தினத்தினை அனுசரித்து வருகிறது.
- 1994 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 125வது பிறந்த நாளினை அனுசரித்த யுனெஸ்கோ அமைப்பானது அதன் மூலம் நவம்பர் 16 ஆம் தேதியினை சர்வதேச சகிப்புத் தன்மை தினமாக ஐ.நா அறிவிப்பதற்கு வழிவகுத்தது.
- இத்தினமானது மகாத்மாவினுடைய கொள்கைகளான அமைதி, அகிம்சை, சமத்துவம் ஆகியவற்றிற்கு கௌரவம் அளிக்கிறது.



## தேசியப் பத்திரிகை தினம் - நவம்பர் 16




- இந்தியாவின் சுதந்திரமான மற்றும் பொறுப்புமிக்க பத்திரிகைகளைக் கொண்டாடச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாளில்தான், பத்திரிகைகள் தனது உயர்தரத்தைப் பேணுவதையும், எந்த விதமான செல்வாக்கு அல்லது அச்சுறுத்தல்களுக்கும் கட்டுப்படாமல் இருப்பதையும் உறுதி செய்யும் வகையிலான ஒரு தார்மீகக் கண்காணிப்பாளராக இந்தியப் பத்திரிகை மன்றமானது செயல்படத் தொடங்கியது.

## தணிக்கைத் தினம் - நவம்பர் 16

- இந்த ஆண்டு முதலாவது தணிக்கைத் தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் பதவியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உருவாக்கத்தினைக் குறிக்கும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- தற்போது, ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் முன்னாள் துணை நிலை ஆளுநரான ஜி.சி.முர்மு இந்தியாவின் இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ஆகப் பணியாற்றி வருகிறார்.
- இவர் இந்தியாவின் 14வது இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ஆவார்.
- அவரது பதவிக்காலம் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கியது.
- இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் என்பது இந்தியாவின் ஒரு அரசியலமைப்பு ஆணையமாகும்.
- இது இந்திய அரசியலமைப்பின் 148வது விதியின்படி நிறுவப்பட்டது.
- இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கைகள் பாராளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றங்களில் தாக்கல் செய்யப்படுகின்றன.
- அவை பொதுக் கணக்குக் குழுக்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான குழுக்கள் ஆகியவற்றால் விவாதிக்கப்படுகின்றன.
- பொதுக் கணக்குக் குழுக்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான குழுக்கள் என்பவை பாராளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் உள்ள சிறப்புக் குழுக்கள் ஆகும்.




## உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினம் - நவம்பர் 17

- ஒவ்வோர் ஆண்டின் நவம்பர் மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அன்று இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- உலகம் முழுவதிலும் நாள்பட்ட தடுப்பு நுரையீரல் அடைப்பு நோய் பற்றியும் நாள்பட்ட தடுப்பு நுரையீரல் அடைப்பு நோய்க்கான சிகிச்சையினை மேம்படுத்துவது பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டின் உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினமானது நவம்பர் 17 அன்று வருகிறது.
- 2021 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, 'Healthy Lungs – Never More Important' என்பதாகும்.




## தேசிய வலிப்பு நோய் தினம் - நவம்பர் 17

- இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 17 ஆம் தேதியானது வலிப்பு நோய் அறக் கட்டளையால் தேசிய வலிப்பு நோய் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இது வலிப்பு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு தினமாகும்.
- கால்-கைகளில் வலிப்பு ஏற்படுவது என்பது மூளையில் ஏற்படும் ஒரு நாள்பட்ட கோளாறு ஆகும்.

- நவம்பர் மாதம் ஆனது 'தேசிய வலிப்பு நோய் விழிப்புணர்வு மாதமாக' அனுசரிக்கப்படுகிறது.
- மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள இந்திய வலிப்பு நோய் அறக்கட்டளையானது 2009 ஆம் ஆண்டில் டாக்டர் நிர்மல் சூர்யா என்பவரால் நிறுவப்பட்டது.

## இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18

- இந்தியாவில் தேசிய இயற்கை மருத்துவ தினமானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 18 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது இயற்கை மருத்துவம் எனப்படும் செயற்கை மருந்து இல்லாத மருத்துவ முறையின் மூலம் நேர்மறையான முறையில் மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தச் செய்வதற்கான ஒரு தினமாகும்.
- இத்தினத்தினை ஆயுஷ் அமைச்சகமானது (ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) அறிவித்தது.
- இந்த வருடத்தின் இந்த தினத்திற்கான கருத்துரு 'ரோக் முக்த் பாரத்' என்பதாகும்.




## உலகத் தத்துவ தினம் 2021 - நவம்பர் 18

- ஒவ்வோர் ஆண்டின் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழன் அன்றும் உலகத் தத்துவ தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில், இந்த தினமானது நவம்பர் 18 அன்று வருகிறது.
- 2021 ஆம் ஆண்டின் உலகத் தத்துவ தினமானது, சமூகம், கலாச்சாரம், புவியியல் மற்றும் அரசியல் சூழல்களுடன் மனிதர்கள் மேற்கொள்ளும் வெவ்வேறு தொடர்புகளைப் பற்றிய விவாதத்தினை முன் வைக்கிறது.
- உலகத் தத்துவ தினமானது 2002 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்த வருடத்தின் உலகத் தத்துவ தினத்திற்கான கருத்துரு "different interactions of human beings with their social, cultural, geographical and political environment, with the underlying objective of better understanding the contribution of philosophy in our contemporary societies and the challenges they

face" என்பதாகும்.

## தேசியப் பச்சிளம் குழந்தைகள் வாரம் 2021 - நவம்பர் 15 முதல் 21 வரை

- இந்தியாவில், ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 15 முதல் 21 வரை தேசியப் பச்சிளம் குழந்தைகள் வாரமானது கடைப்பிடிக்கப்படுகிறது.
- இந்த வாரத்தின் முக்கிய நோக்கமானது பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தினைச் சுகாதாரத் துறையின் முக்கியத்துவம் வாய்ந்த முன்னுரிமைப் பகுதியாக வலியுறுத்துவதன் முக்கியத்துவத்தையும், பச்சிளம் குழந்தைகளுக்கான சுகாதார நிலைகளை மேம்படுத்துவதன் மூலம் குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைப்பதையும் கொண்டதாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான தேசியப் பச்சிளம் குழந்தைகள் வாரத்தின் கருத்துரு, 'பாதுகாப்பு, தரம் மற்றும் வளர்ப்புப் பராமரிப்பு ஆகியவை ஒவ்வொரு பச்சிளம் குழந்தையின் பிறப்பு உரிமை' என்பதாகும்.




## தேசியப் பத்திரிகையியல் தினம் – நவம்பர் 16

- இந்தியப் பத்திரிகைச் சபையினைக் கௌரவிக்கும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 55 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில்தான் இந்தியப் பத்திரிகைச் சபையானது நிறுவப் பட்டது.
- இந்தியப் பத்திரிகைச் சபை ஆனது, நாட்டில் செய்தி வெளியீட்டின் தரத்தைக் கண்காணிப்பது மட்டுமின்றி, பத்திரிகைச் சுதந்திரமானது நாட்டில் நிலைத்திருக்கச் செய்வதையும், இனிமேல் அது செழித்து வளர்வதை உறுதி செய்வதற்குமான ஒரு கருவியாக உருவாக்கப் பட்டது.

## சர்வதேச மாணவர் தினம் – நவம்பர் 17

- இத்தினமானது உலக மாணவர் சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டதாகும்.
- 1939 ஆம் ஆண்டில் ஹிட்லரின் நாஜிப் படைகள் அனைத்துப் பல்கலைக்கழகங்களைத் தாக்கி, ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கைது செய்து கொன்றதைக் கண்டிக்கச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## உலகக் குறைப்பிரசவ தினம் - நவம்பர் 17




- உலகளவில், குறைப்பிரசவத்தின் சவால்கள் மற்றும் சுமைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ஒன்பது முழு அளவிலான குழந்தைகளுக்கான காலுறைகளுள் ஒன்றாக வடிவமைக்கப்பட்ட ஒரு ஜோடி ஊதா நிறக் காலுறைகள் 10 குழந்தைகளில் 1 குழந்தை குறைப்பிரசவத்தில் பிறக்கிறது என்பதைக் குறிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டுக்கான உலகக் குறைப்பிரசவ தினத்திற்கான உலகளாவிய கருத்துரு 'Zero Separation. Act now! Keep parents and babies born too soon together' என்பதாகும்.

## சர்வதேச இஸ்லாமியக் கலை தினம் – நவம்பர் 18

- இஸ்லாமியத்தின் கலை பற்றியும், கலாச்சாரம் மற்றும் நாகரிகத்திற்கு அது வழங்கி வரும் பங்களிப்பைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- சவுதி கலாச்சார அமைச்சகமானது இந்த தினத்தைக் குறிக்கும் வகையில் ரியாத் நகரில் உள்ள இஸ்லாமிய அருங்காட்சியகத்தில் 2 நாட்கள் அளவிலான முதலாவது இஸ்லாமியக் கலை நிகழ்ச்சிகளை நடத்தியது.

## பெண்கள் தொழில்முனைவோர் தினம் – நவம்பர் 19



- இத்தினமானது பெண்கள் தொழில்முனைவோர் தின அமைப்பு (WEDO - Women's Entrepreneurship Day Organisation) என்ற அமைப்பின் சிந்தனையில் உருவானதாகும்.
- இத்தினமானது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இது பெட் பயனிர், அனிமல் ஃபேர் மீடியா, எல்லிஸ் ஐலண்ட் மெடல் ஆஃப் ஹானர் என்ற விருதைப் பெற்ற வெண்டி டயமண்ட் என்பவரால் துவங்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டது.

## உலகக் கழிப்பறை தினம் – நவம்பர் 19

- இத்தினமானது சிங்கப்பூரைச் சேர்ந்த ஜாக் சிம் என்பவரால் தொடங்கப்பட்டது.
- அவர் 2001 ஆம் ஆண்டில் உலகக் கழிப்பறை அமைப்பு என்ற ஓர் அரசு சாரா அமைப்பினை நிறுவினார்.
- இதற்கு "நீடித்த நிலையான சுகாதார கூட்டணி (SuSanA - Sustainable Sanitation Alliance)" அமைப்பினால் ஆதரவு வழங்கப்பட்டது.
- 2010 ஆம் ஆண்டில், "தண்ணீர் மற்றும் சுகாதாரத்திற்கான மனித உரிமையினை (HRWS - Human Right to Water & Sanitation)" ஐக்கிய நாடுகள் அவையானது மனிதர்களின் ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரித்தது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Valuing toilets" என்பதாகும்.
- 6வது நிலையான வளர்ச்சி இலக்கானது அனைவருக்கும் சுகாதாரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் – நவம்பர் 19

- இத்தினமானது இரும்புப் பெண்மணியும் முன்னாள் இந்தியப் பிரதமருமான இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- இவர் 1917 ஆம் ஆண்டில் நவம்பர் 19 ஆம் நாளில் பிறந்தார்.
- இவர் நாட்டின் முதல் மற்றும் ஒரே பெண் பிரதமர் ஆவார்.

## சர்வதேச ஆண்கள் தினம் – நவம்பர் 19

- சர்வதேச ஆண்கள் தினமானது ஐக்கிய நாடுகள் சபையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் படாத ஒரு தினமாகும்.
- இது டிரினிடாட் டொபாகோவில் உள்ள மேற்கிந்தியத் தீவுகள் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய வரலாற்றுப் பேராசிரியரான டாக்டர். ஜெரோம் டீலக் சிங் என்பவரால் 1999 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- "ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சிறப்பான தொடர்பு" என்பது இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு ஆகும்.

## ஆப்பிரிக்கத் தொழில்மயமாக்கல் தினம் - நவம்பர் 20




- ❖ ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, 1989 ஆம் ஆண்டில், நவம்பர் 20 ஆம் தேதியினை "ஆப்பிரிக்கத் தொழில்மயமாக்கல் தினமாக" அறிவித்தது.
- ❖ இது ஆப்பிரிக்காவிற்கான இரண்டாவது தொழில்துறை மேம்பாட்டு தசாப்தத்தின் (1991-2000) கட்டமைப்பிற்குள் அறிவிக்கப்பட்டது.
- ❖ 2021 ஆம் ஆண்டிற்கான ஆப்பிரிக்கத் தொழில்மயமாக்கல் தினத்திற்கான மாநாட்டின் கருத்துருவானது, ஆப்பிரிக்காவின் கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிந்தையக் கால கட்டத்தின் மேம்பாட்டிற்கு நிதியளித்தல் என்பதாகும்.

## உலக குழந்தைகள் தினம் - நவம்பர் 20

- ❖ இந்தத் தினமானது முதன்முதலில் 1954 ஆம் ஆண்டு டிசம்பர் 14 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அனுசரிக்கப்பட்டது.
- ❖ பின்னர் 1959 ஆம் ஆண்டில், இதே நாளில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் குழந்தைகளின் உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட நாளை நினைவு கூறும் வகையில் இந்தத் தினத்தை அறிவிக்கத் திட்டமிட்டது.
- ❖ 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான ஒரு உடன்படிக்கையினையும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக் கொண்டது.
- ❖ 1925 ஆம் ஆண்டில் ஜெனீவா நகரில் நடைபெற்ற உலக குழந்தைகள் நல மாநாட்டின் போது சர்வதேச குழந்தைகள் தினமானது முதன்முதலில் அறிவிக்கப்பட்டது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு 'ஒவ்வொரு குழந்தைகளுக்குமான சிறந்த எதிர்காலம்' என்பதாகும்.




## உலகத் தொலைக்காட்சி தினம் - நவம்பர் 21

- ❖ வானொலிக்கு அடுத்தபடியாக, பொழுதுபோக்கிற்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் இரண்டாவது ஆதாரமாக தொலைக்காட்சி விளங்கி வருகிறது.
- ❖ 1996 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது நவம்பர் 21 ஆம் தேதியினை உலகத் தொலைக்காட்சி தினமாக அறிவித்தது.
- ❖ 1996 ஆம் ஆண்டில் நவம்பர் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, முதல் உலகத் தொலைக்காட்சி மன்றத்தை நடத்தியது.
- ❖ 1924 ஆம் ஆண்டில், ஐக்கிய இராஜ்ஜியத்தினைச் சேர்ந்த ஜான் லோகி பெயர்ட் (John Logie Baird) என்பவரால் தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டது.

## சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலக நினைவு தினம் - நவம்பர் 21

- ❖ இத்தினமானது 1993 ஆம் ஆண்டில் ரோட் பீஸ் எனப்படும் சாலை விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கான ஒரு தொண்டு நிறுவனத்தினால் தொடங்கப்பட்டது.
- ❖ 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இத்தினத்தை ஏற்றுக் கொண்டு உள்ளது.
- ❖ மற்ற நாடுகளை விட, இந்தியாவில் தான் சாலை விபத்துகளால் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.
- ❖ தமிழகத்தில் தோழன் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று, போக்குவரத்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் போன்ற பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு 'நினைவில் கொள்ளுங்கள். ஆதரவு அளியுங்கள். செயல்படுங்கள்' என்பதாகும்.




## உலக மீன்வள தினம் - நவம்பர் 21

- இத்தினமானது ஆரோக்கியமான மற்றும் நீடித்த கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளின் முக்கியத்துவத்தினையும், உலகில் மீன்வளத்தின் நிலையான இருப்புகளை உறுதி செய்வதினையும் எடுத்துரைக்கிறது.
- 2021 ஆம் ஆண்டில் ஐந்தாவது உலக மீன்பிடி தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2015 ஆம் ஆண்டில் இதே நாளில் தான், புதுதில்லி நகரில் சர்வதேச மீனவர் அமைப்பின் பிரம்மாண்ட திறப்பு விழா நடைபெற்றது.



## 552வது குருநானக் ஜெயந்தி - நவம்பர் 19




- சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக் தேவ் ஜி அவர்களின் பிறந்த நாளானது ஒவ்வோர் ஆண்டும் குருநானக் ஜெயந்தி என்று அனுசரிக்கப்படுகிறது.
- இது பிரகாஷ் உத்சவ் அல்லது குரு புரப் என்றும் அழைக்கப்படுகிறது.
- இவர் பத்து சீக்கிய மதக் குருக்களில் முதன்மையானவர் ( முதல் குரு) ஆவார்.
- இவர் தற்போதைய பாகிஸ்தானின் நான்கானா சாஹிப்பில் அமைந்துள்ள தால்வண்டி என்ற கிராமத்தில் 1469 ஆம் ஆண்டில் பிறந்தார்.

## உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரம் – நவம்பர் 18 முதல் நவம்பர் 24 வரை

- உலகளவில், நுண்ணுயிர் எதிர்ப்பு குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக இந்த வாரமானது அனுசரிக்கப் படுகிறது.
- மருந்துகளுக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட தொற்றுகள் மேலும் புதிதாக உருவாகுதல் மற்றும் பரவுதலைத் தடுப்பதில் பொதுமக்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் கையாளும் சிறந்த நடைமுறைகளையும் இது ஊக்குவிக்கச் செய்கிறது.
- இத்தினத்தின் இந்த ஆண்டிற்கான கருத்துரு, "Spread Awarness, Stop Resistance" (விழிப்புணர்வை ஏற்படுத்தி எதிர்ப்புத் திறனைத் தடுத்தல்) என்பதாகும்.



## உலகப் பாரம்பரிய வாரம் – நவம்பர் 19 முதல் 25 வரை

- கலாச்சாரம் மற்றும் மரபுகளின் முக்கியத்துவத்தினையும் அவற்றைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதே இந்த ஒரு வார காலக் கொண்டாட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தியாவில் சுமார் 3691 நினைவுச் சின்னங்கள் இந்தியத் தொல்லியல் ஆய்வு அமைப்பினால் பாதுகாக்கப் படுகின்றன.
- தற்போது, இந்தியத் தொல்லியல் ஆய்வு அமைப்பினால் பாதுகாக்கப்படும் அதிக எண்ணிக்கையிலான நினைவுச் சின்னங்கள் (745) உத்தரப் பிரதேசத்தில் உள்ளன.
- இந்தியா முழுவதும் உள்ள 32 கலாச்சாரம், 7 இயற்கை மற்றும் 1 கலப்புத் தளம் உள்ளிட்ட 40 பாரம்பரியத் தளங்கள் தற்போது UNESCO உலகப் பாரம்பரியத் தளங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் தற்போது மகாராஷ்டிரா அதிக எண்ணிக்கையாக 5 யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்களைக் கொண்டு உள்ளது.

## பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் – நவம்பர் 25

- உலகெங்கிலும் உள்ள பெண்கள் எவ்வாறு பல்வேறு விதமான வன்முறைகளுக்கு ஆளாகிறார்கள் என்பது பற்றியும் பெரும்பாலும் மறைக்கப்படும் இந்தப் பிரச்சினையின் உண்மைத் தன்மை பற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Orange the World: End Violence against Women Now!"." என்பதாகும்.

## உலக ஆலிவ் மர தினம் – நவம்பர் 26




- இத்தினமானது 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டின் 40வது கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.
- ஆலிவ் மரத்தின் பாதுகாப்பையும் அது உள்ளடக்கியுள்ள பல்வேறு மதிப்புகளையும் ஊக்குவிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த தினம் மனித குலத்திற்கு இது வழங்கும் சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த முக்கியத்துவத்தினை மேம்படுத்துவதற்கான ஒரு தினமாகும்.

## தேசிய பால் தினம் – நவம்பர் 26

- இத்தினமானது டாக்டர் வர்கீஷ் குரியன் அவர்களின் பிறந்த நாளின் நினைவாக 2014 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- இவர் 'இந்தியாவின் பால் மனிதர்' எனவும் அழைக்கப்படுகிறார்.
- இவர் உலகளவிலான, மிகப்பெரிய, வேளாண் சார்ந்த ஒரு பால்பொருள் துறை மேம்பாட்டுத் திட்டமான 'ஆபரேஷன் ஃப்ளட்' எனும் ஒரு திட்டத்திற்குத் தலைமை வகித்தார்.




## இந்திய அரசியலமைப்பு தினம் – நவம்பர் 26

- இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டதினை நினைவு கூரும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது அரசியலமைப்பு தினம் (அ) சம்விதான் திவாஸ் என்ற பெயரில் கொண்டாடப் படுகிறது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்த அரசியலமைப்புச் சட்டமானது 1949 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று, டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின் 125 பிறந்த நாளின் முழு ஆண்டு அளவிலான கொண்டாட்டத்தினை முன்னிட்டு நவம்பர் 26 ஆம் தேதியானது இந்திய அரசினால் அரசியலமைப்புத் தினமாக அறிவிக்கப்பட்டது.
- முன்பாக இத்தினமானது சட்ட தினமாக கொண்டாடப்பட்டது.



## தேசிய உடலுறுப்பு தான தினம் – நவம்பர் 27

- இந்தியாவில் தேசிய உடலுறுப்பு தான தினமானது கடந்த 10 ஆண்டுகளாக ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- உயிரிழந்தவர்கள் சுகாதார நலனிற்கும் மனிதகுலத்திற்கும் ஆற்றும் தன்னலமற்றப் பங்களிப்பு பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனை அங்கீகரிப்பதும், மனித நேயத்தின் மீதான நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதுமே இத்தினத்தின் ஒரு நோக்கமாகும்.
- 2021 ஆம் ஆண்டில் 12வது தேசிய உடலுறுப்பு தான தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இது சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சகத்தின் கீழான தேசிய உடலுறுப்பு மற்றும் திசு மாற்ற அமைப்பினால் அனுசரிக்கப்படுகிறது.

## பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம் – நவம்பர் 29

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஐக்கிய நாடுகள் சபையினால் அனுசரிக்கப் படுகிறது.
- 1947 ஆம் ஆண்டு நவம்பர் 29 அன்று பாலஸ்தீனப் பிரிவினை குறித்த தீர்மானத்தினை (181வது தீர்மானம்) ஐக்கிய நாடுகள் ஏற்றுக் கொண்டதன் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.



## இரசாயனப் போரினால் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கான நினைவு தினம் – நவம்பர் 30

- இத்தினமானது 2005 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது ரசாயனப் போரினால் பாதிப்புள்ளானவர்களுக்கு அஞ்சலி செலுத்தச் செய்வதற்காகவும், இரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தல்களை ஒழிப்பதற்காக ரசாயன ஆயுதங்கள் தடை அமைப்பின் உறுதிப்பாட்டினை மீண்டும் உறுதிப்படுத்தச் செய்வதற்காகவும் வேண்டி அனுசரிக்கப் படுகிறது.




## கணினிப் பாதுகாப்பு தினம் – நவம்பர் 30

- இத்தினமானது 1988 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- மக்களிடையே கணினிப் பாதுகாப்பு குறித்தும் எந்தவொரு ஆபத்திலிருந்தும் தமது மின்னணு சாதனங்கள் மற்றும் தரவுகளைப் பாதுகாப்பதற்கான வழிகள் பற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

# இதரச் செய்திகள்

## மகாத்மா காந்தி நாணயம்

- இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர் மகாத்மா காந்தியின் வாழ்க்கை மற்றும் மரபினைக் கொண்டாடுவதற்காக வேண்டி ஒரு நினைவு நாணயத்தை பிரிட்டன் அரசு வெளியிட்டுள்ளது.
- இந்தச் சிறப்பு நாணயமானது தங்கம் மற்றும் வெள்ளிகளில் கிடைக்கிறது.
- இது இந்தியாவின் தேசிய மலரான தாமரையின் படத்தையும், காந்தியின் மிக பிரபலமான மேற்கோள்களில் ஒன்றான "என் வாழ்க்கையே எனது செய்தி" (My life is my message) என்பதையும் கொண்டுள்ளது.



## டாக்டர் சங்கர் ஆச்சார்யாவின் புதிய புத்தகம்




- டாக்டர் சங்கர் ஆச்சார்யா "An Economist at Home and Abroad : A Personal Journey" என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இவர் புகழ்பெற்றப் பொருளாதார வல்லுநரும் இந்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகரும் ஆவார்.
- இந்தப் புத்தகமானது மிகவும் திறமையான & பொருளாதாரக் கொள்கை நிபுணரான டாக்டர் சங்கர் ஆச்சார்யாவின் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை முறையைப் பற்றி கூறுகிறது.

## ஆபரேஷன் எக்ஸ்

- விடுதலைப் போரின் கதையான ஆபரேஷன் எக்ஸ் என்ற ஒரு புத்தகம் வங்காள மொழியில் வெளியிடப்பட்டது.



- ஆபரேஷன் எக்ஸ் இந்தியக் கேப்டன் எம்என்ஆர் சமந்த் மற்றும் பிரபல எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர் சந்தீப் உன்னிதன் ஆகியோரால் இணைந்து எழுதப்பட்டது.
- 1971 ஆம் ஆண்டு விடுதலைப் போரின் போது முக்தி பாஹினி (Mukti Bahini) மற்றும் இந்தியக் கடற்படை இணைந்து மேற்கொண்ட கமாண்டோ நடவடிக்கைகள் எவ்வாறு நடந்தன என்பதை இப்புத்தகம் கூறுகிறது.

## புதியப் புத்தகங்கள்

- காங்கிரஸ் தலைவர் சல்மான் குர்ஷித் "Sunrise Over Ayodhya Nationhood in Our Times" என்ற பெயரில் அயோத்தியா தீர்ப்பு குறித்த ஒரு புத்தகத்தை சமீபத்தில் வெளியிட்டு உள்ளார்.
- "Nehru : The Debates that Defined India" என்ற புத்தகமானது திரிபூர்தாமன் சிங் மற்றும் அதீல் ஹூசைன் ஆகியோரால் இணைந்து எழுதப்பட்டது.
- "Finding A Straight Line Between Twists and Turns an Imperfect, Yet Honest Reflections on the Indian Tax Landscape" என்ற தனது புதிய புத்தகத்தினை அசீம் சாவ்லா வெளியிட்டார்.
- அசீம் சாவ்லா என்பவர் இந்தியாவின் முன்னணி வரி சார்ந்த வழக்குகள் தொடர்பான வழக்கறிஞர்களுள் ஒருவரும் புகழ்பெற்ற சர்வதேச வரி மற்றும் கொள்கை நிபுணரும் ஆவார்.

## பூமியின் முதல் நிலப்பரப்பு




- க்ராட்டன்கள் (cratons) எனப்படும் பூமியின் முதல் கண்டங்கள் கடலில் இருந்து 3.3 பில்லியன் மற்றும் 3.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையக் காலகட்டத்தில் தோன்றியதாக ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.
- இந்தப் புதிய ஆய்வானது சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பெருங் கடல்களில் இருந்து கண்டங்கள் எழுந்தன என்ற பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தை எதிர்த்துக் கேள்வி கேட்டுள்ளது.
- ஜார்க்கண்டில் உள்ள சிங்பூம் பகுதியே முதன்முதலில் தோன்றிய கண்ட நிலப் பரப்பாக இருக்கலாம் என்றும் இந்த ஆய்வானது கண்டறிந்துள்ளது.
- 3.2 பில்லியன் ஆண்டுகளுக்கும் மேல் பழமையான நதிக் கால்வாய்கள், கடல் பரப்புகள் மற்றும் கடற்கரைகள் ஆகியவற்றின் புவியியல் அச்சுகளுடன் கூடிய, சிங்பூமில் உள்ள மணற்கற்கள் காற்றில் வெளிப்பட்ட ஆரம்பகால மேலடுக்கினைக் குறிப்பதாகவும் இந்த

ஆய்வானது கண்டறிந்துள்ளது.

- சிங்பூம் பகுதியின் கண்ட மேலடுக்கினை உருவாக்கும் கிரானைட்டுகள் 3.5 முதல் 3.1 பில்லியன் ஆண்டுகள் பழமையானவை ஆகும்.
- இது மணற்கற்கள் ‘முதல் நிலப்பரப்பு எப்போது உருவானது’ என்றும், கிரானைட் ‘முதல் நிலப்பரப்பு எப்படி உருவானது’ என்றும் நமக்கு கூறுகிறது.

## அபிஜித் பானர்ஜி – புத்தக வெளியீடு




- அபிஜித் பானர்ஜி “Cooking to save your life” என்ற ஒரு புத்தகத்தினை (சமையல் புத்தகம்) எழுதியுள்ளார்.
- இவர் இந்தியாவில் பிறந்த அமெரிக்கப் பொருளாதார நிபுணர் மற்றும் நோபல் பரிசு பெற்றவர் ஆவார்.
- பிரான்சு நாட்டைச் சேர்ந்த செயென் ஆலிவர் என்ற ஓவியர் உருவாக்கிய விளக்கப் படத்துடன் கூடிய இந்தப் புத்தகத்தினை ஜக்கர்நாட் புக்ஸ் பதிப்பகம் வெளியிட்டது.

## சையது அக்பருதீன் – புத்தகம் வெளியீடு



- மூத்த இந்திய வெளியுறவுத் துறை அதிகாரியான சையது அக்பருதீன், “India Vs UK : The Story of an unprecendented Diplomatic Win” என்ற ஒரு புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- 2017 ஆம் ஆண்டில் நடந்த சர்வதேச நீதிமன்றத் தேர்தலில் ஐக்கிய ராஜ்ஜியத்திற்கு எதிராக இந்தியா பெற்ற வெற்றியின் பின்னணி நிகழ்வுகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

## பான் கி-மூனின் சுயசரிதை




- “Resolved : Uniting Nations in a Divided World” என்ற புத்தகமானது ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கி-மூன் அவர்களுடைய சுயசரிதை ஆகும்.
- இது அவர் வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவரது வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியதோடு ஐக்கிய நாடுகள் சபையில் அவரது பதவிக் காலம் குறித்தும் விவரிக்கிறது.
- இவர் ஒரு முறைக்கு 5 ஆண்டு காலம் என்ற ரீதியில் இரண்டு முறையாக (2007-2016) ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக பணியாற்றினார்.
- இந்தப் புத்தகமானது ஹார்பர் காலின்ஸ் இந்தியா என்ற பதிப்பகத்தினால் வெளியிடப் பட்டது.

## உணவு மற்றும் வேளாண் நிலை குறித்த அறிக்கை 2021

- இந்த அறிக்கையானது வேளாண் – உணவு அமைப்புகளின் நெகிழ்திறன் மீது நாடுகள் அளவிலான குறிகாட்டிகளை வழங்குகிறது.
- இந்தக் குறிகாட்டிகள் முதன்மை உற்பத்தியின் உறுதித் தன்மை மற்றும் உணவு இருப்பு, உணவை இயல்பான மற்றும் பொருளாதார ரீதியில் பெறும் வகையிலான நிலை ஆகியவற்றை மதிப்பிடுகின்றன.

- இந்த அறிக்கையானது உணவு வழங்கீட்டு அமைப்புகளின் பாதிப்பு நிலைகள் பற்றியும் கிராமப் புறங்களிலுள்ள குடும்பங்கள் இடர்கள் மற்றும் அபாயங்களை (தாக்கங்கள்) எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பது பற்றியும் பகுப்பாய்வு செய்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★